Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்ட்ரிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, வைகாசி 2-ஆம் நாள். (16-5-59) சனிக்கிழமை இதழ் 15.

# பிரதமர் பண்டாவுக்கும் டக்டர் பெரேராவுக்கும் நட்புறவு பலப்படுகிறது

## பத்து மந்திரிகள் 'சண்டி' செய்வதின் இரகசிய காரணம்

### பிலிப்பும் பெரேராவும் நெருங்குகிருர்கள்

— நமது அரசியல் நிருபர் —

**பிரதமர் பண்டாரநாயக்காவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவுக்கும் புதிய அரசியல் உறவு ஏற்பட்டுவருகின்றது. பார்லிமெண்ட் கூட்டு அரசியலமைப்புக் குழுவுக்கு இருவரும் சேர்ந்து கையொப்பமிட்டுச் சமர்ப்பித்த யோசனைகள் இதற்கு அத்தாட்சியாகும்.**

**இந்தப் புதிய உறவு பத்து "வலதுசாரி" (சோஷலிஸ்ட்) மந்திரிகளுக்கும் பிடிக்கவில்லை. மந்திரிசபை நெருக்கடிக்கு இதுதான் ரகசிய காரணமென்றும், அரசியல்வட்டாரங்களில் கருதப்படுகின்றது.**

மந்திரி பிலிப்பின் போக்கு புதியதல்ல. சென்ற மூன்று வருடகாலமாக எல்லா மந்திரிகளும் இதை வெகுவாக உணர்ந்து பொறுத்தே வந்திருக்கிருர்கள். இதுவரை எவ்வளவோ நெருக்கடிகள் ஏற்பட்டன. மந்திரிசபை ஆரம்பமான தினத்திலிருந்து அதற்கு நித்திய கண்டம்தான். ஆனுலும் மந்திரிசபைக் கூட்டங்களுக்கு வரமாட்டோம் என்று எந்த மந்திரியும் இதுவரை 'ஸ்டிரைக்' செய்ததில்லை.

### மந்திரி பிலிப் விஷயம்

மந்திரி பிலிப் குணவர்த்தன சில வசையான வார்த்தைகளை தமது சகா மந்திரிகள்மீது பொதுக்கூட்டங்களில் பகிரங்கமாகப் பிரயோகிப்பது உண்மையே. இதைச் சில பத்திரிகைகள் மிகைப்படுத்தி "மித்ர பேதம்" செய்ய வெகுவாகப் பயன்படுத்துவதும் பகிரங்க ரகசியம். இதெல்லாம் அந்தப் பத்து மந்திரிகளுக்கும் நன்கு தெரியும். பிலிப்மீதுமட்டும் உண்மையில் அவர்களுக்குக் கோபமிருக்குமாயின், அவர்கள் அதற்காக மந்திரிசபைக் கூட்டத்துக்கு வராமல் சண்டி செய்யத்தேவையில்லை. மந்திரிசபையில் பிலிப் அவதூருகப் பேசினுல், இந்தப் பத்துப்பேரும் சேர்ந்து பதிலுக்குப் பதில் தீட்டலாம். பொதுக்கூட்டங்களில் இவர்களும் வசைபாடலாம்.

இவர்கள் அவ்விதம் செய்யாதுவிட்டு, மந்திரிசபைக் கூட்டங்களுக்கு வராமல் "ஸ்டிரைக்" செய்த காரணம், பிரதம மந்திரிமீது தங்களுக்குள்ள அதிருப்தியைத் தெரிவித்து ஆட்சேபிக்கவேயாகும். மந்திரி பிலிப்பைக் கண்டிக்காமல் விட்டதுடன் நில்லாமல் பிலிப்பின் பக்கம் அதிகமாகச் சாய்ந்து அவர் கொண்டுவரும் மசோதாக்களைப்பிரதமர் அப்படியே ஏற்கவும் செய்கிருர். கூட்டுறவு வங்கி மசோதாவைத் தாமே நிர்வகிக்கப்போவதாக அறிவித்துள்ளதுடன், அவர் போக்கும் பேச்சும் அனேகமாக இடது பக்கம் அதிகமாகச் சாய்வதுபோலவேயுள்ளன.

### காரண மென்ன?

போதாக்குறைக்கு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவுடன் சேர்ந்து, புதிய அரசியல் யோசனைகளை பார்லிமெண்ட் குழுவுக்குப் பிரதமர் சமர்ப்பித்துள்ளார். மற்ற 14 மந்திரிகளும், எம். ஈ. பி. கட்சி அங்கத்தவர்களும் இருக்கையில் அவர்களுடன் சேர்ந்து அறிக்கையைத் தயாரிக்காமல், எதிர்க்கட்சித் தலைவருடன் பிரதமர் சேர்ந்து கையொப்பமிடுவதாயின். அதற்குக் காரணமென்ன?

சிலவாரங்களுக்கு முன்தான் டாக்டர் என். எம்.மை குண்டுக்கூட்டாகத் தூக்கிப் பார்லிமெண்ட் சபையிலிருந்து வெளியேற்றப் பிரதமர் காரணமாக இருந்தார். அப்படியிருக்கையில் அவருடன் சேர்ந்து அவர் புதிய அரசியல் யோசனைகளை சமர்ப்பிப்பதாயின் அதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும்.

### கலவரங்கள் கற்பித்த பாடம்

சென்ற மே மாதக்கலவரங்களுக்குப்பின், பிரதமர் ஒரு நல்ல அரசியல் பாடம் கற்றுக்கொண்டார். தமது சகாக்களில் சிலருடைய போக்கும் அவருக்குப் பிடிக்கவில்லை. சென்ற வாரம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட 'ஸ்ரீ பஸ்'ஸுகளை அவர் திருப்பி அனுப்பும்படி செய்ய வேண்டியதாயிற்று. இந்த மந்திரிசபைமீது பொதுமக்களின் நம்பிக்கை குறைந்துவிட்டதென்றும், தேசிய மந்திரிசபையைஎதிர்க்கட்சித் தலைவருடன் சேர்ந்து அமைப்பதால் தான் நாடு அமைதியாக முன்னேறுமென்றும்பிரதமரும்வெளியில் சொல்லமுடியாவிடினும் உணர்ந்தேயிருக்கவேண்டும்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ரசிக ரஞ்சன சபா இசை விழா நடாத்த யோசனை

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சனசபா ஜூன் மாத முற்பகுதியில் வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோவில் முன்றலில் இசைவிழாவை நடாத்த யோசித்துள்ளது. இதற்காக அக்கோவில் தர்மகர்த்தாக்களிடம் அனுமதி கேட்டபோது அவர்கள், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த இசைக் கலைஞர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும், நிகழ்ச்சி நிரல் மூலம் அது அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டுமெனவுங் கேட்டுள்ளனர்.

## செஞ்சிலுவைச் சங்கம் சஞ்சீவி மலை போன்றது

யாழ்ப்பாணம்.

'சென்ற வருடம் மே மாதம் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தின்போதும் வெள்ளத்தால் நம் நாடு பாதிக்கப்பட்டிருந்த காலத்திலும் மனித வர்க்கத்திற்கே சஞ்சீவி போன்று தோன்றிய செஞ்சிலுவைச் சங்கம் மாபெருஞ் சேவை செய்திருக்கிறதெனக் கூறுதல் மிகையாகாது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆஸ்பத்திரியில் வதியும் நோயாளர்களுக்கும் பத்திரிகைகள், புத்தகங்கள் கொடுத்துதவி வருகின்றது. யாழ்ப்பாணத்திலும் நிரந்தரமாக ஒரு சங்கத்தை நிறுவினுல் நாட்டுக்கு அளப்பரிய உதவிகள் கிடைக்குமெனத் துணிந்து கூறுவேன்' இவ்வாறு வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா செஞ்சிலுவைச் சங்கத்தின் நூற்ருண்டு விழாவின்போது குறிப்பிட்டார். இவ்விழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடை பெற்றது.

சென்ற்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் சார்பிற் பேசிய திரு. சி. டபிள்யூ. டீ. அல்விஸ் இச்சங்கத்தில் ஒவ்வொருவரும் அங்கத்தவராகச் சேர வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

சாதி வேற்றுமையை நாம் களைந்துவிட வேண்டுமேயானுல் ஒருவரை ஒருவர் சகோதரர் போன்று நேசிக்க வேண்டுமென அசைஸ் கமிஷனர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கூறினுர்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

BRIDGESTONE TYRES

ஏகவினியோகஸ்தர்கள்

ஒட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஒட்டோஸ்"

# திருமலை கண்ட மாபெரும் வைபவம்

## தமிழ்ப் பல்கலைக்கழக அத்திவாரக்கல் நாட்டு விழா

### "தமிழினத்தின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்"

—பேராசிரியர் மயில்வாகனம்

திருக்கோணமலை

புனித தலமாகிய திருக்கோணமலையில் நிறுவப்படவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அத்திவாரக்கல் நாட்டு விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மங்கலகரமான சூழ்நிலையில் நடைபெற்றது. இவ் விழாவுக்காகத் திருக்கோணமலைக்கு வந்த தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கப் பிரதிநிதிகளையும் ஏனைய பிரமுகர்களையும் திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தினர் மடத்தடிச் சந்தியில் மாலையிட்டு வரவேற்றுப்பெருந்தெரு கடல் நோக்கு வீதிவழியாக விழாப்பந்தலுக்கு அழைத்துச் சென்றனர். வீதியின் இரு மருங்கும் மகர தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வாயில் தோறும் பூரண கும்பம் வைத்து மக்கள் மகிழ்ச்சியுடன் பிரதிநிதிகளை வரவேற்றனர். மூன்ரும் முச்சந்தியில் அமைக்கப்பட்ட அழகிய பந்தலில் திருக்கோணமலை நகர சபையின் உபதலைவர் டாக்டர் நமசிவாயம் அனைவரையும் மாலையிட்டு வரவேற்ருர்.

### வாழ்க! வெல்க!

இவ்விழாவுக்கு இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் தமிழ் மக்கள் திரண்டு வந்திருந்தனர். ஊர்வலத்தின்போது 'வாழ்க, வெல்க' எனும் கோஷம் வானைப் பிளந்தது. ஊர்வலம் விழாப்பந்தலை வந்தடைந்ததும் நகராண்மைக் கழகத் தலைவர் வழக்கறிஞர் நேமிநாதன் வரவேற்புரை வாசித்தளித்தார். தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் திருமலை மாவட்டத் தலைவர், கப்டன் கனகசிங்கம் இயக்கப் பிரதிநிதிகளை அறிமுகம் செய்துவைத்து விழாவிற்குத் தலைமையும் தாங்கினுர். பலத்த கைதட்டலுக்கிடையே முதலாவதாகப் பேசிய பேராசிரியர் மயில்வாகனம் குறிப்பிட்டதாவது :

### வெற்றிக்கு உறுதி

"நெடுந்தூரத்தையும் கடும் வெயிலையும் கொள்கை வேற்றுமைகளையும் பாராட்டாது பல்வேறு [illegible] பகுதிகளிலிருந்தும் அநேகர் வந்திருப்பது மகிழ்ச்சி தருவதுடன் இவ்வியக்கத்தின் வெற்றிக்கு உறுதியளிப்பதாகவும் இருக்கின்றது. தனது மொழியையும் தன்னினத்தின் தனித்தன்மையையும் பாதுகாப்பது ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழனின் தலையாய கடமையாகும். 1956-ம் ஆண்டும், 1958-ம் ஆண்டும் தமிழ் பேசும் மக்களுக்கு முக்கியமான காலம். 1956-ம் ஆண்டு தமிழினத்திற்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. 58-ம் ஆண்டு தமிழினம் ஞானஸ்நானம் பெற்றது. துப்பாக்கியாலும், கோடரியாலும், கத்தியாலும் பெற்ற இஞ்ஞானஸ்நானத்தை நாம் என்றுமே மறக்கலாகாது. பல்லாண்டுகளாகச் சிங்களருடன் ஒத்துழைத்துப் பல தியாகங்களைப் புரிந்து இலங்கையினது சுதந்திரத்தைப் பெற்ருேம். சுதந்திரம் கிடைத்த பின்னர் தமிழர் இரண்டாம்தரப் பிரஜைகளாகவும், மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர் மூன்ரும்தரப் பிரஜைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். 19-ம் நூற்ருண்டில் அயர்லாந்துக் கத்தோலிக்கரினது மொழி, நிலம், ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கல்வி ஊட்டப்படவில்லை. இத

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

சிறந்த முறையில் "ரைப் பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

திறமான றங்குப் பெட்டிகள், சூட்கேஸ்கள், சப்பாத்து வகைகளுக்கு **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

பட்டு, பருத்தி, புடைவைகள், தையல் வேலைகளுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் - **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


<u>ஆசிரியருக்குக் கடிதம்</u>

# பார்லிமெண்டில் மொழிக் குழப்பம்

கொழும்பு மத்திய தொகுதி மூன்ருவது அங்கத்தவரான தேமிஸ் சாதாரணமாக சிங்களத்தில்தான் பேசுவார். டிராம்சேவையை வருகிறஜூன் மாதம் மூடுவதைப்பற்றியும், அத்தொழிலாளருக்கு வேறு வேலை அளிக்க வேண்டியதைக் குறித்தும் அவரே **ஆங்கிலத்தில்** கேள்வி கேட்டார்.

அதற்கு ஸ்தலஸ்தாபன தற்காலிக அமைச்சர் மெடிவாக்கே **சிங்களத்தில்** பதில் சொல்லுகிருர். பின்னர் கேள்வியும் பதிலும் சிங்களத்தில்தான்.

அதே தேமிஸ் இலங்கை விமானிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதைக் குறித்து ஆங்கிலத்தில் கேட்ட மற்ருேர் கேள்விக்கு கனம் ஹென்றி அபயவிக்ரம ஆங்கிலத்தில் பதில் சொன்னர்.

எப்போது சிங்களத்தில் பேசுவது எப்போது ஆங்கிலத்தில் என்ற நியதி ஒன்றுமில்லை. மந்திரிகளும் தங்கள் இஷ்டப்படி பேசுகிருர்கள்.

மொழிச்சட்டம் நிறைவேறியதும் பிரதம மந்திரி ஒரு விசேஷ கெஜட்டில், மறு உத்தரவுவரை மொழி விஷயமாக அரசாங்க நடை முறை, முன் இருந்தது போலவே தொடர்ந்து நடக்குமென்று உத்தரவு போட்டார்.

சபையிலே சிங்கள, தமிழ் பேச்சுகளை ஆங்கிலத்தில் உடனுக்குடன் மொழி பெயர்க்க ஒழுங்கு செய்துள்ளனர். 'ஹன்ஸார்ட்' என்ற பார்லிமெண்ட் நடப்பு விவர புத்தகத்தைப் படிப்பவர்களுக்கு மூன்று மொழிகளும் தெரிந்திருந்தால்தான் அதைச் சரிவரப் படித்து அறியமுடியும். மூன்று மொழிகளிலும் இதை வெளியிட்டால் நல்லது. ஆனல் ஆங்கிலத்தைப் பொதுமொழியாக, எல்லா மாணவரும் கற்கவேண்டுமென்று இந்த அரசாங்கமும் ஒழுங்கு செய்துள்ளதால், சிங்கள, தமிழ் பேச்சுகளையும், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவற்றின் சுருக்கத்தையாவது 'ஹன்ஸார்ட்'டில் வெளியிட்டால் பலரும் படித்தறிய வசதியாக இருக்கும். இன்றேல் இந்த 'ஹன்ஸார்ட்'டைப் படித்து, பார்லிமெண்ட் நடப்பைப் பொதுமக்களில் பலரும் சரிவர, அறிந்து கொள்ள முடியாதேயாகும்.

டி. ஆர்.

# மலைநாட்டுக் கலைச்செல்வம்

## அதனைப் பாதுகாக்க முயற்சி

### வீடுதோறும் பண்புமிக்க வெளியீடுகள் விளங்கவேண்டும்

மலை நாட்டு மக்களிடையே மறைந்து கிடக்கும் கலையுணர்ச்சியை வளர்க்கவும், மறைந்து வரும் மலைநாட்டுக் கலைகளைப் புத்துயிர் பெறச் செய்யவும் மலை நாட்டுத் தமிழ்ப் பிரமுகர் பலர் சமீபத்தில் வட்டகொடையில் கூடி வழிவகைகள் ஆராய்ந்தனர்.

திருவாளர்கள் எம். ஜெயராம், எஸ். வி. ஆறுமுகம், ந. அ. தியாகராசன், வி. மாரிமுத்து, ஏ. வேலழகன், ஆர். கறுப்பையா, சி. வி. வேலுப்பிள்ளை, கே. கணேஷ், பி. தேவராஜ், எஸ். நடேசன், ஓ. ஏ. இராமையா, எம். எல்லாளன், சிதம்பரநாத பாவலர், பொ. கிருஷ்ணசுவாமி ஆகியோர் இக்கூட்டத்திற் பங்குபற்றினர்.

மலைநாட்டுக் கலைகளையும், கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கென ஓர் கலாச்சாரக் குழுவை ஏற்படுத்துவதென்றும், மலைநாட்டு மக்களின் வாழ்வில் தொடர்பு கொண்ட பலரையும் கூட்டி இம்மாதம் 23-ம் திகதி நாவலப்பிட்டியாவில் கூடி வழிவகைகளை ஆராய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய திரு. ஜெயராம் மலைநாட்டு மக்களிடையே இன்று சினிமாவே கலையையும் பண்பையும் புகுத்தும் சாதனமாக விளங்குகிறதென்றும், இந்த நிலைமாறி மலைநாட்டு மக்கள் தங்கள் கலைகளில் ஆர்வம் காட்ட வேண்டுமெனில் பிரசுரங்கள் வீடுகள்தோறும் நுழைய வேண்டும் எனக்கூறினர்.

திரு. தியாகராசன் பேசும்பொழுது மக்கள் விழிப்படைய வேண்டுமெனில் முதலாவது ஒரு கலைவிழா ஏற்பாடு செய்து, அங்கு மலை நாட்டுத் தமிழனின் கலையின் பெருமையை உணரச் செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டார். எல்லாத் தோட்டங்களிலும் ஒரே சமயத்தில் கலாச்சாரக் குழு செயலாற்றுவதென்பது முடியாத காரியமென்றும், ஆகையால் ஒரு தோட்டத்தை மாதிரியாக எடுத்துக்கொண்டு அங்கு இந்தக் கலைகளைப் புத்துயிர் பெறச் செய்யவேண்டும் என்றும், பின்னர் இதை மாதிரியாக வைத்துக்கொண்டு பிறதோட்டங்களைப் பின்பற்றச் செய்யலாம் எனவும் கூறினர்.

நாவலப் பிட்டியில் நடைபெறப்போகும் அடுத்த கூட்டத்தில் இதை விரிவாக ஆராய்வதென முடிவுசெய்யப்பட்டது.

தோட்ட மக்களின் கலை வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள மலைநாட்டுத் தமிழர்கள் மலைநாட்டுத் தமிழ் எழுத்தாளர் மன்றச் செயலாளர், இல. 11, சர்க்குலர் வீதி, அட்டன் என்ற முகவரிக்குத் தங்கள் முகவரிகளை அனுப்பி வைக்கலாம்.

<u>தமிழரசுக்கட்சி மே தினவிழா</u>

# அர்த்தமற்ற சவால்

## மட்டக்களப்பு எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம்

தமிழரசுக் கட்சி மே தின விழாவை யாழ்ப்பாணம் புதிய பஸ்நிலையத்தில் 8-5-59 வெள்ளிக்கிழமை கொண்டாடியது. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமை வகித்தார். மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. எஸ். இராசதுரை பேசியபோது குறிப்பிட்டதாவது:

நண்பர் அரியநாயகத்தின் சவால் அர்த்தமற்றது. சுகாதாரத் தொழிலாளரின் ஆதரவு எங்களுக்கும் இருக்கிறது. தலைவர் செல்வநாயகம் பிற்றிய கலைத் தோட்டத்தில் அதிக பங்குகள் வைத்துள்ளவரல்ல. 33350 பங்குகள் கொண்ட அத்தோட்டத்தில் அவர் ஆக 6275 பங்குகளே கொண்டுள்ளார். மிகுதிப் பங்குகளெல்லாம் சிங்கள வழக்கறிஞர்களுடையதே. தொழிலாளர் தலைவர்களெனப்படும் டக்டர் என். எம். பெரேரா, டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா முதலியோரும், தோட்டங்கள் சொந்தமாக வைத்திருப்பவர்களே. சிங்களத் தலைவர்களை நம்பி நாம் ஒருபோதும் வாழ முடியாது.

தலைவர் திரு எஸ். கதிரவேற்பிள்ளை பேசும்பொழுது; தமிழரசுக் கட்சி தொழிலாளர்களையோ விவசாயிகளையோ ஏமாற்றும் கட்சியல்ல; அவர்கள் நன்மைக்காகவே உழைக்கும் கட்சி எனக் கூறினர்.

தமிழாசிரியர்கள் சங்கம் சார்பாக இ. க. தியாகராசா அவர்கள் பேசினர். மற்றத் தொழிலாளர் சங்கங்கள் போல் தம் சங்கம் லங்கா சமசமாஜிக்ளின் வலையில் விழப்போவதில்லை என அவர் உறுதி கூறினர்.

பல்வேறு தொழில் துறைகளைச் சார்ந்த பலர் தமது தொழில்களிலுள்ள கஷ்டங்களை எடுத்துக் கூறினர். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது: லங்கா சமசமாஜக் கட்சியின் நோக்கம் இலங்கை முழுவதும் சிங்களமயமாக்குவதே. நாங்கள் நெற்காணி மசோதாவை எதிர்த்தது ஏனெனில், அது மலைநாட்டுத் தமிழர் மன்னர், வவனியா முதலிய இடங்களில் குடியேறுவதைத் தடை செய்கிறபடியினலேயே. மே தினம் பிறந்தது ருஷியாவிலோ, சீனத்திலோ அல்ல. அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரிலேதான். நம்மவரில் சிலர் சிங்களவரின் தயவைப்பெற சிங்களத்தில் பேசவும் முற்பட்டுள்ளனர்; இம்மாதிரிக் காட்டிக் கொடுக்கும் கோஷ்டி இந்நாட்டில் இருப்பது மதியீனமாகும்.

# வவனியா பட்டின சங்கத் தேர்தல்

## அபேட்சகர்கள் நியமனம்

வவனியா நகரமண்டபத்தில் தேர்தல் அதிகாரிகள் முன்னிலையிற் பின்வரும் அபேட்சகர்கள் 8-5-59 இல் தத்தமக்குரிய சின்னங்களைத் தேர்ந்து எடுத்துக்கொண்டனர் :

வட்டாரம் 1. (குடியிருப்பு): திரு. ச. சுப்பிரமணியம் (நட்சத்திரம்) தற்போதைய தலைவர். திரு. ஸி. சுந்தரலிங்கம் (மரம்) பாராளுமன்றப் பிரதிநிதி.

வட்டாரம் 2. (அங்காடி): திரு. ச. சுப்பிரமணியம் (நட்சத்திரம்) தற்போதைய தலைவர். திரு. ஸி. சுந்தரலிங்கம் (மரம்) பாராளுமன்றப் பிரதிநிதி. ஜனப். எஸ். எம். யூசுப் (யானை) பழைய அங்கத்தவர்.

வட்டாரம் 3. (றம்பைக் குளம்): திரு. என். பி. யோசெப் (நட்சத்திரம்). திரு. பி. தருமலிங்கம் (சகடசக்கரம்) பழைய அங்கத்தவர்.

வட்டாரம் 4. (சூசைப்பிள்ளையார் குளம்): திரு. எஸ். அருணசலம் (வீடு). திரு. ரி. கோவிந்தபிள்ளை (நட்சத்திரம்). திரு. எஸ். குலசேகரம்பிள்ளை (யானை). திரு. என். செல்வராசா (சகடசக்கரம்).

வட்டாரம் 5. (வயிரவ புளியங்குளம்): த. சுப்பிரமணியம் (நட்சத்திரம்) பழைய அங்கத்தவர். திரு. ஸி. சுந்தரலிங்கம் (மரம்) பாராளுமன்றப் பிரதிநிதி.

வட்டாரம் 6. (சின்னப்புக் குளம்): திரு. ரி. ரி. அருளானந்தம் (மரம்). திரு. ஆர். கிருஷ்ணபிள்ளை (நட்சத்திரம்) பழைய அங்கத்தவர்.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

**ஹெப்பற்ரே - B12**

**(Hepato - B12)**

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்

பாண்டு, இரத்தமின்மை

ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்

அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

**புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி**

268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்



'ஹென்றலி'

உடை அலங்காரத்தின்

உன்னத அடையாளமாகும்

**ஹென்றலி**

★ சேட்

★ காற்சட்டை

★ ஷோட்ஸ்

ஹென்றலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கிலுைம், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

**ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,**

பழைய விமான நிலைய வீதி,

(Old Air Port Road)

இரத்மலானை.

இலங்கைச் சட்டக் கல்லூரியில் அரசியல் சட்ட விரிவுரையாளராகப் பணியாற்றும் திரு. ஜே. ஏ. எல். கூரே எல். எல். பி. சமீபத்தில் சட்டமாணவர் கழகத்தில் ஆற்றிய விரிவுரையின் தமிழாக்கம் இது. மூன்று பாகமாக வெளியிடப்படவிருக்கும் அவ்விரிவுரையின் முதற்பகுதி இங்கு வெளியாகியுள்ளது

# இலங்கை அரசியல் திட்டம்

## அதில் திருத்தப்படவேண்டிய சில அம்சங்கள்

குடியரசாக அமையவிருக்கும் இலங்கைக்குப் பொருந்துமாறு அரசியல் திட்டத்தைத் திருத்தியமைத்தல் மிகவும் முக்கியமானதும் சிக்கல்கள் நிறைந்ததுமான தேசிய கருமங்களில் ஒன்ருகும். இதைச் செய்யும் போது முதலாவதாக, புதிய அரசியல் தாபனங்களைப் புகுத்தவேண்டும். மேலும், இப்பொழுது இருக்கும் அரசியல் தாபனங்களுள் எவை தொடர்ந்து இருத்தல் அவசியம் என்பதை முடிவு செய்வதற்கு அவற்றை ஆராய்ந்து மதிப்பிடவேண்டும். அதிர்ஷ்ட வசமாக, இலங்கை அரசியல் திட்டத்தை வன்மையாகக் கண்டனஞ் செய்தவரின் அபிப்பிராயப்படியும் கூட, அரசியல் திட்டத்தின் சில பாகங்கள் சிறப்பாக இயங்கி வந்திருப்பதால் பெருமளவுக்கு அவற்றைப் புதிய அரசியல் திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளலாம்.

அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தியமைக்கும் போது எழும் சிக்கல்களுக்குத் தீர்வுகள் காண முனையும் போது பிரித்தானிய அரசியலமைப்புச் சட்டத்தையும், எமது நாட்டு அனுபவத்தையும், இலங்கையின் நிலைமைகளை ஒத்திருக்கும் ஏனைய நாடுகளின் அரசியலமைப்பு முறைகளையும் சீர்தூக்கி ஆராய்ந்தே முடிவுகள் செய்ய வேண்டும்.

### பிரதான நிருவாக அதிகாரி

திருத்தியமைக்கப்படும் குடியரசுக்கான அரசியல் திட்டத்தில் அரசிக்கும் மகாதேசாதிபதிக்கும் பதிலாக ஒரு பிரதான நிருவாக அதிகாரிக்கு இடமளிக்கவேண்டும். பொதுவாக, ஒரு சனநாயகக் குடியரசு நாட்டில் தெரிவு செய்யப்படும் சனதிபதிக்கே நிருவாக அதிகாரங்கள் வழங்கப்படும்.

சனதிபதி தெரிவு செய்யப்பட வேண்டிய முறையை நிர்ணயிக்கும் போது இரு முறைகளுள் ஒன்றை மேற் கொள்ளலாம். முதலாவது முறை பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒரு இணைக் கூட்டத்தில் சனதிபதியைத் தெரிவு செய்தலாகும். எமது நாட்டைப் போன்ற சிறிய நாடுகளுக்கு இம்முறையே பொருத்தமானதாகும். பல நாடுகளில் இந்த முறை திருப்திகரமாக இயங்கி வந்திருக்கின்றது. சனதிபதித் தேர்தலுக்குத் தனி மாற்று வாக்குள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையே (Proportional representation with single transferable vote) நியாயமானதும் பொருத்த முடையதுமான வாக்களிப்பு முறையாகும். இப்பொழுது இலங்கை "செனட்" சபை அங்கத்தவர்கள் இந்த முறையிலேயே தெரிவு செய்யப்பட்டுவருகின்றனர்.

சனதிபதியைத் தெரிவு செய்வதற்கு இன்னொரு முறை சில நாடுகளில் வழக்கிலிருக்கின்றது. இம் முறைப்படி மக்கள் நேர்முகமாகச் சனதிபதியைத் தெரிவு செய்கின்றனர். இலங்கையில் இம்முறையை அனுசரிப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அளவுக்கு மிஞ்சிய தேர்தல் ஒழுங்குகள் செய்யப்படவேண்டியிருப்பதோடு சில சமயங்களில் சிறு பான்மை வாக்காளரின் ஆதரவுடன் ஒரு சனதிபதி தெரிவு செய்யப்படக் கூடிய நிலையும் ஏற்பட்டு விடும். இந்த நிலையைத் தடுப்பதற்குத் தனி மாற்றுவாக்குள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மேற் கொள்ளலாம். ஆனல், இம் முறை வாக்காளருக்குச் சிக்கலானதாகவும் இலகுவில் அவர்கள் விளங்கிக் கொள்ள முடியாததொன்ருகவும் இருக்கின்றது. இம்முறையை மாற்றியமைத்து இலங்கையிலும் கையாளக் கூடியதாகச் செய்ய முடியும். மக்களின் சனதிபதியை எதிர் முகமாகத் தெரிவு செய்வதற்கு மக்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு தேர்தல் கல்லூரி சனதிபதியை தெரிவு செய்வதற்கு வகை செய்யலாம் [ஐக்கிய அமெரிக்காவின் சனதிபதி இம் முறையினல் தெரிவு செய்யப்படுகின்ருர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.]

சனதிபதி ஒருவரையறுக்கப்பட்ட காலத்துக்கே பதவி வகிப்பார். மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராக இருக்க வேண்டும். சில நாடுகளில் அரசியல் அமைப்புச் சட்டங்கள் ஒரு சனதிபதி ஒரு முறை அல்லது இரு முறைகள் தான் மீண்டும் தெரிவு செய்யப்படலாம் என விதிக்கின்றன. ஆனல் ஒரு அனுபவம் நிறைந்த தலைவரின் நன்மையான சேவையை ஒரு நாடு தொடர்ந்து பெற்றுவருவதற்கு முரணுக ஒரு பிரத்தியேக நியாயமும் கூறமுடியாது.

சனதிபதியுடன் அதே முறையில் தெரிவு செய்யப்படும் ஒரு உபசனதிபதிக்கும் அரசியல் திட்டத்தில் இடமளிக்கவேண்டும். அல்லது ஒரு சனதிபதி இறந்தால், பதவியிலிருந்து விலகிக் கொண்டால், பதவி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது பதவி வகிக்க முடியாத நிலையிலிருக்கும் காலங்களில் அவருக்குப் பதிலாக அவருடைய அதிகாரங்களையும் கடமைகளையும் கவனிப்பதற்குப் பிரதம நீதிபதியும், இரு பாராளுமன்ற சபைகளின் சபாநாயகர்களும் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்படவேண்டும் என விதிகள் இயற்றப்பட வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவராகச் சனதிபதி இருப்பதால் அவருக்குச் சில பொறுப்புள்ள அதிகாரங்களையும் வழங்கலாம். பொதுவாக அமைச்சர் ஆவையின் ஆலோசனைப்படி அவர் கடமையாற்றுபவராக இருந்தாலும் பல சனநாயக நாடுகளின் அரசியல் திட்டங்கள் விதித்திருப்பது போல் அவசர அல்லது நெருக்கடிகால அதிகாரங்களை வரையறுத்து சனதிபதியிடம் ஒப்படைக்கலாம். ஆனல் இவ்வதிகாரங்கள் பிரயோகிக்கப் படுவதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இருத்தல் அவசியம்.

### மந்திரி சபை

பிரதிநிதிகள் சபை சிபார்சு செய்யும் ஒருவரை, சனதிபதி பிரதம மந்திரியாக நியமிக்கவேண்டும் என்று விதிப்பதே நன்று. இவ்வாறு செய்யப்பட்டால் ஒரு அரசியற் கட்சிக்கும் பூரண பெரும்பான்மை கிடைக்காத காலங்களில் பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் சிக்கலான கடமை சனதிபதிக்கு இருக்கமாட்டாது. இங்கிலாந்தில் இருப்பதுபோல் இரு பிரதான அரசியற் கட்சிகள் இல்லாத இலங்கை போன்ற நாடுகளில் இவ்வித நிலை ஏற்படுவது சாத்தியமானதாக இருப்பதால் இந்த நியமிப்பு முறையை அரசியல் திட்டத்தில் சேர்த்துக் கொள்வது அவசியம். பிரதம மந்திரியின் சிபார்சின்படியும், பிரதிநிதிகள் சபை முன்னர் அளித்த அங்கீகாரத்தின்படியும் ஏனைய மந்திரிகள் நியமிக்கப்பட வேண்டும். [தொடரும்]


**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜேர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**

K. S. செல்லையா, ரேயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்டோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக் கொள்க.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சாதம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

கொழும்பு 8.


கண்ணோட்டம்: 5

## உருக்குலைந்த தெருக்கள்

தபால் மந்திரி மரைக்கார், இங்குள்ள தெருக்கள் சுவர்க்கத்துக்குச் செல்லும் பாதைகள் எனச் சில மாதங்களுக்குமுன் குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் எந்தெந்த இடங்களுக்கு மந்திரியவர்கள் பிரயாணம் செய்தாரென்பது எமக்குத் தெரியாது. ஆனல், யாழ்ப்பாண நகரத்திற்குள்ளோ அல்லது அதன் சுற்றுப்புறத் தெருக்களிலோ அவர் தமது பிரயாணத்தைச் செய்திருந்தால் அவர் இப்படிச் சொல்லியிருக்கமாட்டார். அல்லது, ஒருவேளை அவர் தமது தேகதிடாரோக்கியத்தின் காரணமாக, இங்குள்ள கரடுமுரடான பாதைகளின் பக்குவத்தை உணரவில்லைப்போலும்!

யாழ்ப்பாணத்திலுள்ள வீதிகள் மிகவும் சீர்கெட்ட நிலையிலேயே உள்ளன. பள்ளமும் திட்டியும், தெருக்களின் கரையோரமாகக் காணப்படும் கரடுமுரடான கற்களும் அனைவருக்கும் மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்துவிடுகின்றன. காரிற் செல்பவரின் உடல் குலுங்கும்; சைக்கிளிற் செல்பவரின் உடலும் குடலும் குலுங்கும்; நடந்து செல்பவர் எதிலேயாவது தட்டுப்பட்டுத் தடாலென்று விழக்கூடும்.

இத்தெருக்களைப் பழுது பார்ப்பதற்கென அரசாங்கம் ஒருதனி நிர்வாகப் பகுதியையே ஏற்படுத்தியுள்ளது. இப்பகுதியில் எத்தனையோ உத்தியோகஸ்தர் கடமையாற்றுகிருர்கள். இவர்களிற் பலர் மாதாமாதம் ஆயிரத்துக்குமேல் சம்பாதிப்பவர்கள். இவர்கள் எல்லோரும் என்ன செய்கிருர்களோ தெரியவில்லை. புதுத்தெருக்களை அமைக்கத்தான் இவர்களுக்கு முடியாவிட்டாலும், பழந்தெருக்களைப் பழுதுபார்க்கவுமா தெரியாது? பல தொழிலாளர்களை வைத்திருக்கும் இவர்கள், மாதம்மாதம் கொழுத்த சம்பளம் வாங்கும் இவர்கள், ஏன் இத்தெருக்களின் உருக்குலைந்த நிலையைப் போக்கி, உருப்படியான வேலை எதுவும் செய்யாது நிற்கின்றனர்? இவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அரசாங்கம் தான் இதைப்பற்றிக் கவலைப்படுகிறதா?

யாழ்ப்பாணப் பட்டினத்திலேயுள்ள தெருக்கள் பல கேவலமான நிலையிலிருந்த போதிலும், அவற்றுட் சிலவற்றைப் பழுதுபார்த்துத் திருத்தியமைக்க யாழ்ப்பாணம் மாநகர சபை முன்வந்துள்ளது. இதற்குக் காரணம் யாழ்ப்பாணம் மேயரின் கடமையுணர்ச்சி என்றுதான் சொல்லவேண்டும். ஆனல், அவர் காட்டும் ஊக்கமும், அக்கறையும் தெருக்களைத் திருத்தும் திருப்பணியில் நேரடியாக ஈடுபட்டுள்ளோர்க்கு இருக்குமோ என்பது சந்தேகத்துக்குரியது ஒன்றே.

யாழ்ப்பாணத்து மக்கள் சுவர்க்கலோகத்துக்குப் போக விரும்பவில்லை. ஆனல், அவர்கள் பூமியிலேயே மனிதர்களாக நடமாட மனிதர்களுக்குத் தகுந்த பாதைகளையே வேண்டுகிருர்கள். தெருக்களைத் திருத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் இது விஷயமாக ஊக்கம் காட்டி, மக்களுக்கு நல்ல தெருக்களை உதவ முன்வர வேண்டும். யாழ்ப்பாணம் மேயர் அவர்கள் மேற்கொண்டுள்ள தொண்டை மற்றும் உத்தியோகத்தர்களும் ஏற்று, அவருடன் ஒத்துழைத்து நகரத்துக்குப் புதிய தெருக்களையும், புத்தொளியையும் அளிப்பார்களேயானல், அவர்கள் பொதுமக்களுக்கு அரும்பணி செய்தவர்களாவர்.

தமிழ்மொழி நாகரிகம் முதிர்ந்த ஒருமொழி அதில் மற்றவர்களைப் புண்படுத்தும் சொற்கள் இல்லை

# தேடி வந்த செல்வம்

கசின்

## 3

ஒருவர் தனது கருத்துக்களைத் தெரிவிக்கும்பொழுது, பிழையான சொற்களை உபயோகிப்பதனல், சில தருணங்களில் எதிர்பாராத பலன் ஏற்பட்டுவிடும். 'சாலம்' என்ற சொல் மற்றவர்களைப் புண்படுத்துவதில் முதன்மையானது. அதிலும் பெண்களுக்கு இச்சொல்லை உபயோகித்தல் மகா தப்பிதம். 'சாலம்' என்ற சொல்லைத்தான் உபயோகித்திருக்கக்கூடாது. இது எனது அனுபவக் குறைவினல் ஏற்பட்டது.

'சாலம் என்று நான் சொன்னது மகா தவறு. அது எங்களுடைய பாஷைச் சொல்லுமன்று. அதை நான் உபயோகித்ததற்காக வருந்துகிறேன்.' இவ்விதம் மிகவும் பணிவுடன் நான் அவள் கேட்கக்கூடியதாகக் கூறினேன்.

'அவர் பெரிய பண்டிதர்; மற்றவைக்கு ஒன்றும் தெரியாதாக்கும்?', இது பொருமலுக்கிடையில்அவளிடமிருந்துவெளிப்பட்ட சொற்கள்.

'நான் ஒரு பண்டிதனுமல்லன்; மொழி வல்லுநனுமல்லன். ஆனல் 'சாலம்' என்பது தமிழ்ச் சொல் அன்று என்பது எனக்குத் தெரியும். உங்களுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையாவது வெளிப்பட்டதே. அது எனக்கு அருங்கோடையில் மழை பெய்தது போலிருக்கிறது.

அவள் தன்னையும் அறியாமல் சிரித்துவிட்டாள். இவ்வளவு விரைவாக இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து மீள்வேன் என்று நான் நினைத்திருக்கவில்லை. இவ் வெற்றி எனக்குத் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் கொடுத்தது.

'தயவுசெய்து எனது குற்றத்தைப் பொறுத்துக்கொண்டு இம் மிகுதித் தோடம்பழங்களைத் திருவமுது செய்தருள வேண்டும்' என்று தோடம்பழங்களை அவள் அருகில் வைத்தேன்.

என்னை நீங்கள் ஒன்றும் கேலிசெய்ய வேண்டாம். இந்தாருங்கள் சாப்பிடுங்கள்' என்று மீண்டும் தோடம்பழச் சுளைகளை எடுத்துப் பிரித்துத் தந்தாள்.

'நீங்களும் சாப்பிட்டாற்ருன் நானும் சாப்பிடுவேன்.'

'இதென்ன தொல்லையாய் வந்துவிட்டது, சரி; நான் சாப்பிடுகிறேன்;' என்று ஒரு சுளையை எடுத்துச் சாப்பிட்டாள்.

'நான் ஒரு குற்றஞ் செய்தபடியால், நீங்கள் இரண்டு சுளை சாப்பிட்டால் தான் நான் ஒரு சுளை சாப்பிடுவேன்.'

'நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை; இந்தாருங்கள் சாப்பிடுங்கள்.'

'உண்மையாக நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லையா?'

'ஆம்; உண்மையாக நீங்கள் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை. நீங்கள் வலுத்த ஆள்;' என்று சொல்லி என்னைக் கடைக்கண்ணல் பார்த்தாள்.

அந்தப் பார்வை மிகக் கூர்மையாகவும், என்னல் தாங்குவதற்கரிதாகவும் இருந்தது. அப் பார்வையின் தாக்குதலில் நின்று நான் மீளுவதற்கு முன்னர், அவள் மறு தோடம்பழச் சுளையை நீட்டினள். இப்படி அவள் எனது சிந்தனையைத் தொடரவிடாமல் தோடம்பழச் சுளைகளைக் கொடுத்தவண்ணம் இருந்தாள். இவ்வளவு பக்குவமாக முன்னர் எவரேனும் எனக்கு உணவு கொடுத்ததில்லை.

தோடம்பழத்தை உரித்துச் சுளையைப் பிரித்துக்கொடுப்பதும், பலாப்பழத்தை அறுத்துச் சுளையை எடுத்து விதையை நீக்கிக் கொடுப்பதும், மாம்பழத்தைத் தோல் சீவிக் கத்தியால் துண்டு துண்டாக வெட்டிக் கொடுப்பதும், கடலைக் கொட்டையை உடைத்துக் கோது நீக்கிக் கொடுப்பதும், கரும்பைத் துண்டு துண்டாக வெட்டித் தோல் உரித்துச் சிறு சிறு துண்டுகளாகக்கொடுப்பதும்; இன்பத்துக்குள்ளே இன்பமான செயல்களாகும். இதுதான் இல்லற இன்பத்துக்குள்ளே இருக்கின்ற இரகசியமோவென்று நான் சிந்தித்தேன். அழகுத் தெய்வம் ஒன்று மலர்ந்த முகத்துடன் வலிந்து இவற்றை ஊட்டிக்கொண்டிருந்தால்,............ மேலே உங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

நாங்கள் தோடம்பழம் தின்றுமுடிய யாழ்தேவி பொல்காவல நிலையத்துக்குள் புகுந்தது. பொல்காவல நிலையத்தில் ஏறிய சிலர், நாங்கள் இருந்த பெட்டிக்குள் வந்தனர். வந்தவர்கள் எல்லோரும் வாலிபர்களாக இருந்தனர். அவர்களுக்கு இடம் கொடுப்பதற்காகவும், அவர்கள் பார்வையிலிருந்து மீள்வதற்காகவும் அவள் தைரியமாக ஒரு காரியஞ்செய்தாள்.

எனக்கும், ஜன்னலுக்குமிடையிலுள்ள சிறிய இடைவெளியில் அவள் வந்து அமர்ந்தாள். ஒரு ஆள் இருக்கப் போதிய இடமில்லாமல் அந்த இடைவெளியிருந்தபோதிலும், அவள் அதற்குள் இருக்க எத்தனித்தாள். நான் சிறிது நகர்ந்து இடம் கொடுத்தேன். நாங்கள் இருந்த ஆசனத்தின் மிகுதியிடத்திலும், எதிர் ஆசனத்திலும் நிறையப் புதிதாக வந்தவர்கள் இருந்தார்கள். நாங்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் நெருங்கிக்கொண்டிருந்தோம். இந்நிலைமை குதூகலத்தைக் கொடுத்தது. அவள் அப்படி நடந்துகொண்டது மிகவும் சரியானதும் புத்திசாலித்தனமானதும் என நான் நினைத்தேன்.

வந்தவர்கள் எல்லோரும் அந்நியர். தங்கள் பாஷையில் ஏதோ பல பேசினர்கள். எங்களை அவர்கள் அவதானித்ததாகத் தெரியவில்லை. எங்களுக்குச் சிறிதுசிறிதாக அவர்களைப்பற்றிய கலவரம் நீங்கிற்று.

'நீங்கள் கிளிநொச்சியில் இறங்கி எவ்வளவுதூரம் போகவேண்டும்' என்று அவள் கேட்டாள்.

'கிளிநொச்சியிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் எனது கமம் இருக்கிறது. ஸ்ரேசனில் எனது வண்டி வந்துநிற்கும்.'

'மாட்டுவண்டியா?'

ஆம்; ஏன் மாட்டுவண்டி கூடாதா?'

'ஐயோ, கூடாதென்று யார் சொன்னது. உங்களுடைய கமத்தில் என்னென்ன இருக்கிறது.'

'நான் அரசாங்கத்திடமிருந்து பதினைந்து ஏக்கர் காடு வாங்கினேன். அதில் பத்தேக்கரில் நெல் விதைத்திருக்கிறேன். மிகுதி ஐந்தேக்கரும் மேட்டுக்காணி. அதில் ஒரு சிறு குடிசை அமைத்திருக்கிறேன். அதில்தான் நான் வசிக்கிறேன். காய்கறித்தோட்டம் வைத்திருக்கிறேன். இப்பொழுது எனது கமத்தில் தக்காளிப்பழம் ஏராளம்.'

'எனக்குத் தக்காளிப்பழம் என்ருல் பெரிய ஆசை, அதில் 'ஜாம்' செய்தால் மிக நன்ருயிருக்கும்.'

'உங்களுக்குத் தக்காளிப் பழத்தில் ஜாம் செய்யத் தெரியுமா?'

'நல்லாத் தெரியும்.'

'தக்காளிப் பழத்தில் ஜாம் செய்து மேனுட்டு முறையில் விற்பனைக்கு அனுப்பவேண்டுமென்று எனக்கு ஒரு திட்டமுண்டு. தக்காளிப்பழம் பெருந்தொகையாக விளைவிக்கப் போதிய வசதியிருக்கிறது. நன்ருகவும் வருகிறது' என்று நான் கூறின பொழுது, அவள் என்னைக் கடைக்கண்ணல் பார்த்துச் சிரித்தாள்.

'நீ என்னுடன் வந்திருந்து தக்காளிப்பழ ஜாம் செய்து தருகிருயா?' என்று நான் கேட்பதுபோல, நான் சொன்னது அவளுக்குத் தோன்றியிருக்கிறது. அதனுற்ருன் அவள் அவ்விதம் சிரித்தாள் என நினைக்கிறேன்.

அவள் என்அருகே இருந்ததும் அவளின் கபடத்தனமான சிரிப்பும் என்னை வானமண்டலத்தில் தூக்கிவைத்ததுபோலிருந்தது.

எனது நிலையை அவள் உணர்ந்து போலும், 'யார் உங்களுக்குச் சமைத்துத் தருகிறது?', என்று கேட்டாள்.

'நானும் சமைப்பேன்; என்னுடன் ஒரு ஆள் இருக்கிருன். வசதியான நேரத்தில் அவனும் சமைத்துத்தருவான்.'

'ஐயோ பாவம்! ஏன் நீங்கள் இன்னும் விவாகஞ் செய்துகொள்ளவில்லை' இக் கேள்வி எனக்குச் சிறிது உறைத்தது.அவள் என்னருகே இருந்தபடியால் நான் கோபப்படாது உண்மையைச் சொன்னேன்.

'நான் ஒரு கமக்காரன்.'

'கமக்காரன் என்ருல் விவாகஞ் செய்யப்படாது என்று நான் கேள்விப்படவில்லையே.' அவள் இதைக் குறும்புத்தனமாகத்தான் சொன்னுள் என்று நினைக்கிறேன். ஆனல் தனது குறும்பை வெளிக்காட்டாமல், ஒரு பாவமும் அறியாதவள் போல, முகத்தைவைத்துக் கொண்டு நிதானமாகக் கேட்டாள்.

ஐயோ பாவம்! இவளுக்கு உலகந் தெரியாதென்று நான் உண்மையாக நினைத்துக் கொண்டு, 'கமக்காரன் விவாகஞ்செய்யக்கூடாதென்று ஒருவரும் சொல்லவில்லை. இந்தக் காலத்தில் நல்ல குடும்பத்துப் பெண்கள் கமக்காரனை விரும்புகிருர்களில்லை. 'என்று நான் உள்ளதைச் சொன்னேன்.

'ஓகோ! அப்படியா......அப்ப என்னை விவாகஞ் செய்கிறீர்களா?, என்று அவள் என் காதுக்குள் மெல்லிய ஓசையில் கேட்டாள். அந்த மெல்லிய ஓசை எனது அடி நெஞ்சு வரையும் சென்று என்னை உலுக்கியது.

இக் கேள்வி எனக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அவளோடு பழகிய இத்துணை நேரமும் இப்படி நான் சிந்தித்துப் பார்க்கவில்லை. இப்படி அவள் துணிந்து கேட்பாள் என்று நான் எதிர்பார்க்கவுமில்லை.

அவளுடைய கேள்விக்கு என்னல் மறுப்புச் சொல்லவும் முடியவில்லை. இப்படி ஒரு பெண் நேரே ஒரு ஆணைக் கேட்கலாமோ? கேட்டால் என்ன பிழை? இந்தக் கேள்வியை அவள் கேளாமலிருந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்?

'உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் விடுங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று அவள் துன்பந்தோய்ந்த குரலோடு கூடிய வார்த்தைகள், எனது ஆலோசனைக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

'நான் விரும்பவில்லை என்று கூறவில்லையே?

'தேநீர் குடியாத ஆணுக்கும், தோடம்பழம் தின்னுத பெண்ணுக்கும்......என்று யோசித்தீர்களாக்கும்' என்று அவள் தனது இனிமையானகுரலில் கூறி விட்டு, எனது தோளில் கிள்ளிவிட்டாள். எதிர் ஆசனத்தில் இருந்தவர்கள் கலகல வென்று சிரித்தார்கள். நாங்கள் திடுக்குற்ருேம். (தொடரும்)


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்·ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**

**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**

சிருப்பர்

Std. 14.



**பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்**

**சுத்த சைவ போசனத்திற்கும்**

**சிறந்த இடம்!**



விசேஷ பரிசு

(Special Grade)

1952—1957



**மலாயா கபே**

உரிமையாளர் : M. K. கதிரவேலு

36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

நல்ல சிறுகதைகள் எழுதிய கு. ப. ராஜகோபாலன் காலமாகிப் பதினைந்து ஆண்டுகளாகிவிட்டன. அவரது சிறுகதைகளைத் தரநிர்ணயம் செய்யும் இக்கட்டுரை 'எழுத்து' என்னும் மாத இதழில் வெளியாகியுள்ளது

# கு. ப. ரா. வின் சிறுகதைகள்

— க. நா. சுப்ரமண்யம் —

கு. ப. ராஜகோபாலன் இறந்து இப்போது பதினைந்து வருடங்களாகிவிட்டன. இந்தப் பதினைந்து வருஷங்களில் அவருடைய புதுத் தொகுப்புகள் எதுவும் வெளிவரவில்லை. ஒரு பதினைந்து வருஷங்கள் தமிழையே நம்பி வாழ முயன்ற அவர் சற்றேறக்குறைய எண்பத்தைந்து சிறுகதைகளும் பல சிந்தனைக் கட்டுரைகளும், ஓரங்க நாடகங்களும், வசன கவிதைகளும், விமரிசனக் கட்டுரைகளும், முடிவு பெருத சில நீளக் கதை (நாவல்)களும் எழுதினர். கனகாம்பரம், (அல்லையன்ஸ்) காணுமலே காதல் (ஜோதி) புனர்ஜன்மம் (கலைமகள்) என்கிற மூன்று சிறுகதைத் தொகுதிகளிலுமாக அறுபத்துநாலு சிறுகதைகள் அடங்கியிருக்கின்றன. இது தவிர எத்தொகுதியிலும் இடம் பெருமல் பத்திரிகைகளில் மட்டும் வெளியான கதைகள் இருபதுக்கு அதிகம் இருக்கும் என்று தெரிகிறது.

கு. ப. ரா. வைப் போன்ற ஒரு எழுத்தாளருக்கு, தமிழை மட்டும் நம்பி வாழ முயன்ற ஒரு எழுத்தாளருக்குச்செலுத்த வேண்டிய மரியாதையைத் தமிழர்கள், நன்றிக்குறளை சமய சந்தர்ப்பம் இல்லாமல் பிதற்றிக்கொண்டு காலம் போக்குகிற தமிழர்கள், செய்யவில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. தமிழ் நாட்டுப் பிரசுரகர்த்தர்கள் கு. ப. ரா. வின் எழுத்துக்களைத் தேடிப்பிடித்து வாசகர்களுக்குத் தரவில்லை; தமிழ் வாசகர்கள் இன்றைய பத்திரிகை எழுத்து மோகத்திலே (அதற்கு முன் ஆங்கில மோகம்; அதற்குமுன் பண்டித மோகம் என்று ஏதோ ஒரு மோகத்திலே) கு. ப. ரா. வின் எழுத்துக்களைப் போற்றிப் படிக்கவும், நினைவில் வைத்துக் கொள்ளவும் தவறி விட்டார்கள்.

நேற்றைய இலக்கியத் தரமும் இன்றையத் தரமும் தெரிய, தெரிந்து படித்து அனுபவிக்க, நமது சமீப காலத்திய இலக்கியப் பொக்கிஷங்களை மறக்காமல் போற்றி வருகிற மனப்பான்மை நமக்கு, அதாவது தமிழ் ரசிகர்களுக்கு வளர வேண்டும். இதை வளர்க்க இலக்கிய விமரிசனம் இன்றியமையாத ஒரு சாதனம். நாங்கள் ஆனந்தரங்கம் பிள்ளையையோ, பெஷியையோ, ஆறுமுக நாவலரையோ, இப்ராஹிம்சாருவுத்தரையோ, வேதநாயகம் பிள்ளையையோ கூட அதிகம் போற்றிப் பாராட்டியது கிடையாதே. கு. ப. ரா.வை மட்டும் போற்றுவானேன், அனுவசியம் என்று சொல்கிற தமிழ் வாசகர்கள் தமிழ் அறிந்தவர்களும் அல்ல; நல்ல வாசகர்களும் அல்ல; இலக்கிய ருசியுள்ளவர்களும் அல்ல என்று சொல்லவே வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

## 1

கு. ப. ரா. வின் இலக்கிய சேவையில் மற்றத் துறைகளைப் பற்றிக் கவனிக்காமல் சிறுகதைத்துறையில் மட்டும் அவர் சாதனைகளை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அவருடைய எல்லாச் சிறுகதைகளையும் (அநேகமாக) அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தபோது படித்ததுடன் அவருடைய கதைத் தொகுதிகளை மூன்ருவது (அல்லது நான்காவது) தடவையாகவும் இப்போது ஒரு தரம் படித்து விட்டு, எனக்குத் தோன்றுகிற சில அம்சங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன். தொகுதிகளில் கிடைக்காத சில சிறுகதைகளையும், பத்திரிகைக் 'கட்டிங்கு' களாக செல்லப்பாவின் உதவியால் மீண்டும் ஒரு தரம் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. எல்லாவற்றையும் மனத்தில் கொண்டு, விமரிசக நோக்குடன் பார்க்கும் போது, சில விஷயங்கள் தெளிவாகவே தெரிகின்றன.

இந்த எண்பது எண்பத்தைந்து சிறுகதைகளில் இருபது இருபத்தைந்து சிறுகதைகளாவது நல்ல சிறுகதைகள் என்று எடுத்துச் சொல்லிக் காட்டுவதற்கு உபயோகப்படுபவை என்று சொல்லலாம். எழுதியதில் இருபத்தைந்து கதைகளுக்குக் குறையாமலே கு. ப. ரா. சிறப்பாகத் தன் சிறு கதைச் சோதனையில் வெற்றிபெற்றிருக்கிருர் என்றும், இன்னும் ஒரு பத்திருபது சிறுகதைகள் வெற்றிபெருவிட்டாலும் சோதனை என்ற அளவில் இலக்கியவிமர்சகர்களின் கவனத்தைக் கவரக்கூடியவை என்றும் சொல்லலாம். இந்த அளவுக்கு—அதாவது வெற்றியாக எழுதியதில் கால் பங்கும், சற்றேறக்குறைய அதே அளவு வெற்றியில்லாவிட்டாலும் சோதனையாக கவனத்தைக் கவரக்கூடிய அளவுக்கு—சிறுகதைமுயற்சி செய்தவர்கள் என்று இந்த இருபத்தைந்து வருஷங்களில் தமிழ் இலக்கியாசிரியர்களில் வேறு யாரையுமே சொல்ல முடியாது. (புதுமைப்பித்தன் உட்படத் தான்.)

இது ஒரு தனிச் சிறப்பாகுமா என்று கேட்பவர்கள் இருக்கலாம். ஒரு மொழியில் ஒரு இலக்கியத் துறையின் ஆரம்ப காலத்தில் செய்யப்படுகிற முயற்சிகளிற் பலவும் வெற்றி பெறுவதில்லை என்பது இலக்கிய மரபு அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும், (ஷேக்ஸ்பியருக்கு முந்திய நாடகங்கள் ஒரு உதாரணம்).

புதுமைப்பித்தன் உட்படத் தான் என்று நான் சொல்லுவதைச் சிலர் ஆட்சேபிக்கலாம். புதுமைப் பித்தன் உட்பட என்று சொல்வதினல் நான் புதுமைப்பித்தனுடைய இலக்கியத் தரத்தையோ அவருடைய சோதனைத் திறத்தையோ குறைத்து மதிப்பிடவில்லை. அவர் செய்த சோதனைகள், பரப்பிலும் ஆழத்திலும், அதிகம். கு. ப. ரா. வின் சிறுகதைகளில் வெற்றி பெற்றவை எண்ணிக்கையில் அதிகம். சோதனை முயற்சி பரப்பிலோ ஆழத்திலோ அதிகம் இல்லை. புதுமைப்பித்தன் செய்து பார்த்த சோதனைகள் பலவற்றில் அவர் வெற்றி பெறும் வரையில் உழைத்ததில்லை என்று தான் சொல்லவேண்டும். கு. ப. ரா. வுக்கு உழைப்பும், விடாப்பிடியாகக் கடைசிவரை ஒரு சோதனையைச் செய்துபார்க்கும் திறனும் இருந்தது.

1930-ல் தொடங்கி ஒரு பதினைந்து வருஷங்களில் தமிழ் இலக்கிய சரிதத்தை எழுதுகிறபோது புதுமைப் பித்தனுக்கும், கு. ப. ரா. வுக்கும் (மற்றவர்களைப்பற்றி இங்கு எதுவும் நான் சொல்லவில்லை) நிச்சயமான இடம் உண்டு என்பதை எல்லோருமே ஏற்றுக் கொள்ளுவார்கள். இன்று நாங்கள் முன்னேறி வெகு தூரம் வந்துவிட்டோம் என்று பத்திரிகைக் குப்பை மேடுகளிலிருந்து கொக்கரிப்பவர்களும்கூட, இதை எண்ணித்தான், தமிழ்ச் சிறுகதை புதுமைப்பித்தனுடனே, கு. ப. ரா. வுடனே முடிந்துவிடவில்லை என்று சொல்லித் தங்களுக்குப் பெருமை தேடிக் கொள்ள முயலுகிருர்கள். கு. ப. ரா. வின் சிறுகதைகளில் ஒரு இருபது இருபத்தைந்தும், புதுமைப்பித்தனின் சிறுகதைகளில் ஒரு பதினைந்திருபதும் தமிழ் இலக்கியத்திலே நிரந்தரமான இடம் பெறும் என்றுதான் நான் எண்ணுகிறேன்.

கு. ப. ரா. வின் சிறுகதைகளைப் பற்றிய வரையில் நான் எந்த அளவுகோல்களை எப்படி வைத்து அளந்து சொல்கிறேன் என்பதை ஓரளவு, குத்துமதிப்பாகச் சொல்லவே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். குத்துமதிப்பாக என்று நான் சொல்வதற்குக் காரணம் உண்டு. இலக்கிய விமர்சனத்தில் எப்போதுமே முடிவு என்று ஆணித்தரமாகக் கூறுவதும்கூட முடிவான விஷயமல்லதான்; காலத்தால் மாறுபடக் கூடியது தான் என்பதை நாங்கள் எல்லோருமேநினைவில் வைக்கவேண்டும். இலக்கிய அளவு கோல்கள் முக்கியம் தான் எனினும் அவை நிரந்தரமானவையல்ல; நிலையானவையும் அல்ல. ஓரளவு வார்த்தைக்கு அகப்படாத ஒரு ரஸ அனுபவத்திற்கு உருத்தர முயலுவதே இலக்கிய விமர்சகன் செய்ய முயலுகிற காரியம்; அந்த உருவை ஓரளவுக்குத் தான் சொல்ல முடியும்—மற்றப்படி அது மனேபாவம், ரஸனை என்கிற தன்மைகளில் உருவற்றதாகத் தான் இருக்கும்.

## 2

எந்த இலக்கிய நூலிலுமே ஆசிரியனுடைய தனித் தன்மை என்பது, ஒரு முழுமையான பர்ஸனலிடி என்பதுதான் முக்கியமானது என்று சொல்லவேண்டும். மற்றப்படி எழுத்தில் நடையழகு இருக்கலாம்; காம்பீர்யம் இருக்கலாம்; சிந்தனை ஓட்டம் இருக்கலாம், ஆனல் எதுதான் இருந்தாலும், இந்த Personality முழுமையான தனித்வம் இல்லாத வரையில் எழுத்து இலக்கியமேயாகாது. வெறும் வார்த்தைக் கோவையாகத்தான் இருக்கும்.

கு. ப. ரா. வின் சிறுகதைகளைப் படிக்கும்போது கு. ப. ரா. வின் பர்ஸனலிடி, தனித்வம் நமக்குச் சரிவரவே தெரியவருகிறது என்பது அவர் சிறுகதைகளின் தனிச் சிறப்பு. வெற்றி பெற்ற சிறுகதைகளில் மட்டுமல்ல, வெற்றி பெருத பல சோதனைக் கதைகளிலும், சிறுகதையாக உருவமே பெருத சில பத்திரிகைக் கதைகளிலும் கூட, இந்த தனித்வம் காணக் கிடக்கிறது என்பது என் அனுபவம். (ஆமாம் கு. ப. ரா. வும் பத்திரிகைக் கதை என்கிற தரத்தில் பல கதைகள் எழுதத்தான் எழுதியிருக்கிருர். உதாரணம் வேண்டுமானல் தித்திப்பு, இரண்டாம் தலை தீபாவளி முதலியன.)

கு. ப. ரா. வின் தனித்வத்தின், பர்ஸனலிடியின் அம்சங்கள் என்னென்ன என்று அலசிப் பார்ப்பது மிகவும் சுவாரசியமான விஷயமாக இருக்கும். அதைப் பூராவும் இங்கு செய்ய முடியாது—இடம் போதாது. ஓரளவு கோடி காட்டிப் பார்க்க முயலுகிறேன்.

ஒரு ஏக்கமும், லட்சியமும் கலந்து குழைந்த ஒரு தனித்துவம் கு. ப. ரா. வுடையது என்று சொன்னல் அவ்வளவாகத் தெளிவாக விளங்காது என்று தோன்றுகிறது. ஆனல் ஆங்கிலத்தில் the romantic agony என்று சொல்கிருர்களே, தானே சிருட்டித்துக் கொண்ட ஒரு லட்சியத்தை அடையாமல் இன்ப வேதனைப்படுகிற ஒரு தத்துவம்—அது தமிழ்நாட்டில் 1920—30இல் ஆங்கில இலக்கிய பரிச்சயமுடையவர்களுக்கு, கீட்ஸ், ஷெல்லி என்கிற கவிகளைப் படித்ததனல் ஏற்பட்டது. ஓரளவு போரிட்டு வெற்றிபெற முடியாத ஒரு நிலையில் இலக்கியவாழ்க்கை என்கிற லட்சிய வாழ்வை மேற்கொண்டதால் ஏற்பட்டது என்று சொல்லலாம்.

கு. ப. ரா. வுக்கே உரித்தான (தமிழ் இலக்கியத்தில்) இந்த ஏக்கமும், லட்சிய உணர்வும் சேர்ந்து குழம்பி நமது மனத்தைக் கவருகிற சிறுகதைகள் என்று கு. ப. ரா. வின் சிறுகதைகளிலே, நூர் உன்னிஸா, தாய், தவறுகளோ தன்மைகளோ, திரை, அடி மறந்தால் ஆழம், நடுத்தெரு நாகரிகம், சந்திப்பு முதலிய கதைகளைச் சொல்லலாம்.

கு. ப. ரா. வின் தனித்தன்மையிலே இந்த ஒரு ஏக்கமும், லட்சியமும் மட்டும்தானுஅடங்கியுள்ள அம்சங்கள் என்று கேட்டால், அப்படி ஒன்றும் அதை அறுதியிட்டும் சொல்லிவிடமுடியாது. இதற்கு ஒரு உதாரணமாக ஸ்டூடியோக் கதை என்கிற (கனகாம்பரத் தொகுப்புக்) கதையைப் பார்க்கலாம். டைரக்டர் தன்னைத் தொட்டுச் சொல்லித்தருவதை ஸீதா ஆட்சேபிக்கிருள். எல்லை கடந்து போய்விட்டது என்று அவள் நினைக்கிறபோது ஒட்டியாணத்தை டைரக்டர் முகத்தில் வீசி எறிந்துவிட்டு வெளியேறி விடுகிருள். ஐந்தாறு வரிகளில் விஷயத்தை விளக்குகிற கு. ப. ரா. வின் தனித்தன்மை இலக்கியபூர்வமாகப் பூரணமானது. 'ஸ்டூடியோவிற்கு எதற்கு வருகிருள் இந்தப் பதிவிரதை? கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையோ' என்று டைரக்டர் கிருஷ்ணன் முகத்தைத் தடவிக்கொண்டு உதவி டைரக்டரைக் கேட்கிருர். நியாயமான கேள்வி என்று நினைக்குமளவு இதை எழுதிய கு. ப. ரா. ஸீதாவின் கட்சியையும் இதற்குமேல் வற்புறுத்தவில்லை என்பதில்தான் அவருடைய பர்ஸனலிடி இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இதே வார்த்தைகளில், இதே அளவில், இதே தொனியை ஏற்றிவைத்தது தான் கு. ப. ராவின் சிறப்பான முழுமையான பர்ஸனலிடி.

திரை என்கிற கதையிலும் கு. ப. ரா. வின் தனித்தன்மையைக் கடைசிப்பகுதியில் சிறப்பாகவே நாம் காணலாம். 'எனக்குக் கையேது எழுத, வாயேது பாட, அவள்தான் என் கை, அவள்தான் என் வாய் அவள்மூலந்தான் எனக்கு வாழ்க்கை. அவள்மூலந்தான் என் உயிர்' என்று சொல்கிற விதவையாகிவிட்ட சகோதரி ஸரஸ்வதியிடம் கு. ப. ரா. வின் தனித் தன்மை முத்திரை பூரணமாக விழுந்திருக்கிறது. 'ராஜம் மாடிக்குப் போ' என்று ஸரஸ்வதி சொல்வதுடன் முடிகிற கதை கு. ப. ரா. வின் மிகச்சிறந்த கதைகளில் ஒன்று.

இப்படித் தனித்தனி அம்சங்களாகப் பலவற்றைக் கு. ப. ராவின் தனித்தன்மையில் அடங்கியிருப்பனவாக (உதாரணத்தில்) விளக்கலாம். எல்லாவற்றையும் சாத்தியமாக்குகிறது என்று ஒருமென்மை


[6ஆம் பக்கம் பார்க்க]

எங்களிடம்

பவுண் மார்க் ஓடுகள்
மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

நெல்லு, எள்ளு, அரிசி
முதலியனவும்



சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

R. சிவகுமாரன்
76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

இலங்கை அபிவிருத்தித் திட்டம்:

# கல்லோயா: பல பயன் தரு திட்டம்


வ. மகாதேவன்

இலங்கை அரசாங்கம் 1948 இல் ஆறுவருடத்தேசியப் பொருளாதார விருத்தித் திட்டத்தை ஆரம்பித்தது. இலங்கையின் வரண்ட பிரதேசத்திலிருக்கும் காட்டுப் பகுதிகள் சிலவற்றை விளைநிலங்களாக்குவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. வரண்ட பிரதேசத்தை விருத்தி செய்வதற்கு 1930 தொடக்கம் பல குடியேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்பிரதேசங்களில் மலேரியாக் காய்ச்சலின் அபாயம் நீங்கியபின்பும், இலங்கை சுதந்திரமடைந்தபின்பும் குடியேற்றத் திட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் வரண்ட பிரதேசத்தை விருத்தி செய்வதற்கு இன்னொரு வகையான திட்டத்தை 1949 தொடக்கம் கையாளத் தொடங்கியது. இத்திட்டம் "பல பயன்தரு திட்டம்" (Multi-purpose Project) எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டம் எனப் பொருள்படும். இலங்கையின் வரண்ட பிரதேசத்தை விருத்தி செய்வதற்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் அத்தியாவசியம். ஒரு பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தை அமைக்கும்பொழுது வேறு தேவைகளும் நிறைவேறும் வண்ணம் அதை அமைத்தால் அது பல பயன்தரு திட்டமாகி விடுகின்றது.

### கிழக்கு மாகாணத்தில்

இலங்கை அரசாங்கம் 1949 இல் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நிர்வாகப் பிரிவிலுள்ள இங்கினியகலை(Inginiyagala) இடத்தில் முதலாவது பலபயன்தரு திட்டத்தை ஆரம்பித்தது. இத்திட்டத்தின் நோக்கங்கள் நீர்ப்பாசன வசதியளித்தல், நீர்மின்சக்தியை (Hydro-electric power) உருவாக்குதல், வெள்ளப்பெருக்கைத் தடைசெய்தல், மக்களுக்குக் குடிநீர்வசதியளித்தல், உல்லாசப் பிரயாணிகளுக்கு வசதிகள் அளித்தல் முதலியனவாக இருந்தன. கல்லோயா நதிக்குக் குறுக்கே ஒரு அணைகட்டி இத்திட்டம் அமைக்கப்பட்டதால் அது "கல்லோயா பல பயன்தரு திட்டம்" எனப் பெயர்பெற்றது.




62 மைல் நீளமுள்ள கல்லோயா நதி இலங்கையின் மத்தியிலுள்ள மலைநாட்டில் உற்பத்தியாகிக் கிழக்கு நோக்கிப் பாய்ந்து மட்டக்களப்புக்கு 30 மைல் தெற்கே கடலினுள் வீழ்ச்சியடைகின்றது. நதியின் கழிமுகத்திலிருந்து 27 மைல் தூரத்தில் இத்திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் வருடச் சராசரி மழைவீழ்ச்சி 82 அங்குலம். இதில் 62 அங்குலம் வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக்கால மழைவீழ்ச்சியாகும். நதியின் மொத்த நீரேந்து பரப்பு (Catchment-area) 384 சதுரமைல்; வருடத்தில் கிடைக்கக்கூடிய சராசரி நீரின் அளவு 7,40,000 ஏக்கர் கனஅடி (Acre-feet). இங்கினியகலைக் குன்றின் ஆகக்கூடிய உயரம் 1,085 அடி.

### இரு அணைகள்

பிரதான அணை, மேலதிக நீர் வடிந்தோடும் அணை (Spill-way dam) என இரண்டு அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதான அணையின் ஆகக்கூடிய நீளம் 3,600 அடி; அதன் ஆகக்கூடிய உயரம் 154 அடி. அதன் மேற்பாகத்தின் அகலம் 30 அடி. இதன்மீது 160 அடி இடைத்தூரங்களுக்கு ஒரு மின்சாரவிளக்கு வீதம் அமைக்கப்பட்டிருக்கும் 20 அடி அகலமுள்ள வீதி இருக்கின்றது. நீர் வடிந்தோடும் அணை கொங்கிறீற்றினல் கட்டப்பட்டிருக்கிறது. அதன் நீளம் 1,050 அடி; ஆகக்கூடிய உயரம் 84 அடி. இந்த இரண்டு அணைகளையும் இங்கினியகலைக் குன்று பிரிக்கின்றது.

நீர்த்தேக்கம் "சேனநாயக்க சமுத்திரம்" என அழைக்கப்படுகின்றது. அதன் பரப்பளவு 30 சதுர மைல். அதாவது கொழும்புத் துறைமுகத்தைப் போல் ஏறக்குறைய இரண்டரை மடங்கு பெரியது. இந்நீர்த்தேக்கத்தில் (Reservoir) 26,000 கோடி கலன் நீர் கொள்ளும், அதாவது இலங்கையில் உள்ள எல்லா ஏரிகளிலும் இருக்கும் மொத்த நீரின் அளவாகும்.

### 60,000 ஏக்கர் நிலம்

60,000 ஏக்கர் நிலத்தை வருடம் இருமுறை நீர்ப்பாய்ச்சுவதற்கு இத்திட்டம் பயன்படும். (இத்திட்டம் அமைக்கப்படுவதற்குமுன் பட்டிப்பொலை ஆற்றுத்திட்டத்தின்மூலம் ஏறக்குறைய 30,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. 35 மைல் நீளமான இடதுபக்கக் கால்வாய்மூலம் 80,000 ஏக்கர் நிலத்திற்கும் (40,000 ஏக்கருக்கு வருடமிருமுறை), 35 மைல் நீளமான வலதுபக்கக் கால்வாய்மூலம் 40,000 ஏக்கர் நிலத்திற்கும் (20,000 ஏக்கருக்கு வருடமிருமுறை) நீர்ப்பாய்ச்சலாம்.

ஒரு நீர் மின்சார சக்தி நிலையமும் கட்டப்பட்டிருக்கின்றது. இதிற் பொருத்தப்பட்டிருக்கும் தண்ணீரால் இயங்கும் நான்கு சக்கரங்களின் உதவியினல் 9,000 குதிரை வேக அளவுள்ள மின்சார சக்தியை உருவாக்கி விநியோகிக்க முடியும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. எக்காலத்திலும் சராசரியாக 6,000 குதிரை வேக அளவுள்ள சக்தியை உருவாக்க முடியுமாம். இச்சக்தியை இப் பிரதேசத்திலமைக்கப்படவிருக்கும் தொழிற் சாலைகளின் இயந்திரங்களை இயக்குவதற்கு உபயோகிக்கலாம்.

இப் பிரதேசத்தில் குடியேறும் மக்களுக்குக் குடிநீரைக் குழாய்கள் மூலம் விநியோகித்து வருகின்றனர்.

இந்நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டிருப்பதால் நதியின் வடிநிலத்தின் கீழ்ப்பாகத்தில் (Lower Basin) நிகழும் வெள்ளப் பெருக்கின் அபாயம் குறைக்கப்பட்டு விட்டது.

### கிளை நிலையங்கள்

1956 வரை கல்லோயாப் பிரதேசத்தில் 35,000 மக்களடங்கிய ஏறத்தாழ 5,560 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. கல்முனை, சம்மாந்துறை, அண்ணமலை உஹான (Uhana)ஆகிய இடங்களுக்கு மின்சக்தி விநியோகஞ் செய்வதற்குத் தேவையான கிளை நிலையங்களும் (sub-station) கட்டப்பட்டு கம்பிகளும் பொருத்தப்பட்டு விட்டன.

கல்லோயாப் பள்ளத்தாக்கில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் நோக்கத்துடன், 10,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்வதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன. இத்திட்டத்தின்படி 12,000 தொன் சீனி (சர்க்கரை) உற்பத்திக்குத் தேவையானகரும்பு 1959ல் கிடைக்க வேண்டும். 1957முடிவில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கினல் எவ்வளவிற்கு இத்திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை.

### நிர்வாகம்

ஐக்கிய அமெரிக்காவில் தென்னசிப் பள்ளத்தாக்குப் பல பயன் தரு திட்ட நிர்வாக முறையைப் (Tennessee Valley Authority) பின்பற்றி கல்லோயாத் திட்டப் பிரதேசத்தை நிருவகிப்பதற்கு நான்கு அங்கத்தவர்கள் அடங்கிய "கல்லோயா அபிவிருத்திச் சபை' நிறுவப்பட்டிருக்கிறது. இச்சபை ஏறக்குறைய 1000 சதுர மைல் பிரதேசத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்புடையதாக இருக்கின்றது. இதில் ஊவா மாகாணத்தின் சில பாகங்களும் அடங்கியிருக்கின்றன.

இச்சபை காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையிற் கடமையாற்றி வருகின்றது. ஒரு அங்கத்தவர் நிதி அமைச்சரால் நியமிக்கப்படுவர். ஏனைய மூன்று அங்கத்தவரும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்படுவர். அங்கத்தவரின் பதவிக்காலம் 5 வருடங்கள். பதவிக்காலம் முடிவடைந்ததும் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு அங்கத்தவர் தகுதியுடையவராவர். ஒரு காரியதரிசி சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி புரிவர்.

### சபையின் கடமைகள்

சபையின் முக்கிய கடமைகள் ஆவன: விருத்தி செய்யப்படாமலிருக்கும் இடங்களை விருத்தி செய்தல், நீர்ப்பாசனம், குடிநீர் வசதி, வெள்ளத் தடுப்பு, மின்சக்தி உற்பத்தி போன்றவற்றுக்குரிய திட்டங்களை அமைத்தல், காடாக்குவதற்கு மரம் வளர்த்தல், மண்ணரித்துச் செல்லப்படுவதைக் கட்டுப்படுத்தல், பொதுமக்கள் சுகாதாரத்தை விருத்தி செய்தல், தாவர, மிருக நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், தண்ணீர் விநியோகத்தைக் கட்டுப்படுத்தல், மக்களிடையே கூட்டுறவு முறைகளைப் பரப்புதல், ஏற்ற "சுழல் முறைப் பயிர்ச் செய்கை"யை (Rotation of Crops) நடைமுறைக்குக் கொண்டு வருதல், மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையானவற்றைச் செய்தல் ஆதியனவாம்.

இப்பொழுது கடமையாற்றும் கல்லோயா அபிவிருத்திச் சபையிற் பின் வருவோர் பதவிகள் வகிக்கின்றனர்.

ஐ. எம். டி. சில்வா(தலைவர்), டபிள்யூ. ரி. ஐ. அழகரத்தினம், விஜயபாகு விஜயசிங்க, என். எல். டி. கஸ்பேர்ஸ் (நிதியமைச்சரின் பிரதிநிதி) ரி. ஸி. எஸ். ஜெயரத்தினம் (காரியதரிசி).

# கு. ப. ரா. வின் சிறுகதைகள்

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]

யையும் சொல்லவேண்டும். இந்த மென்மையைப் பலவீனமான மென்மை என்று எண்ணி நாம் ஏமாந்துவிடக் கூடாது. இந்த மென்மையிலே அசாதாரணமான ஒரு பலமும், மனோ திடமும், அழுத்தமும் இருப்பதை கு. ப. ரா. வின் சிறுகதைகளில் பலவிடங்களிலும் காணலாம். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, பெண்மையின் பிடிபோலத் தளர்ந்ததாகவும் மிருதுவாகவும் இருப்பதுபோல இருக்கிற கு. ப. ரா. வின் தனித்தன்மைப்பிடி இறுகியதாகவும் கெட்டியாகவும் தளரவிடாததாகவும் இருப்பது அலசிப் பார்த்தால் நன்கு விளங்கும். இந்தப் போலி மென்மையையும் கு.ப. ராவின் தனித்தன்மையின் ஒரு தனிச்சிறப்பாகச் சொல்ல வேண்டும்.

இந்த மென்மைத் தோற்றம் தமிழ்ச் சிறுகதாசிரியர்கள் வேறு யாரிடமும் கிடையாது. புதுமைப்பித்தனின் தனித்வம் சம்மட்டி அடிபோல, சாட்டைச் சொடுக்குப்போல அவர் சிறு கதைகளில் திருப்ப கட்டங்களில் எல்லாம் விழும். மௌனியின் தனித்வம் ஆழமாகவும் அமைதியாகவும் சற்றே இருட்டாகவும் அவர் சிறு கதைகளிலே விழுகிறது. லா. ச. ரா. வின் தனித்வம் மனோதர்ம முடிச்சுகளாக, மனிதனைப் பிழிந்து கசக்கி யெடுப்பதை அவர் சிறுகதைகளிலே பார்க்கலாம். கு. ப. ராவின் தனித்தன்மையிலுள்ள மென்மைத் தோற்றம் அவருக்குத் தனியான சிறப்பு. குரூரமான இடத்தையும் கூட, மென்மையாக, நளினமாகச் சொல்லித் தன் சிறுகதையை நடத்துபவர் அவர். (தொடரும்)

சிறந்த போட்டோக்களுக்கு

தொலைபேசி: 252.

தந்தி: பாரத்போட்டோ

பாரத் ஸ்ருடியோ

படம் பிடிப்பவர்கள்

கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

கருத்தரங்கம்

# இந்தியக் காங்கிரஸ் தொண்டர்களே மலைநாட்டுத் தொழிலாளரின் நண்பர்கள்

பெ. சொ. முருகையா
( இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அட்டன் மாவட்டத் தலைவர் )

ஈழநாடு 2-5-59 இதழில் வெளியான 'ஏமாற்றுக்காரர் யார்?' என்ற கட்டுரை சோற்றுக்குள் பூசினிக்காயை மறைப்பதுபோன்று இருப்பதால் இங்கு சில உண்மைகளைக் கூறவிரும்புகின்றேன்.

### மலைநாட்டில் சமசமாஜிகள்

தோட்டப்பகுதிகளில் அரசியலைப்பற்றியும், தொழிற்சங்க இயக்கங்களைப்பற்றியும் முதன் முதற் பரப்பியது சமசமாஜிகளல்ல. ஆனால் அப்பெருமை காலஞ்சென்ற திரு. பெரியசுந்தரத்தையும் திரு. நடேசய்யரையும் சார்ந்ததாகும். தொழிலாளர்களின் உண்மைப் போராட்ட வரலாறு வேறு. ஆனால் சமசமாஜிகள் கூறுவதோ கட்டுக்கதைகள். சமசமாஜிகள் மலைநாட்டுத் தொழிலாளர் விஷயத்தில் தலைகாட்ட முன்னர்தோழர்கள் இராஜலிங்கம், சோமசுந்தரம், இராமானுஜம் போன்றவர்கள் தொழிலாளரின் பிரச்சனைகளில் ஈடுபட்டு உழைத்தனர்.

இலங்கையின் முதல் வேலை நிறுத்தம் அட்டன் பகுதியிலே கொட்டியாக்கொலைத் தோட்டத்தில் 1936 இல் நடைபெற்றது. ஆகவே, முல்லோயாவில் வெகுகாலத்திற்குப் பின்பே போராட்டம் நடைபெற்றது. முல்லோயாவில் நடந்தது என்ன? தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் 1939 இல் செய்தனர். அவர்கள் எந்தச் சங்கத்திலும் அங்கத்தவர்களல்ல. திரு. நடேசய்யர் அவ்வேலை நிறுத்தத்தில் தலையிடாத காரணம், அத்தொழிலாளர்கள் அவர் சங்கத்தின் அங்கத்தவர்களல்ல, என்பதே. உதவியின்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உதவியாகச்சென்ற சமசமாஜிகளையும் அவ்வருடம் நேருஜியால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரசின் கண்டி கிளையிலுள்ளவர்களே காப்பாற்றினர். இந்த உண்மையை ஏனோ மறந்துவிடுகின்றனர்? முல்லோயா துப்பாக்கிப் பிரயோகத்தையும், தோழர் கோவிந்தனின் கொலையையும் கண்டித்துப் பகிரங்க விசாரணை கோரியது யார்? பகிரங்க விசாரணையில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. பெரியசுந்தரம், திரு. ஜோர்ஜ், ஆர். மோத்தா போன்றவர்களும் தொழிலாளர்கள் சார்பில் தோன்றியதைச் சமசமாஜிகள் மறைத்தாலும் அவ்விசாரணை ஏடுகள் மறைக்கமாட்டாவே.

### தடுப்புக்காவலில்

சமசமாஜித் தோழர்கள் தடுப்புக்காவலில் இருப்பதற்கு முன்பே 1939 இல் இலங்கை இந்திய காங்கிரஸும் (காங்கிரசும்) 1940 இல் இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் சங்கமும் உதயமாகியதையும் தெரியாத அரசியல்வாதியும் தொழிற்சங்கவாதியும் இருக்க முடியுமா? ஆகவே எதிர்ப்பற்ற காலத்தில் வலுப்படையவில்லைக் காங்கிரஸ் ஸ்தாபனம். ஆனால் இலங்கைவாழ் இந்தியர்களின் ஆதரவுடன் மக்கள் அபிமானத்துடன் கட்டுப்பாடு நிறைந்த பலம்பொருந்திய அரசியல் ஸ்தாபனமாகவும் தொழிற்சங்க ஸ்தாபனமாகவும் மாறியது. 1940 இல் கம்பளையில் முதலாவது ஆண்டு மகாநாடும் நடைபெற்றது.

### பிரஜா உரிமைச்சட்டம்

சென்ற 1948-ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் பாராளுமன்றத்திற்கு வந்த சமயம் சமசமாஜிகள்மாத்திரமா அச்சட்டத்தை எதிர்த்தனர்? என்ன விந்தை! தமிழரசுக் கட்சியும், இதர எதிர்க்கட்சிகளில் அநேகரும் சேர்ந்தே! இலங்கை இந்திய காங்கிரஸின் சார்பில் பாராளுமன்றத்தில் வீற்றிருந்த அங்கத்தவர்களும் அதை எதிர்த்தனர். சமசமாஜிகள் பாராளுமன்றத்தில் எதிர்த்தார்கள். தங்களின் ஒருசில பொதுக்கூட்டங்களில் எதிர்த்துப் பேசினார்கள். இன்னும் அச்சட்டத்தைத் தங்களின் மகாநாடுகளில் எதிர்க்கின்றார்கள். இலங்கை இந்திய காங்கிரஸ் 1948 இல் அட்டனில் நடந்த மகாநாட்டில் அச்சட்டத்தை நிராகரித்ததை இன்னும் அரசியல்வாதிகள் குறை சொல்லுகிறார்களே! 1950-லும், 1951-லும் இலங்கைவாழ் இந்தியர்கள் பிரஜா உரிமைக்கு 237,000 மனுக்களை இலங்கை இந்திய காங்கிரஸின் உதவியால் அனுப்பியது யாரும் மறுக்கமுடியுமா? கல்வியறிவற்ற தொழிலாளர்கள் எங்கே மனுப்போடுவார்கள் என்று யு. என். பி. இறுமாந்திருக்கும்போது அவர்கள் எதிர்பார்த்திராத குண்டை அரசாங்கத்திற்குப் போட்டது சமசமாஜிகளா? நொண்டிச்சாக்குகள் சொல்லிப் பிரஜா உரிமை மனுக்களை அரசாங்கம் நிராகரித்தபோது சுப்ரீம் கோர்ட்டிலும் பிரிவி கவுன்சிலிலும் தொழிலாளர் சார்பில் வாதாடுவது இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்!

### மொழிச்சமத்துவம்

சமசமாஜிகளின் கொள்கை இருமொழிக்கும் சம அந்தஸ்து அளிக்கவேண்டும் என்பதே. அவர்களைப்போலவே கம்யூனிஸ்ட் கட்சியும், தமிழரசுக் கட்சியும் அந்தஸ்தை ஆதரிக்கின்றன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப்போன்ற மலைநாட்டு ஸ்தாபனம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூன்று மொழிகளுக்கும் சம அந்தஸ்து வேண்டுமெனத் தீர்மானம் தீட்டியுள்ளார்களே! ஆனால் எத்தனை கட்சிகள் என்ன கொள்கையைப் பேசினாலும், எத்தனை தீர்மானங்களைத் தீட்டினாலும், மொழிப்பிரச்சனைக்காகப் போராட்டம் நடத்தியது தமிழரசுக் கட்சியே!

ஆனால் தனிச்சிங்களக் கட்சியாகிய எம். ஈ. பி. யுடன் நடத்திய தேர்தல் நாடகமும் சமசமாஜக் கட்சியின் சாவியை தனிச் சிங்கள பண்டாவின் கையில் கொடுத்தது. அந்தக் கொள்கையும் மொழிச் சமத்துவக் கொள்கையா? அல்லது முதலாளித்வ ஒழிப்புக் கொள்கையா?

### ஹர்தாலில் காங்கிரஸ்காரர்

1952ஆம் ஆண்டில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் பிரஜா உரிமைச் சட்டத்தையும், வாக்குரிமைச் சட்டத்தையும் எதிர்த்து கொழும்பிலே 4 மாதங்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியதே! இன்றும் பிரஜாஉரிமைச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் சமசமாஜிகள் அன்று வாய்மூடி மௌனியாக இருந்தது ஏனோ? ஆயிரக்கணக்காக தோட்டத் தொழிலாளர்கள் கொழும்பிலே போராட்டம் நடத்தியதைத் திரும்பிப் பார்க்காத சமசமாஜிகள் 1953 இல் அவர்கள் நடத்திய அரிசிப் போராட்டத்தில் ஏன் காங்கிரஸ்காரர்கள் இறங்கவில்லையென்று கேட்க என்ன அருகதையுண்டு. பங்கீடு அரிசியை விலைகூட்டியபோதிலும் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கட்குக் கிடைத்த பங்கீட்டு அரிசியும் கூடுதலாகக் கிடைத்த அரிசியும் சேர்ந்து அரிசி விலையைக் குறைத்துவிட்ட உண்மையையும் மறந்திருக்க முடியாது.

### அடையாள வேலைநிறுத்தம்

பாதுகாப்புச் சட்டம் இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளிகளைக்கடுமையாகப் பாதிக்குமென்ற முக்கிய காரணத்தாலும் இம்மாதிரிச் சட்டம் ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்டதென்ற காரணத்தாலும் தொழிற்சங்க இயக்கத்தை முறியடிக்கக்கூடிய ஒரு சட்டமென்ற காரணங்கட்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஆனால் சமசமாஜிகளின் கொள்கைகளை ஆதரித்தோ அல்லது அவர்களின் தலைமையை நம்பியுமல்ல. தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், சமசமாஜியின் மானத்தைக் காத்தது! தொண்டமானும் அஸீஸும் கட்சி போட்டபோது முதலில் தொண்டமானை ஆதரிப்பதாக வாக்களித்துப் பின்பு அஸீஸுடன் சேர்ந்துகொண்டு தொண்டமானைத் தாக்குவதிலும் அஸீஸை ஆதரிப்பதிலும் ஈடுபட்டு அவர்கள் பிளவைப் பெரிதாக்கி, மலைநாட்டுத் தொழிலாளி மத்தியில் புகுந்து விரோதத்தை தொழிலாளிக்குப் போதிப்பதில் சமசமாஜிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

### தமிழரசுக் கட்சி

1939ஆம் ஆண்டில் சமசமாஜிகள் கிராமச் சங்கத் தேர்தலில் தோட்டத் தொழிலாளியைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது எனப் பாராளுமன்றத்தில் தங்கள் வாக்குகளை அளித்தனர். 1946ஆம் ஆண்டில் இலங்கை கண்டிராத தொழிலாளர் வேலைநிறுத்தத்தின்போது (உருளவள்ளி போராட்டத்தில்) சமசமாஜிகள் தொழிலாளர்கட்கு உதவி செய்வதற்குப் பதில் நிலமில்லாதவர்க்கே நிலம் கொடுக்கவேண்டுமென்ற மார்க்ஸியவாதத்தைக் கிளப்பி தொழிலாளர் போராட்டத்தை முறியடித்த யு. என். பிக்குத் தாளம்போட்டனர். உருளவள்ளி தொழிலாளரை அரசாங்கம் சிறையிட்டது. தொழிலாளரை மீட்டது காங்கிரஸ். சுப்ரீம் கோர்ட்டிலும் பிரிவி கவுன்சிலிலும் போராடியது காங்கிரஸ். என். எம். பெரேரா அவரின் சகாக்களுக்கு (சிங்கள விவசாயிகட்கு) உருளவள்ளித் தேயிலைத் தோட்டத்தில் இடம் பிடித்துக்கொடுத்தார். அதேபோல் வாக்குரிமை விஷயத்திலும், சுப்பிரீம்கோர்ட்டிலும், பிரிவிகவுன்சிலிலும் காங்கிரஸ் போராடியது. தமிழரசுக்கட்சி மலைநாட்டுத் தமிழர்களை ஆதரித்து அவர்களின் போராட்டத்துக்கு உறுதுணையாக இருந்து வந்திருக்கிறது. சமசமாஜிகளைப்போல் மலைநாட்டுத் தமிழர்களைக் கூறுபோடாமலும் அவர்கள் மத்தியில் பகையை வளர்க்காமலும் இருக்கும் தமிழரசுக்கட்சியை மலைநாட்டான் வாழ்த்துகிறான். தமிழரசுக்கட்சி தமிழ் சமூகத்திற்காகப் போராடுகிறதென்ற உண்மையையும் தெரிந்திருக்கிறான்தொழிலாளி. தமிழரசுக் கட்சியின் கிளை மலைநாட்டில் அவசியமில்லை: அவர்களுக்கு அங்கு செல்வாக்கும் உண்டு.

# இந்திய–சீன நேச உறவுக்கு ஆபத்தா?

## திபேத் விவகாரத்தின் விளைவுகள்

திபேத்தில் நடைபெற்ற கலவரம் காரணமாக இந்தியாவுக்கும் மக்கள் சீனாவுக்கும் இடையே நிலவிவரும் நேச உறவுக்குக் கெடுதி ஏற்படுமா என அஞ்சவேண்டிய நிலைமை இப்பொழுது தோன்றியிருக்கின்றது. திபேத்தில் சீன அரசாங்கம் தனது ஆட்சியையும் கொள்கையையும் திணிக்க முயற்சித்தமையால் திபேத் மக்கள் கொதித்து எழுந்து கிளர்ச்சி செய்தனர். சீனர் கலவரத்தை அடக்கி இராணுவ ஆட்சியை நிறுவியுள்ளனர். திபேத்தின் அரசியல் தலைவரும் மதத் தலைவருமாகிய தலாய்லாமா வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்து மசூரியில் வசித்து வருகின்றார். இவருக்கும் இவருடைய ஆதரவாளருக்கும் அகதிகளுக்கும் இந்தியா தஞ்சம் அளிக்க முன்வந்தது சீனாவை ஆத்திரம் அடையச் செய்திருக்கின்றது.

திபேத் சீனத்தின் ஆதிபத்திய நாடாக இருப்பதால் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுகின்றது என்றும், இந்திய எல்லைப்புற நகரமாகிய கலிம்பொங் திபேத் புரட்சிக்காரரின் தலைமைத்தானமாக விளங்குகின்றது என்றும், தலாய்லாமா மசூரியில் வெளியிட்ட அறிக்கை அவரினால் தயாரிக்கப்படாத அறிக்கை என்றும் பல வகையான பழிகளை சீனம் இந்தியாமீது சுமத்தி வருகின்றது. தலாய்லாமாவை சந்தித்து உண்மையை அறிந்துகொள்வதற்கு சீனா பஞ்சன் லாமாவை அல்லது ஒரு தூதுவரை அனுப்பும் வண்ணம் இந்தியப் பிரதமராகிய ஜவாஹர்லால் நேரு விடுத்த வேண்டுகோளைப் பஞ்சன் லாமா நிராகரித்துவிட்டார். இதனால் இந்தியாவுக்கும் சீனத்துக்கும் இடையே கெடுபிடி யுத்தம் ஆரம்பித்திருக்கின்றது. இந்தியா தனிப்பட்ட முறையில் தொடர்ந்து பஞ்சசீலக் கொள்கையைப்பின்பற்றி இக்கட்டான நிலைமையிலிருந்து தப்பிக்கொள்ள முடியுமா என்ற நிலைமை எழுந்திருக்கின்றது.

### பஞ்சசீலம்

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை எல்லா நாடுகளுடனும் நேச உறவை வளர்த்தலும், எந்த விதமான இராணுவ அல்லது ஒப்பந்த இணைப்புகளிற் சேராமல் நடு நிலைமையாக இருந்து வருதலுமேயாகும்.

சீனப் பிரதமராகிய சௌ என் லாயும் இந்தியப் பிரதமர் நேருவும் இந்தியாவில் 1954-ல் சந்தித்து தம் பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கையில் பஞ்ச சீலக் கொள்கை முதன் முதலாக விளக்கப்பட்டது. அதன் ஐந்து அம்சங்களும் பின்வருமாறு:—

1. நாடுகளின் பரப்பளவையும் பூரண ஆட்சி உரிமையையும் அங்கீகரித்தல்.
2. போர் தொடுக்காமல் இருத்தல்.
3. பொருளாதாரம், அரசியல், அடிப்படைக் கொள்கை போன்ற எந்தக் காரணத்திற்காகவும் பிறநாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.
4. சமத்துவத்தையும் பரஸ்பர நன்மையையும் அடைதல்.
5. சமாதானமாக ஒத்து வாழ்தல்.

இப்பஞ்சசீலக் கொள்கையை இந்தியாவுக்கு வந்து சென்ற சீனம், ருஷியா, போலந்து, இந்தோனேஷியா, பர்மா, நேபாளம், லாவொஸ், கம்போடியா, வியற்னாம் சனநாயகக் குடியரசு முதலிய நாடுகளின் தலைவர்களும் போற்றி ஆதரித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நேருவின் முயற்சி

திபேத் விவகாரம் காரணமாக இந்திய மக்களின் அபிப்பிராயம் மக்கள் சீனத்துக்கு விரோதமாகத் திருப்பம் அடைவதைத் தடுப்பதற்கு இந்தியப் பிரதமர் நேரு அரும்பாடுபட்டு வருகின்றார். வீண் வதந்திகளைப் பரப்பிக் கெடுபிடி யுத்தத்தை வளர்த்துப் பாரத சீன நேச உறவுக்கு ஒரு ஆபத்தும் ஏற்படுத்தாமல் இருக்கவேண்டியதன் அவசியத்தைப் பல முறை வற்புறுத்தி வருகின்றார். ஆனால் சீன ஆட்சிப்பீட உறுப்பினரோ சீன மக்களோ நேருவின் முயற்சிகளை வரவேற்காமல் கண்டித்து இந்தியாவுக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருவது நேரு அவர்களுக்கும் பெரும் மனவருத்தத்தைக் கொடுத்து வருகின்றது. இவ்விஷயம் குறித்து ஸ்ரீ நேரு ருஷியப் பிரதமர் குருசேவ் அவர்களுக்கும் அறிக்கை மூலம் தமது விசனத்தைத் தெரிவித்திருக்கின்றாராம்.

### தீர்வு காண்பதற்கு வழியென்ன?

இந்நிலையில் தலாய்லாமா இந்தியாவில் வசித்துத் தமது சமயத்தொண்டைச் செய்து வந்தாலும் மக்கள் சீனம் அவர்கள் அரசியற் தொண்டாற்றி வருகின்றார் என்று பழிசுமத்தத் தயங்கமாட்டாது.

இதற்குத் தீர்வு காண்பதாயின் தலாய்லாமா மீண்டும் திபேத்துக்குத் திரும்புவதற்கு வகைசெய்யவேண்டும். அல்லது பௌத்த மக்கள் பெரும்பான்மையோராக வசிக்கும் வேறு நாடு ஒன்றுக்கு அவரை அனுப்பவேண்டும். தலாய்லாமா சீனமக்கள் காங்கிரசின் நிலைச் செயற்குழுவின் பதினாறு உபதலைவர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதால் தலாய்லாமா திபேத்துக்குத் திரும்பிச்செல்வதைச் சீனம் விரும்புகின்றது என அறியக் கிடக்கின்றது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தில் மக்கள் சீனம் ஒரு அங்கத்துவ நாடாக இன்னும் சேர்க்கப்படாமல் இருப்பதால் திபேத் விவகாரத்தை அச்சபையில் விவாதித்து ஒரு முடிவும் காணமுடியாது. மக்கள் சீனம் அங்கத்துவ நாடாக இருந்தாலும் திபேத் சீனாவின் உள்நாட்டு விவகாரமெனச் சீனம் கூறிவிட்டு விவாதத்தைப் பகிஷ்கரிக்கவும் முடியும்.

ஆகவே, இந்திய—சீன நேச உறவுக்கும் உலக சமாதானத்துக்கும் பங்கம் ஏற்படாமல் திபேத் விவகாரத்துக்குத் தீர்வு காண்பது மிகவும் சிக்கலான ஒரு காரியமாக இருக்கின்றதெனக் கூறவேண்டி இருக்கின்றது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு வைகாசி மீ 2 உ (16-5-59)

## மந்திரிசபை நெருக்கடி

சென்ற இரண்டு வாரங்களாக இலங்கை மந்திரிசபை கூடிப்பேச முடியவில்லை. மந்திரிகளுக்குள் ஏற்பட்ட பிளவைப் பிரதமரும், கவர்னர் ஜெனரலும் தீர்த்துச் சமரசம் செய்துவைக்க இதுவரை செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. பிளவுகளுக்குக் காரணம் எதுவாயினும் சரி, இவ்வித நிலை நீடிப்பது, இந்த அரசாங்கத்துக்கோ, ஜனநாயகத்துக்கோ, நாட்டு மக்களின் நலத்துக்கோ பெரிதும் தீங்காகும்.

பலவித குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு வண்டியை, பல குதிரைகளும் வெவ்வேறு பக்கம் இழுத்தால் எப்படியிருக்குமோ அவ்விதமே இன்றைய அரசாங்கத்தின் நிலை இருக்கிறதென்று பிரதமர் பண்டாரநாயக்கா ஒரு பொதுக் கூட்டத்திற் பேசுகையில் வாய்விட்டுச் சொன்னார். "சில வலது பக்கம் இழுக்கின்றன. சில இடதுபுறமாக அதிகம் இழுக்கின்றன. சில நான்குகால் பாய்ச்சலிற் கிளம்புகையில், சில படுத்துக்கொள்ளுகின்றன. இவற்றின் கடிவாளத்தையெல்லாம் பிடித்திழுக்கும் நான், வேகமாகப்போவதைப் பிடித்திழுத்தும், மெதுவாகச் செல்லுவதை அடித்து உதைத்தும் வண்டியை ஓட்டவேண்டியவனாக இருக்கிறேன். அரசாங்கக் கட்சியிலே கருத்து வேற்றுமைகள் இருப்பினும், பொதுமக்களுக்கு அரசாங்கம் வகிக்கவேண்டிய கூட்டுப் பொறுப்பு இருந்தே வரும்" என்று கூறினார்.

இதுவரை ஏற்பட்ட பல நெருக்கடிகளைப் பிரதமர் சாமர்த்தியமாகச் சமாளித்தது உண்மையே. இந்த நெருக்கடியையும் மனித முயற்சிகளால் முடியாவிடினும் "தெய்வ அருளால்" தீர்க்கக்கூடும். என்றாலும் மந்திரிசபையிலே வேற்றுமைகள் அதிகரித்து அச்சபையே கூடமுடியாமற்போய்; சந்தி சிரிக்கையில், பொது மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது என்ன மதிப்போ நம்பிக்கையோ இருக்கமுடியும்? இந்நிலையில் அரசாங்கம் பொது மக்களுக்குத்தான் கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றும் என்று பிரதமர் உறுதி கூறுவதை அவர்கள் நம்புவது எப்படி?

புதன்கிழமை நடைபெறும் மந்திரிசபைக் கூட்டத்துக்கு யாராவது வராமலிருந்தால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவித்த பிரதம மந்திரி மந்திரிசபைக் கூட்டத்தையே ஒத்திவைத்துவிட்டார். கூட்டம் நடத்தியிருந்தால் 10 மந்திரிகள் வராமல், பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் என்று அஞ்சி அதைத் தவிர்க்கவே, கூட்டத்தை அவர் ரத்துச் செய்துவிட்டார். இதற்கிடையே சமரசத்துக்கான புதிய முயற்சிகளை அவரும் கவர்னர் ஜெனரலும் சேர்ந்து தீவிரமாகச் செய்யலாம். அந்த முயற்சியும் வெற்றிபெறலாம்.

ஆனல் ஒன்று; "வண்டி மாடு சண்டி; வண்டிக்காரன் நொண்டி" என்று கூறுவதுண்டு. அதைப்போலத்தான் சென்ற மூன்றுவருட காலமாக இந்த அரசாங்க யாத்திரை இருந்துவருகின்றது. பொது மக்களின் மனதிலோ, தொழிற்துறையிலோ அமைதியில்லை. எந்த நிமிஷத்தில் என்ன ஏற்படுமோ என்ற பீதி நிலவுகின்றது. நாட்டுமக்களின் வாழ்க்கை சுபிட்சமடையவும் நாடு அமைதியாக முன்னேறவும் வேண்டுமாயின் முதலில் மந்திரிசபையில் நல்லுறவும் ஒத்துழைப்பும் வேண்டும். கருத்து வேற்றுமைகள் ஏற்படுவது சகஜம். ஆனல் இது எல்லை மீறி அளவுக்கு மிஞ்சிவிட்டால், ஜனநாயகமென்பதே கேலிக் கூத்தாகி, பொதுமக்களின் அமைதிக்கே ஆபத்து ஏற்படுவதாகும்.

## பாகிஸ்தானின் ஆவல்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள எல்லாத் தகராறுகளையும் சமாதானமான முறையில் கூடிய சீக்கிரத்தில் தீர்க்கவேண்டுமென்பது எமது ஆவலான விருப்பமென்றும் இதைத் தாம் மனப்பூர்வமாகக் கூறியதாயும், பாகிஸ்தான் தலைவர் ஜெனரல் முகமது அயூப்கான் குவெட்டாவிலே பத்திரிகைப் பிரதிநிதிகள் மூலம் தெரிவித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

ஏற்கெனவே இந்த ஆவலைத் தாம் வெளியிட்டு, வெளி ஆக்கிரமிப்பிலிருந்து உபகண்டத்தைப் பலமாகப் பாதுகாக்க இந்தியாவுடன் ஒரு கூட்டு இராணுவ ஏற்பாடு செய்து கொள்ள விரும்பியதாயும் ஆனல் டில்லியிலிருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார். புதுசீனத் தகராறுகாரணமாக, இந்தியாவுக்கு ஏதும் ஆபத்து ஏற்படின், அது பாகிஸ்தானையும் பாதிக்கும். ஆகவே வேறு எதற்குமில்லாவிட்டாலும் இப் பொதுக்காரணத்தை முன்னிட்டாவது இரண்டு நாடுகளும், பழைய தகராறுகளைத் தீர்த்துக் கொண்டு புதிய கூட்டுறவு கொள்ளவேண்டியது முன்னிலும் அவசியமாகும்.

இதே விருப்பம் இந்தியாவுக்கும் அதிகமாக இருக்கும். இந்தியா பாகிஸ்தான் பிணக்கினல் இராணுவச் செலவுகளைப் பெருக்கிக்கொண்டு இரு நாடுகளும் முன்னேறமுடியாமல் தவிக்கின்றன என்றாலும் இவ்விஷயமாகப் பதிலளிக்க இந்தியா தயங்குவதாயின் அதற்கு நல்ல காரணமுண்டு. உலக நாடுகள் இரு போட்டி வல்லரசுக்கோஷ்டிகளாகப் பிரிந்துள்ள நிலையில், பாகிஸ்தான் ஒரு கோஷ்டியில் சேர்ந்து, "ஸியாட்டோ" 'பாக்தாத்' இராணுவ உடன்படிக்கையில் ஈடுபட்டு மற்ருேர் கோஷ்டியின் விரோதத்தைப் பெற்றுள்ளது. ஆனல் இந்தியாவோ, இரண்டிலும் சேராமல் நடுநிலைமை வகித்து இரண்டின் நட்பையும் உதவியையும் பெற்றுவருகின்றது. இந்தியாவும் அந்தக் கோஷ்டியில் சேர்ந்திருப்பின் ருஷியாவும், சீனமும் விரோதமாகி என்றென்றும் அமைதியோ நிம்மதியோ இல்லாமல் வாழவேண்டி நேரிடும். இந்திய பாதுகாப்புக்கும் இது நன்மையாகாது.

இந்திய உபகண்டத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், இந்தியாவுடன் எல்லாத் தகராறுகளையும் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளவும் பாகிஸ்தானுக்கு உண்மையில் ஆவலாக இருப்பின் அது முதல் ஸியாட்டோ, பாக்தாத் ஒப்பந்தங்களிலிருந்து வெளியேறவேண்டியிருக்கும். பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து ஈராக் வெளியேறி நடுவுநிலைவகித்து, இரு வல்லரசுகளின் நட்பையும் உதவியையும் அது பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இதனல் ஈராக்குக்கு நஷ்டமில்லை. அதேபோல பாகிஸ்தான் இவ்வித நடவடிக்கையைத் துணிச்சலுடன் எடுப்பது மேற்குறித்த ஆவலைப் பூர்த்திசெய்யும். அராபியநாடுகளின் நட்புக்கு உதவுவதுடன் இருதேச மக்களின் மேலான நல்லுறவுக்கும் வழி செய்யும்.

## இந்தியா — இலங்கை நட்புறவு

இந்தியாவின் கலாசார அமைச்சர் ஹூமாயூன் கபீர் இலங்கையின் அழைப்பை ஏற்று இங்கு வந்து பல கூட்டங்களில் பேசினர். ஸ்ரீ பாலியின் வெள்ளிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசி, நன்கொடையுமளித்தார். அவரது இந்த விஜயம் நம் இரு அண்டை நாடுகளின் நட்புறவைப் பலப்படுத்த உதவுவதாகும்.

அடுத்த மாதத்தில் இந்திய ஜனதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் இங்கு விஜயம் செய்ய இருப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிருேம். தூரத்திலுள்ள ஆசிய நாடுகளுக்கு திக்குவிஜயம் செய்த ராஜேந்திரரை, இலங்கை அழைக்க வேண்டுமென்று நாம் கூறினேம். அந்த யோசனை வீண்போகவில்லை. இந்திய ஜனதிபதி இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்வது பற்றிய விவரங்கள் தெரியவில்லை. அவர் வடமாகாணத்துக்கும், கிழக்குமாகாணத்துக்கும் விஜயம் செய்ய வேண்டுமென்றும், அம்மாகாணங்களை ஒதுக்கிவிடக்கூடாதென்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. இந்த சுற்றுப் பிரயாணத்துக்கு ஒழுங்கு செய்யும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்திடமே இருக்கும். மந்திரி சபையில், இவ்விருமாகாணங்களையும் சேர்ந்த ஒருவரும் இல்லாத நிலையில், அம்மாகாணங்கள் வழக்கம்போல் ஒதுக்கப்பட்டுவிடலாம். இவ்விதம் ஏற்படாமல் தடுக்க, இருமாகாணங்களிலும் உள்ள நகரசபைகளும், பொது ஸ்தாபனங்களும் பிரதமருக்குத் தங்கள் ஆவலை முன்கூட்டியேதெரிவிக்க வேண்டும்.

நம் இரு நாடுகளுக்கும் சில பிரச்சினைகள் தீராமல் இருக்கின்றன. இரண்டுக்கும் நட்பும் அபிமானமும் இருப்பின், இப்பிரச்சினைகள் சுலபமாகத் தீர வழி பிறக்கும். அதற்கு ஜனதிபதி ராஜேந்திரரின் இலங்கை விஜயம் நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்தத் துணைசெய்யும்.

## ஜெனிவா மாநாடு

ஜெனிவா நகரிலே நான்கு வருடங்களுக்குப் பின்னர் இவ்வாரம் வெளிநாட்டு மந்திரிகள் மாநாடு நடைபெறுவதே ஒரு நல்ல அறிகுறி. பேர்லின், ஜேர்மனி விஷயமாக இரு கோஷ்டி வல்லரசுகளுக்குமிடையே உள்ள பிணக்குகள் இம்மாநாட்டினல் தீருமா என்பது மிகவும் சந்தேகம்.

இரு கட்சிகளுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் குறையவில்லை. கிழக்கு ஜேர்மனியை அங்கீகரிக்க மேற்கு வல்லரசுகள் மறுக்கின்றன. மேற்கு பேர்லின் மேற்கு வல்லரசுகளிடமிருப்பது ருஷியாவுக்குப் பிடிக்கவில்லை. மேற்கு ஜேர்மனியில்அணுக்குண்டு தளங்கள் ஏர்படுத்தப்படுவதை ருஷியா ஆட்சேபிக்கின்றது. இரு கோஷ்டி வல்லரசுகளுக்கிடையிலும் பரஸ்பர பீதியும், சந்தேகங்களும் இராணுவப் போட்டிகளும் நீடிக்கும் வரை எந்த விஷயத்திலும் சமரசம் ஏற்படுவது சுலபமானதன்று.

எனினும் இரு சாராரும் மீண்டும் கூடி, இரு ஜேர்மன் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் ஆலோசகர் என்ற முறையிலாவது கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டமை முன்னேற்றமான காரியம். இரு சாராரும் சமாதானத்தை உண்மையாகவே விரும்புகின்ருர்கள். ஆனல் பரஸ்பர நம்பிக்கை இல்லாதமையால் இதற்கு நேர்மாருன காரியங்களைச் செய்கின்றனர். ஜெனிவாவில் இரு சார்பினரும் பேசுவதால், 'ஜேர்மன்' மக்களின் சிக்கல்கள் ஓரளவாயினும் தீர்ந்து, பெரிய வல்லரசுத் தலைவர்கள் விரைவிற் கூடிப் பேச வழி செய்ய வேண்டும். இந்நிலைமை ஏற்படுமானல் பல தப்பான எண்ணங்கள் நீங்கவும், உலக நெருக்கடி குறையவும் வழி பிறக்கும்.

## புத்தரும் சங்கரரும்

திபேத்துக்கும் இந்தியாவுக்கும் சமய உறவு நீண்ட காலமாகவுள்ளதென்று நேருஜி கூறினர்.

இதை பீகிங்கிலிருந்து பஞ்சன்லாமா எதிர்த்துப் பேசுகையில், பௌத்த சமயத்தை இந்தியாவிலிருந்தே விரட்டிவிட்ட நிலையில், சமய உறவைப் பற்றிப்பேச நேருவுக்கு வாயேது? என்று ஒரு போடு போட்டார்.

புத்த பகவான் பாரத நாட்டிலே இந்துவாகப் பிறந்தவர். அவர் இந்துவாகவே மறைந்தார். மதம் மாறவில்லை. அவர் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த சமயம் உலகில் பல நாடுகளிற் பரவியிருக்கையில் இந்தியாவில்மட்டும் அது வெகுவாக மறைந்தது. இதைத்தான் பஞ்சன்லாமா இடித்துக் கூறுகின்ருர்.

* * *

இந்தியாவிலும் பௌத்த சமயம் பரவி வந்தது. தமிழ் நாட்டிலே சைவம் குன்றிச் சமணம் தலைதூக்கியது. அச்சமயம் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், மாணிக்க வாசகரும் தோன்றி, சைவத்துக்குப் புத்துயிர் அளித்தனர். ஆனல் அவர்கள் செல்வாக்கு வெகுவாகத் தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு உட்பட்டது.

* * *

பின்னர் சேரநாட்டிலே காலடி எனும் ஸ்தலத்தில் அவதரித்த ஆதிசங்கரர் வடக்கே காஷ்மீர்வரை நடந்துசென்று, வடமொழியில் வாதித்து இந்து சமயத்தை நிலைநாட்டினர். புத்தர்பிரான் மகாவிஷ்ணுவின் அவதாரமென்று கூறி, அவரது போதனைகளால், இந்து சமயத்தைச் சீர்திருத்தி, இந்து—பௌத்த வேற்றுமைகளை ஒழித்துச் சமய சமரசத்தை ஏற்படுத்தினர். இதனல் அவருக்குப் "பிரச்சன புத்தர்" என்றும் பெயருண்டு.

* * *

இந்து சமயத்துக் குள்ளாகவே பலவித பிளவுகள். கணபதி, முருகன், சிவபிரான், சக்தி, மகாவிஷ்ணு, சூரியன் முதலியவர்களை வழிபட்டனர். இதனல் சமயப் பிணக்குகள் ஏற்படாமல், 6 சமயங்களையும் ஒன்றுபடுத்தி "ஷண்மத ஸ்தாபகாசாரியார்" என்றும் ஸ்ரீ சங்கரர் புகழ்பெற்ருர்.

இதற்கெல்லாம் அப்பால் அத்வைத வேதாந்த நூல்கள் பல எழுதி இந்துசமயத்தின் விரிந்த அடிப்படையை விளக்கி எல்லாச் சமய சமரசத்துக்கு வழிவகுத்தார். இத்தனையும் தமது 32 வயதுக்குள் முடித்த ஆதிசங்கரர் அவதரித்த தினம் சென்ற புதன் கிழமை. புத்தர்பிரானின் ஜெயந்தி விழா வருகிற வியாழக்கிழமை!

* * *

புத்தரும், சங்கரரும் பாரத அன்னை உலகுக்கு அளித்த அருஞ் செல்வங்கள். புத்தர் பெருமான் நிர்வாணமடைகையில், இந்த 'தர்மதுவீப' மான இலங்கையில் புத்தசமயத்தைக் காக்குமாறு 'சங்கரரை' (சங்கரரை-சிவபெருமானை) வேண்டியதாயும், 'சங்கரர்', காக்கும் கடவுளாகிய மகாவிஷ்ணுவினிடம் இந்தப் பொறுப்பை ஒப்புவித்ததாயும் சிங்களவரின் மகாவம்சமும் கூறுகிறது.

இன்று பல புத்த ஆலயங்களிலும் மகாவிஷ்ணு விக்கிரகம் இருந்து பூஜிக்கப்படுவதைப் பார்க்கிருேம்.

பௌத்த சிங்களவர்கள் கதிர்காமம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று பக்தியுடன் முருகனை வணங்குகிருர்கள். முன்னேச்சரத்துக்குச் சென்று சிவபெருமானை வழிபடுகிருர்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

# மேனாட்டுத் தலைவர்கள் சந்திப்பு
## உலக சமாதானத்துக்கு உதவுவதாகும்

ருஷியப்பிரதமர் நிக்கிற்ரு குருஷேவ் அண்மையில் மேற்கு ஜெர்மனி பத்திரிகை நிருபர்களிடம் பேசும்பொழுது, வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகளின் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காவிடினும், உச்சி மாநாடு ஒன்று அதி விரைவில் நடைபெற வேண்டுமெனத் தாம் விரும்புவதாகக் கூறினர். அதேசமயம் அமெரிக்க ஜனதிபதி ஐசன்ஹோவரும் உச்சி மாநாடு நடைபெறும் என நம்புகின்ருர். வெளிநாட்டு மந்திரிகளின் சந்திப்பிலிருந்தே இது புலனாகிறது என்பது அவர் தம் கருத்து.

இன்றைய உலகநிலையில், உச்சிமாநாடு ஒன்று நடந்தே தீரவேண்டும். உலகமக்கள் யுத்த பீதியின்றிச் சமாதானமான சூழ்நிலையில் வாழுவதற்கு இது வழிகோலுவதாகும். உலகிடை இன்று இரண்டுதத்துவங்களுக்கிடையே போட்டி நடைபெறுகிறது. அவற்றில் முதலாளித்துவ தத்துவத்தின் முக்கிய பிரதிநிதியாக அமெரிக்காவும், தொழிலாளித்துவ தத்துவத்தின் பிரதிநிதியாகச் சோவியத் ருஷியாவும் விளங்குகின்றன. இப் போட்டியைப் பேச்சுவார்த்தைகள்மூலமும்,ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் நோக்கினல், இப் போட்டிக்கு ஒரு சமரச முடிவு காணுவது சாத்தியமாகும்.

முக்கியமாக ருஷியாவும் அமெரிக்காவும் தங்களிடையே கூட்டுறவு உண்டாக்க எல்லாவித நடவடிக்கைகளையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அமெரிக்கத் தலைவர்களும் ருஷியத் தலைவர்களும் ஒரே இடத்தில் சந்தித்து உலகப் பிரச்சினைகளைப் பற்றி மனம் விட்டுப் பேசினல், அது உலக சமாதானத்திற்கு முதற்படியாகும் எனலாம்.

இப்பொழுது இவ்விரு நாடுகளையும் நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை ஜெர்மனி பற்றியதேயாகும். மே மாதம் 27ஆம் திகதி கிழக்கு ஜெர்மனியிடம் எல்லை சம்பந்தப்பட்ட அதிகாரத்தையும், மற்றும் உரிமைகளையும் கொடுத்துவிட ருஷியா தீர்மானித்துவிட்டது. இதை மேனாட்டு வல்லரசுகள் எதிர்த்துவருகின்றன. ஆனல் இவ்விஷயம்பற்றிச் சமீபத்தில் குருஷேவ் கூறியுள்ள கருத்து யாதெனின்: அவசியமானல் கிழக்கு ஜெர்மனியைக் கிழக்கு ஜெர்மனி மக்களிடம் ஒப்புவிக்கும் நாளைப் பின்தள்ளிப்போடலாம் என்பதே. ஆகையால், ஜெர்மன் பிரச்சினையை ஆறுதலாக அலசி ஆராய அவகாசம் கொடுத்திருக்கிறது ருஷியா. இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஜெர்மன் பிரச்சினைக்கும், மற்றும் முக்கியமான பிரச்சினைகளுக்கும் முடிவுகாண மேனாட்டு வல்லரசுகளின் தலைவர்களும், ருஷியநாட்டினதும் மற்றைய கொம்யூனிஸ்ட் நாடுகளினதும் தலைவர்களும் முயலவேண்டும். குருஷேவ் இவ்வருடம் அமெரிக்காவுக்கு விஜயம்செய்யக் கூடுமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது. இதுவுமொரு நல்ல காரியமேயாகும். அத்துடன் அமெரிக்க உப ஜனதிபதி நிக்ஸனும் ருஷியாவுக்கு விரைவில் விஜயம்செய்யவிருக்கிருரெனவும் அறியப்படுகிறது. இவ்விதம் வல்லரசுகளின் தலைவர்கள் நடந்துகொள்வது உலகசமாதானத்தின் வெற்றிக்கு வித்திடும் செயலாகவே கருதப்படும்.

## பிரதமர் பண்டாவுக்கும் ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பொதுத்தேர்தல் நடந்ததுமே, தேசிய மந்திரி சபை அமைக்கும் பேச்சு எழுந்தது. சென்ற மேமாத கலவரங்களுக்குப் பின்பும் இந்தப் பேச்சு அடிபட்டது. டாக்டர் என். எம். இவ்விஷயமாக பிரதமருடன் பேசியதாயும், ஆனல் பிரதமரின் சில சகாக்கள் இதற்கு ஒப்பவில்லை என்றும் தெரிகிறது.

தேசிய மந்திரிசபை அமைப்பதாயின் இப்போதுள்ள மந்திரிகளில் யாரை விலக்குவது? பதவியை விட்டுவிட யாரும் தயாரில்லை. என். எம். புகுந்தால் தங்கள் செல்வாக்குக் குறைந்துவிடும் என்றும் அச்சம். ஆகவே அந்த யோசனை கைகூடவில்லை.

சமீபத்தில் டாக்டர் என். எம். முக்கும் பிரதமருக்கும் இவ் விஷயமாக மீண்டும் பேச்சு நடந்ததாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாயிற்று. இதை இருவரும் மறுத்தனர். என்ருலும் பிரதமரின் மந்திரி சகாக்களுக்குச் சந்தேகம் நீங்கவில்லை. இருவரும் சேர்ந்து, கையொப்பமிட்டு, புதிய அரசியல் யோசனைகளைத் தெரிவித்துள்ளது சக மந்திரிகளின் சந்தேகங்களை அதிகரிக்கச் செய்திருக்கும்.

### அவர்களின் அச்சம்

தங்களைக் கைவிட்டு, டாக்டர் என். எம்மைச் சேர்த்துக் கொண்டு இடதுசாரி அரசாங்கத்தைப் பிரதமர் அமைப்பாரோ என்று அச்சம் ஒரு பக்கம்.

இதுவரை பழைய பிணக்குகள் என்னவாயினும் அதை மறந்து சமசமாஜக் கட்சியினரை ஒத்துழைக்குமாறு மந்திரி பிலிப் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்ருர். **என். எம். பெரேராவும் பிலிப்பும் மீண்டும் நெருங்கிவருகின்ருர்கள்.** மந்திரி பிலிப் தமது கட்சியின் பெயரையும் "லங்கா சமசமாஜக் கட்சி" என்று மாற்றிக் கொண்டிருக்கிருர். இடதுசாரிக்காரர்கள் எல்லாரும் ஒன்றுபடவேண்டுமென்று, முன்னுள் பார்லிமென்ட் காரியதரிசியாக இருந்து கட்சிமாறிய திரு. டி. பி. சுபசிங்கா முயன்று வருவதும் பகிரங்க ரகசியம். இதற்கிடையே தேர்தலும் நெருங்கிவருகிறது. பிரதமர் பண்டாவின் போக்கை இப்பொழுதே திருப்பாவிட்டால் அவர் இடதுசாரிப் பக்கம் முற்ருகச் சேர்ந்து விடுவாரென்பதை உணர்ந்து, இப்பொழுதே 10 மந்திரிகளும் கூட்டாகச் சேர்ந்து, இந்த "ஸ்டிரைக்" மூலம் அவரைத் திருப்ப முயலுகின்ருர்கள்.

இந்த நெருக்கடி இப்போது சமரசமாகத் தீருமா? அல்லது இது முற்றி மந்திரி சபை கலைந்து, புதிய மந்திரி சபை அமைக்கப்படுமா? இது எப்படியாயினும், கொள்கை அடிப்படையில் வேற்றுமை அதிகரித்து வருகின்றது. மந்திரி சபையில் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு தற்காலிகமாகப் பூசி மெழுகப் பட்டாலும், இது எந்தச் சமயமும் முறிந்து, அரசியலில் பெரிய மாறுதல்கள் ஏற்படுவது சாத்தியமே.

பத்து சக மந்திரிகளும் அதிக பிடிவாதம் செய்தால், பிரதமர், இந்த பார்லிமென்டின் ஆயுள் காலத்திலேயே இம்மந்திரி சபையைக் கலைத்து, புதிய மந்திரி சபையை அமைக்கலாம். அதற்கான வாக்கு பலம் அவருக்குக் கிடைப்பது அசாத்தியமல்ல.

பெரிய சாணக்கியரான கவர்னர் ஜெனரல் சேர் ஆலிவர் குணதிலகா கூடுமான்வரை அவ்வித நெருக்கடி ஏற்படாமல் தடுக்கத் தம் செல்வாக்கைப் பயன்படுத்துவாரென்றே நம்பப்படுகிறது.

## புத்தரும் சங்கரரும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தர் கோவில்களுக்கு இந்துக்கள் சென்று அவரை ஒரு அவதாரமாகக் கருதி பிரார்த்திக்கிருர்கள். இரு சமயங்களுக்குமிடையே — பொது மக்களிடையே — எவ்வளவு ஒற்றுமையும் சமரசமும் இருக்கிறதென்பதற்கு வேறு அத்தாட்சி தேவையா?

* * *

இந்தியாவிலே புத்த கயா முதலிய புனித பௌத்த ஸ்தலங்களின் அபிவிருத்திக்காக பாரத நாடு லட்சக் கணக்கான பணம் செலவழிக்கின்றது. இந்திய தேசியக் கொடியிலும் அசோக தர்ம சக்ரத்தைச் சேர்த்தனர். சம்புத்த ஜயந்தி ஆண்டில் பிரயாணச் சலுகைகளை அளித்தனர்.

பாரத நாட்டில் இவ்வளவு சமய சமரசம் நிலவுகையில், அங்கிருந்து பௌத்தத்தை விரட்டியதாகக்கூறிப் புதிதாக சமயவேற்றுமைகளுக்குத்தூபம் போடுவதை கருணையே வடிவானபுத்தர் பெருமானும் ஒப்புவாரா?

—ஐயாறன்

## யாழ்ப்பாண இசை ஆர்வம் சுவாமிநாதபிள்ளை பாராட்டு

யாழ்ப்பாண மக்களுக்கு இசையில் மிகுந்த ஆர்வம் பிறந்திருப்பது பெரிதும் போற்றத்தக்கதெனச் சென்னை கர்நாடக சங்கீதக் கல்லூரி உபஅதிபரும் வேய்ங்குழல் நாயகமுமான திருப்பாம்புரம் என். சுவாமிநாதபிள்ளை யாழ்ப்பாணத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது கூறினர். இவ் வரவேற்பு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் அரசாங்கஅதிபர் திரு.எம்.ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்றது.

## நாவலர் பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது

அண்மையில் யாழ்ப்பாணம் நாவலர் கலவன் தமிழ்ப்பாடசாலை மூடப்பட்டிருந்தது. ஆனல், சென்ற 13ஆம் திகதியன்று அது திரும்பவும் திறக்கப்பட்டுள்ளது. பெற்ருேர்களின் வற்புறுத்தலின் மீது முகாமைக்காரர் எடுத்துள்ள நடவடிக்கை இது என அறியக்கிடக்கிறது.

## பரமேஸ்வர இலக்ஷ்ய ஜயந்தி

யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரியின் இலக்ஷ்ய ஜயந்தி இம்மாதம் 15-ம், 16-ம், 17-ம் திகதிகளில் கல்லூரிமண்டபத்தில் நடைபெறும். வெள்ளிக்கிழமை காலை நிகழ்ச்சிகளுக்கு சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமை வகிப்பார்.

## தமிழ்மறைக் கழகம் ஏழாவது திருக்குறள் மாநாடு

இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாளின்போது தமிழ்மறைக் கழகம் நடத்தும் ஏழாவது திருக்குறள் மாநாடு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மாணவர் மன்ற ஆதரவில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மண்டபத்தில் மே 22-ம், 23-ம், 24-ம் நாட்களில் நடைபெறும். திருக்குறட் சுவடி ஊர்வலம்; விரிவுரைகள், இசை நிகழ்ச்சிகள் முதலியன மாநாட்டில் இடம் பெறும். போட்டிப் பரிசுகள் யாவும் இம்மாநாட்டில் தொடக்க நாளில் மாலை 5 மணியளவில் வழங்கப்படும்.

## திருமலை வைபவம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கண்ட பரிசுத்த பாப்பாண்டவர் இவர்களுக்கென அயர்லாந்து கத்தோலிக்க பல்கலைக் கழகம் அமைத்து அச்சமுதாயத்தின் சமூக, அரசியல், கல்வி, முன்னேற்றத்துக்கு வழி வகுத்தார்: அதேபோன்று உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள தமிழினமும் தமக்கெனத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுவது அவசியமாகும். பல்கலைக்கழக கட்டடத்திற்கு 50 லட்சம் ரூபாயும், ஆய்வு கூடத்துக்கு 50 லட்சம் ரூபாயும் தேவை. திருக்கோணமலைக்கருகே உப்புவெளியிலுள்ள பரந்த விரிந்த காணிகளில் 200 ஏக்கர் நிலம் நன்கொடையாகவோ, அன்றிக் குறைந்த விலைக்கோ, பாரி மன்னன் வழி வந்த தமிழ் மக்கள் வழங்கமாட்டீர்களா? தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதால் மனம் நொந்து முகம் கோணி இருக்கும் தமிழன்னையின் நிலையை மாற்றுவோமாக."

### அறிவு எனும் ஒளி

பேராசிரியர் சின்னத்தம்பி பேசும்போது கூறியதாவது; முஸ்லிம் மனைகளில் தாயார் மகவுக்குப் பாலூட்டும்போதும், தாலாட்டும்போதும் தமிழிலேயே பாடுகின்றனர். எனவே முஸ்லிம்களின் தாய்மொழி தமிழேயாகும். தவிர, மலைநாட்டுத்தமிழரினது கல்வி வளர்ச்சிக்கும் முழுமூச்சுடன் பணி புரிவோம். சூரியன் தனது ஒளியினை மொழி, மதம், நாடு, எனும் வேறுபாடின்றி நல்குவது போன்று எமது பல்கலைக் கழகமும், அறிவு ஒளியினை அறியாமை தவழும் இடமெல்லாம் பரப்பும்.

### அனைவருக்கும் மகிழ்ச்சி

பேராசிரியர் பி. கே. சண்முகம், பேராசிரியர் எலியேசர் ஆகியோர் பேசுகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் சாதிமதபேதமின்றித் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் பணியாற்றுமெனத் தாம் நம்புவதாகக் கூறினர்.

ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பேசும் போது இலங்கையில் அக்கறை கொண்டுள்ள அனைவருக்கும் இப்பல்கலைக் கழகம் கல்வியூட்டவிருப்பதால் இலங்கை மக்கள் அனைவரும் இதையிட்டு மகிழ்ச்சியடையலாம் எனக் குறிப்பிட்டார். மூதூர்ப் பிரதிநிதி ஜனப் முகமது அலி முஸ்லிம்களின ஆதரவு இப்பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்தேயாகுமென உறுதி கூறினர்.

### கல் நாட்டினர்

பேராசிரியர்கள் மயில்வாகனம், டாக்டர் சின்னத்தம்பி, டாக்டர் எலியேசர், திரு.பி. கே. சண்முகம், திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. எஸ்.ஆர்.இராஜவரோதயம், மூதூர்ப் பிரதிநிதி திரு. முகமது அலி, திரு. எஸ். தொண்டமான், காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், வண. பிதா கிரௌதர், வவுனியாப் பிரதிநிதி திரு. ஸி. சுந்தரலிங்கம், மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. எஸ். இராஜதுரை, கோப்பாய் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம், தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா, திருமலை மாவட்ட உள்ளூராட்சித் தலைவர்கள் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் சிவசுப்பிரமணியம், எம். திருச்செல்வம், தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. தி. அண்ணமலை, மட்டக்களப்பு பட்டின சபைத் தலைவர் திரு. கனகசபை ஆகியோர் மங்கள வாத்தியம் ஒலிக்க அடித்தளக் கற்களை நாட்டினர். திரு. இராஜவரோதயம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

### ஆடல் பாடல்

அன்று மாலை நடைபெற்ற விருந்து வைபவத்தின் போது திருக்கோணமலை, மட்டக்களப்பு, கொழும்புஆகிய இடங்களிலுள்ள மாணவ மாணவிகளின் இசை,நடன நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடைபெற்றன.

## பூஜ்யம் தபால்

ஸ்ரீ பிலிப் குணவர்த்தன,
உணவு மந்திரி,
கொழும்பு.

தோழரே!

தங்களுக்கு 104· ஜுரம் என்றும் படுத்த படுக்கையாக இருப்பதாயும் கேள்விப் பட்டு வருந்துகின்றேன். 'இரும்பு மனிதன்' என்று பெயர்பெற்ற தங்களுக்கு ஏன் இப்படி? எவ்வளவுபேருடைய பொல்லாப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இது எப்படியாயினும், தாங்கள் சீக்கிரம் குணமடைந்து தங்கள் கடமைகளை மேலாகச் செய்ய வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

தங்களை ஒழித்துக்கட்டி, தொலைத்துத் தலைமுழுக எவ்வளவு 'பட்ட பட்ட' ஆசாமிகள் காத்திருக்கிருர்கள்! தங்களுக்குச் சீட்டுக்கொடுத்து விரட்டினல்தான் மந்திரிசபைக் கூட்டத்துக்கு வருவோமென்று பத்து மந்திரிகள இரண்டு வாரமாக "ஸ்டிரைக்" செய்தார்கள்.

ஆனல் சலசலப்புக்கு அஞ்சாத பனங்காட்டு நரிபோல, தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சாமல், கவலையும் படாமல் குஷியாகச் சற்றும் மனம் மாருமல் இருந்துவருகின்றீர்கள்.

ஒரு விவசாய உணவுமந்திரிக்கு என்னென்ன லட்சணம் வேண்டுமென்று, பிரதமர் நேருஜி, புதுடில்லியிலே அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்திற் கூறியுள்ளார். அதாவது, "அவருக்குத் தமது வேலை நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆவேச உணர்ச்சியும், துடிப்புமிருக்க வேண்டும்". கூட்டுறவுக் கொள்கையையும் அவர் மிகவும் வற்புறுத்திவருகிருர்.

இலங்கைக்கு அவ்வித லட்சிய விவசாயமந்திரி கிடைத்திருந்தும் தங்கள் அருமையை அறியாமல சிலர் தங்களைத் துரத்திவிடப் பார்க்கிருர்கள்!

தங்கள் அறிவாற்றல்களுக்கு இலங்கை மிகவும் சின்ன இடம் என்பதே என் கருத்து.

தங்கள் சமாச்சாரம் நேருவுக்குத் தெரிந்தால் கொழும்புத்திட்டப்படி தங்களை ஐந்து வருஷங்களுக்காவது, இந்தியாவின் விவசாய உணவு மந்திரியாக "இரவல்" தரும்படி தமது நண்பரான பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொள்ளலாம். இந்தியாவுக்குக் கிடைக்கும் நன்மை தானுக இலங்கைக்கும் கிடைக்கலாம். தாங்களும் இதை விரும்புவீர்களென்பதை நானறிவேன்.

தாங்கள் இந்தக் கைங்கரியம் செய்ய இந்தியாசெல்வதாயின், எல்லா மந்திரிகளும் தங்களுக்குக் குதூகலமாக மரியாதை செயது வழியனுப்பி வைப்பார்.


மந்திரிசபை நெருக்கடியும் நீங்கும். ஆனல் எனது இந்த யோசனை அம்பலமேறுமா!

இப்படிக்கு
"பூஜ்யம்"

குறிப்பு:—

ஒரு வேளை என் யோசனை எதிர்பாராத முறையில் நிறைவேறினல், தங்களுக்கு ஒரு வார்த்தைகூறத்தயவு செய்து அனுமதியுங்கள். இங்கு பலருக்கும் "பொட்டியா, மொஸ்டியா,..." என்றெல்லாம் பட்டப்பெயர் கொடுத்து தங்கள் சகாக்களை ஆத்திரமூட்டுகிறீர்கள். விவசாய மந்திரி பிறரை ஆத்திரமூட்டவும் வேண்டுமென்று நேருஜி கூறினர்தான். ஆனல் தங்கள் நாவைச் சற்றே அடக்காவிடில், நேருஜியின் மந்திரி சபைக்கும் நெருக்கடி ஏற்பட்டுவிடக்கூடும். அதனல் உஷார்!

"பூ"



நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

ஏ.

கே.

எஸ்.

அன்

சன்ஸ்



நகை

மாளிகை

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.


மாதர் பகுதி

# கொரியாவின் நாரிமணிகள்

## குழந்தை உள்ளம் படைத்தவர்கள்

— ஆர்சீவி —

பெண்கள் ஏன் முத்துக்களை விரும்புகிறுர்கள்? சில சமயம் முத்துக்கள்பிரதிபலிக்கும்படாடோபமற்ற தூய்மையான எழிலைத் தாங்களுமடைய தவிக்கிறுர்களோ அவர்கள்? முத்துக்களுக்கு கண்ணைப்பறிக்கும் அழகில்லைத்தான், ஆனுல் காத்திரமானதும் உண்மையானதுமாகிய காந்தியுடைய இந்த முத்துக்கள் தங்கள் அகத்தினூடே சுடர்விடும் சாந்தத்தையும் மகிமையையுமல்லவா எடுத்தியம்புகின்றன.

### நற் பண்பு

கொரியா தேசத்தின் பெண்களுக்கும் முத்துக்கள் போன்ற சிறந்த நற் பண்புகளிருப்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த நற் பண்புள்ள பெண் குலத்தின் வரலாறுகள் கேட்பதற்கினிமையானதும் ஆவல் ஊட்டுவனவாயு மிருக்கின்றன. அவர்களின் சிறப்பையறிவதற்கு அவர்கள் வாழ்க்கையின் இலட்சியத்தையும், குறிக்கோளையும், அவர்கள் எப்படிச் சிந்திக்கிறுர்களென்பதையும் நாம் நன்கு ஆராயவேண்டும்.

கொரிய நாட்டின் சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், இன்பத் தென்றலை நுகர முடியாது. துன்பமும் வியாதியும் யுத்தமும் கொரிய மக்களின் வாழ்க்கையின் சர்வசாதாரண நியதியாகக் கட்டுண்டிருப்பதைத்தான் பார்க்கமுடிகிறது. உலகம் அறிந்துதானிருந்தது கொரிய மக்களின் துர்ப்பாக்கியத்தை. ஆனுல் சிறிதளவில்தான். கொரிய மக்கள் துன்பத்தைக் கூடுதலாக அனுபவித்துவிட்டார்கள். இருந்தும் அவர்கள் அந்தத் துன்பத்தை மகிழ்ச்சிகரமாக வரவேற்ற உயர்ந்த பண்பை அவர்கள் முகங்களிலே ஒளிவிடும் புன்னகை எடுத்துக் காட்டுகின்றது. இந்த சகிப்புத் தன்மை கொரிய நாட்டுப்பெண்களிற்தான் கூடுதலாகக் காணப்படுகிறது. கோரமான யுத்தமும் வாழ்க்கைக்காகப் போராடும் நிர்ப்பந்தமும் கொரிய மக்களுக்கு ஒரு வித தைரியத்தையளித்து விட்டது. இதுவே அவர்களுக்கு ஓர் தனியழகையும் கொடுக்கிறது.

### ரூபலாவண்யம்

வெளித் தோற்றத்தில் அநேகமாக ஓர் கொரியாப் பெண், திலோத்தமையோ அல்லது ரம்பையோ அல்லது ஊர்வசியைப்போலோ அழகுத் தெய்வமாகக் காட்சியளிக்காவிட்டாலும் அவளின் ரூபலாவண்யம் அவளுக்கு ஓர் தனி சோபையையளிக்கிறது. அவளின் நிறம் தூய்மையான வெள்ளை ஆனுல் அவளின் கூந்தலோ "கார் மேகம்" அவ்வளவு கருமை. அவளின் வாதாங் கொட்டைக் கண்களிலிருந்து எத்தனையோ வரலாறுகளை நாம் அறிய முடிகிறது. அத்தனை உணர்ச்சிகளையும் பேசாத பேச்சால் கொட்டிவிடுகிறுள் ஒரு கொரியப் பெண்மணி. சுபாவத்திலேயே சிரிப்புடன் காட்சியளிக்கும் அவளின் கொவ்வை இதழ்கள் சிறிது விரிந்தால் முல்லை சிரித்தாற் போன்றுதானிருக்கும், அத்தனை அழகான பற்கள். உண்மையில் அவள் ஓர் மெல்லியவளாகத்தான் காட்சியளிக்கிறுள். மெல்லிய உடம்புள்ளவளானுலும் அவளின் சரீரம் வலுப்பெற்றிருக்கிறது. யப்பான் தேசத்துப் பெண்மணிகளின் பாவை போன்ற தோற்றமும் சௌந்தரியமும் இவர்களுக்கில்லை. ஆனுல் ஓர் கொரியப் பெண்மணியின் கட்டுமஸ்தான தேகக் கட்டும் அங்க லட்சுஷணங்களும் அவள் உடையணிந்த பின் கவர்ச்சிகரமாக விருக்கின்றன. கோடை காலத்திலே இவள் "நைலோன்" உடைகளையே அணிகிறுள். மாரிகாலத்திலோ இவள் கீழைத்தேச சித்திர வேலைகள் நிறைந்த அடர்த்தியான பருத்தி யுடைகளையே விரும்புகிறுள். ஒரு கொரியப் பெண்மணி தன்னுடைய நிறத்திற்கேற்ற பொருத்தமான வர்ணங்களையே தன்னுடைய உடை அலங்காரத்திலும் விரும்புகிறுள். அவளுக்கு அழகுள்ள பொருள்களென்றுல் அதிலே ஒரு தனி மோகம். ஆனுல் அழகுள்ள எல்லாப் பொருள்களையும் இவள் அடைய முடியாமல் இவளின் கட்டுமட்டான பொருளாதார நிலை தடுக்கிறது. வாழ்க்கையின் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்குப் பணம் வேண்டு மல்லவா!

### குணதிசயங்கள்

ஒரு கொரியப் பெண்ணின் வாழ்க்கை மிகவும் எளிமையானது. அவள் ஒரு சிறு வீட்டிலேயே வாழ்கிறுள். இங்கே நாங்கள் இருபதாம் நூற்றுண்டின் சாதனங்களான, சுத்தம் செய்யும் கருவியோ அல்லது உடைகள் மினுக்கும் மின்சாரக் கருவியோ அல்லது குளிர்ப் பெட்டிகளையோ காணமுடியாது. இவைகள் இல்லாமலேயே அவள் தனது குழந்தைகளையும் உடைகளையும், சுத்தமாகவே வைத்திருக்கிறுள். அவள் தனது உடைகளை, சலவைக் கல்லிலே தோய்த்துத்தான் சுத்தம் செய்கிறுள். இந்தத் துணிகளை அவள் உலர்த்தி வெய்யிலில் காய வைக்கும் போது அதன் பிரகாசம் கண்களைக் கூசவைக்கும். இவள் மிகவும் சிக்கனமாகவே தனது வாழ்க்கை ஓடத்தை யோட்டுகிறுள். எந்தப் பொருளையும் தேவையற்றதென்று கழிக்க மாட்டாள். ஒவ்வொரு சிறு துணியிலும் எஞ்சிய உணவிலும் இவள் ஓர் பிரயோசனத்தை அடைகிறுள். எவ்வளவு சாதுரியமான புத்தி! தனக்குக் கிடைத்ததிலிருந்து முழுப் பிரயோசனத்தையும் அடையவேண்டுமென்பதே இவள் வாழ்க்கைத் தத்துவம். அனேகமாக எல்லாக் கொரியாப் பெண்களும் கவர்ச்சிகரமான தோற்றத்தையுடையவர்களாகக் காணப்படுகிறுர்கள். இவர்களின் இந்தப் பண்புகளால்தான் கொரியத் தேசத்தில் கலப்பு மணங்கள் அதிகமாகவிருக்கின்றன.

### புத்திக் கூர்மை

கொரியப் பெண்ணெருத்தி மிகவும் புத்திசாலி. அவள் தனக்குச் சொல்லிக் கொடுக்கும் கல்வியை வெகு சீக்கிரத்திலேயே கற்றுவிடுகிறுள். ஆனுல் அவளின் கல்விவிருத்தி கொரிய நாட்டின் புராதன பழக்க வழக்கங்களால் தடைபட்டுவிடுகின்றது. அவள் தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தையறிய ஆவல் உடையவளாகக் காணப்படுகிறுள். அவளுக்குமே உலகத்திலிருக்கும் பல்வேறு பாகங்களில் வாழும் மக்களைப் பற்றியும் அறிய விருப்பமதிகம். அன்னியர்களையும் அறியாதவர்களையும் கூட சந்தேகத்திற்கிடமின்றி நம்பிவிடுகிறுள். கொரியப் பெண்மணிகளின் இந்தக் களங்கமற்ற குழந்தை சுபாவத்தை பல்வேறு நாட்டார் போற்றியுமிருக்கிறுர்கள். இவள் ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளவாறே கூறுவாள். இவள் இரக்கமும், பொறுமையும், ஜீவகாருண்யமும் நிறைந்தவள். மேனுட்டுப் பெண்மணிகளின் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் இவளிடம் தலைகாட்டமாட்டா.

மேனுட்டுப் பெண் ஒருத்திக்கு அந்தரங்கமான வாழ்க்கை அவசியமாகப்படுகிறது. அந்தரங்கமில்லாவிட்டால் இவள் தண்ணீரின் வெளியே எடுத்த மீன்போல் அவஸ்தைப்படுகிறுள். கொரியப் பெண்மணிகளுக்கோ அந்தரங்கம் அவசியமில்லையென்பதை அவள் சுகவீனமாகப் படுத்திருக்கும் அறையில் வேறு பலர் தத்தம் அலுவல்களையும் கவனிக்கும்காட்சி சான்றுபகருகிறது.

கொரியாப்பெண் தனது சமயத்தைப் பெரிதும் மதிக்கிறுள். அவள் சமயக்கொள்கைகளே அவள் வாழ்க்கையின் இலட்சியங்கள். அவளுக்கு மற்றவர்களுடன் அனுவசியமாகத் தனது மார்க்கத்தைப்பற்றி விவாதிக்கவிருப்பமில்லை. ஆனுல் பிழைகளை மற்றவர் எடுத்துக்காட்டினுல் அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறுள். அவளுக்கு நிகர் அவளேதான்.

### தாயும் சேயும்

மார்க் டுவெயின் (Mark Twain) என்னும் பிரபல எழுத்தாளர் ஒருமுறை இவ்வாறு கூறினுர்:

"ஒரு நாடு எவ்வளவுதூரம் நாகரிகத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறதென்பதை அந்த நாட்டின் தாய்க்குலம் எவ்வாறு தங்கள் சேய்களைக் கவனிக்கிறுர்களென்பதிலிருந்து அறிந்துவிடலாம். ஆம் இதிலென்ன சந்தேகம். இன்று கொரிய தேசம் உலகிலுள்ள நாகரிகமடைந்த நாடுகளிலொன்றுகத் திகழ்வதற்கு கொரியதேசத்துத் தாய்மார் தான் காரணமென்பதை யார் தான் மறுக்கமுடியும்?

கொரியப் பெண்மணி சேய்களைக் கவனிக்கும்பொழுது பார்ப்பதற்கு அழகாகத்தானிருக்கும். பிறந்தநேரம்தொட்டு நன்றுகவளரும்வரை ஓர் கொரியக்குழந்தை தனது தாயின் அரவணைப்பிலேதானிருக்கிறது. நன்றுக வளர்ந்தபின்னும் ஒரு கொரியக் குழந்தை அது ஆண்குழந்தையாயினும் சரி, பெண் குழந்தையாயினும் சரி தனது அன்றுட அலுவல்களைக் கவனிப்பதற்கும் அந்தரங்க ஆலோசனை நடத்துவதற்கும் தாயையே நாடுகிறது. ஆனுல், இன்று கொரிய தேசத்துப் பெண்மணிகளுக்கு கொரிய சமூகத்திலிடமில்லை. இவர்கள் ஆண்களுக்கடிமையாகக் கருதப்படுகிறுர்கள். எப்பொழுது ஒரு கொரியப் பெண்ணின் கழுத்தில் 'திருமணம்' என்ற கயிறு விழுகிறதோ அப்பொழுதே அவள் அடிமையாகிவிடுகிறுள். பேச்சுச் சுதந்திரமற்று வீட்டிலேயே கைதியாகிவிடுகிறுள். மணமாகித் தற்செயலாக இளம் வயதிலேயே விதவையாகிய கொரியப்பெண் மறுமணம் செய்வதை கொரியசமூகம் அங்கீகரிக்கமாட்டாது. கொழுநனையே கொழுகொம்பாகப்பேணும் பெண்குலம் கொழு கொம்பு முறிந்ததும் படும் வேதனை! அப்பப்பா, வார்த்தைகளால் சொல்லமுடியாது. ஒருநேர உணவிற்காகத் தெருத்தெருவாகச் சுற்றிச் சில்லறைச் சாமான்கள் விற்கும் இளம்கொரியவிதவைகளை, இன்னும் கொரியதேசத்தில் காணலாம். ஆம், விதவைக்குகொரிய தேசத்தில் புனர்வாழ்வில்லை.

நாகரிகத் தென்றல் நர்த்தனமாடும் அந்தக் கொரிய தேசத்திலேயே இந்த அநாகரிகப் பேய்க்காற்று!

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 23-5-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினுல் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**( 16-5-59 )**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..............................................

விலாசம்..........................................

..........................................

..........................................

கையொப்பம்

..........................................

பெற்றுர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது...............

இங்கே வெட்டவும்

# சிறுவர் பகுதி

## கருணையுள்ள கள்வன்

மா. இந்திராணி [ப. எண். 33]

முன்னொரு காலத்தில் விஜயபுரி என்ற நகரில் ஒரு கள்வன் இருந்தான். அவன் பெயர் மாயாண்டித்தேவன். மாயாண்டித்தேவன் உயிர்களிடத்தும் ஏழைகளிடத்தும் அன்புள்ளவனாய் இருந்துவந்தான். பணத்தைப் பதுக்கிவைத்திருக்கும் பிரபுக்களே அவன் எதிரிகள். செல்வந்தர்களின் இல்லங்களிலுள்ள பணத்தைத் திருடி ஏழைகளுக்கு அளித்து வந்தான். பிரபல கொள்ளைக்காரனாகிய மாயாண்டித்தேவனைப் பிடிப்பதற்கு நகரபாதுகாவலரும் துப்பறியும் நிபுணர்களும் முயன்றுவந்தனர். ஆனால் மாயாண்டி அகப்படவில்லை. ஏழைகள் மாயாண்டியைத் தங்கள் கலிதீர்க்கவந்த தெய்வமெனப் போற்றிவந்தனர். ஒரு நாள் இரவு மாயாண்டி ஒரு செல்வன்வீட்டிற் கொள்ளை அடித்தபொருள்களை ஏழைகளின் இல்லங்களிலிட்டுவிட்டுத் தனது வீடுநோக்கி விரைந்தான். அவனது ஒரு சிறிய குடிசை ஒரு பெரிய காட்டின் நடுவே அமைந்திருந்தது. பாதி தூரம் காட்டின் நடுவே வரும்போது ஒரு சத்தம் கேட்டு மாயாண்டி நின்றான். அவனை நோக்கி ஒரு குதிரை வந்துகொண்டிருந்தது. அதன்மேல் ஒரு மனித உருவம் கைகால்கள் கட்டப்பட்டுப் பேச்சு மூச்சற்றுக் கிடந்தது. அவ்வுருவத்தின் உடலில் ஆங்காங்கே உதிரம் வழிந்துகொண்டிருந்தது. இதைக்கண்ட மாயாண்டி விரைந்துசென்று அவ்வுருவத்தைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டைநோக்கி ஓடினான். குதிரையும் அவன்பின்னால் சென்றது. தனது குடிசையை அடைந்த மாயாண்டி அவ்வுருவத்தைக் கட்டிலிற் கிடத்தி சிகிச்சை அளித்தான். சிறிது நேரத்தின்பின் அவ்வுருவம் மயக்கம் நீங்கி எழுந்தது.

மாயாண்டி அவ்வுருவத்தை நோக்கி நீ யார்? எப்படிக் காட்டினுள் அனுப்பப்பட்டாய்? என்று வினவினான். தனக்கு உயிர்ப்பிச்சை அளித்த மாயாண்டியை வணங்கியபடி அம்மனித உருவம் கூறியது; ஐயா, நான் மகிழநாட்டு மன்னன். சதிகாரர்களின் சூழ்ச்சியால் இந்நிலையை அடைந்தேன். என்னைக் கொன்றுவிட்டுத் தான் அரசனாக விரும்பினான் என் மந்திரி. ஆனால் அச் சூழ்ச்சி பலிக்கவில்லை. கொடிய கானகத்தில் நீங்கள் எனக்குத் தெய்வம்போல் வந்து உயிர் அளித்தீர்கள். தாங்கள் யார்? என்றான் மகிழநாட்டு மன்னன். மன்னா! என்னை நீங்கள் யாரென்று அறிந்தால் உடனேயே கொன்றுவிடுவீர்கள். நான் தான் விஜயநகரத்திலுள்ள பிரபல கொள்ளைக்காரன் மாயாண்டித்தேவன் என்று கூறியவண்ணம் மன்னனின் காலடியில் விழுந்தான் மாயாண்டி. மன்னன் அதைக் கேட்டு ஆச்சரியத்துடன் கருணையுள்ளம் படைத்த நீ எவ்வாறு திருடத் துணிந்தாய்? என்றான். மன்னா! பணம் பணமென்று ஏழைகளின் வயிற்றிலடித்துப் பொருள் சேர்க்கும் செல்வந்தரின் பணத்தைத் திருடி ஏழைகட்கு அளித்து அவர்கள் இன்னல்போக்கி வாழ்கின்றேன் என்றான் மாயாண்டி. மறுநாள் பொழுது விடிந்ததும் மன்னனும் மாயாண்டியும் மகிழநாடு நோக்கிக் குதிரையிற் பயணமானார்கள். மன்னன் இந்நேரம் மறைந்திருப்பான். நாமே இனி மகிழநாட்டு மன்னன் என்று எண்ணி இறுமாப்படைந்து மகிழ்ச்சியோடு இருந்தான் மந்திரி. அரண்மனையை அடைந்த மன்னன் காவலாளரை நோக்கி மந்திரியைக் கைதுசெய்யுங்கள் எனக்கட்டளையிட்டான். மறுநாள் மகிழநாட்டின் ஒருபகுதி மாயாண்டித் தேவனுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. மகிழநாட்டுமன்னன் நந்திவர்மன் மாயாண்டிக்கு வேண்டுமளவு பொருளும் ஈந்தான். பெருஞ்செல்வத்தைப் பெற்ற மாயாண்டி ஏழைகளின் துன்பம் நீக்கி இன்பமுடன் வாழ்ந்தான்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

181. ந. தவகுலசிங்கம், ஏழாலை வடக்கு, சுன்னாகம்.

182. வி. சித்திரவேல், 7-ம் வட்டாரம், சம்பூர், மூதூர்,

183. தா. குமாரகுலசிங்கம், இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

184. சி. புஷ்பநாதன், C/o சிவகுருநாதன், சரசாலை, சாவகச்சேரி.

185. சி. புஷ்பராணி, சரசாலை, சாவகச்சேரி.

186. பி. எஸ். அல்பிரட், 37/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

187. எஸ். ஜி. கணேசவேல் 88, புதிய வீதி. கொட்டடி,/ யாழ்ப்பாணம்.

188. க. இரவீந்திரன், "அன்பகம்", கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

189. சி. ஜெயரூம், தொல்புரம், சுளிபுரம்.

190. மு. சிவகாந்தி, 56, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

191. வ. க. பாலசுப்பிரமணியம், 1-ம் கட்டையடி, கச்சாய் வீதி, கப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

192. கி. சதாசிவசர்மா, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

193. சி. திருச்செல்வம், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

194. சி. சிவலோகதேவி, ஆனைக்கோட்டை.

195. ப. சந்திரதிலகம், தும்பளை, பருத்தித்துறை.

196. கு. இராதாரமணன், 47, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி..

197. பி. எஸ். அல்பிறட், 37/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

198. சூ. பி. யோகேஸ்வரன், அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருமலை.

199. கா. ஜெயகௌரி, 80, பெருந்தெரு, திருக்கோணமலை.

200. . சி. பாலசுப்பிரமணியம், "சண்முகவாசா" மாவிட்டபுரம் வடக்கு, தெல்லிப்பளை.

செல்வச் சிறுவர்களே!

விடுமுறை காலத்தைக் குஷியாகக் கழித்துவிட்டு மீண்டும் புத்தகப் பையுடன் பள்ளிக்கூடம் செல்வதை உங்களிற் பலர் விரும்பமாட்டீர்கள்தான். ஆனால் நண்பர்களோடு ஆனந்தமாகப் பேசுவதற்கும் அவர்களுடன் ஓடி விளையாடுவதற்கும் பள்ளிக்கூடம் போலச் சிறந்த இடம் வேறு என்ன இருக்கின்றது? ஆம், வகுப்புப் பாடங்களை முடித்துக்கொண்டு மாலை நேரங்களில் ஓடி ஆடித் திரியலாம் அல்லவா?

சின்னமாமா

## நிலா!

இளம் விழியன் [ப. எண். 277]

வட்ட நிலா வானிலே,
பொட்டுப் போல தோன்றுது!
தொட்டுக் கையில் எடுக்கு(ம்)முன்,
தூரத் தூர ஓடுது! (1)

பாலர் ஆடும் பந்துபோல்,
பார்க்க நிலா தோன்றுது!
பாலர் எடுத்து ஆடு(ம்)முன்,
பாய்ந்து மேகம் மறைக்குது. (2)

தங்க ஓடம் போலவே,
தகத கென்று தோன்றுது
தங்கை அதில் ஏறு(ம்)முன்,
சட்டெனவே மறையுது! (3)


மறைந்த நிலா சிறிதுநாள்,
மகிழ்வு குன்றி வீட்டினுள்,
மறைந்திருந்த பின்னரே,
மகிழ்வு கொண்டு வருகுது! (4)

## அறிவைப் பெருக்குங்கள்

1. புதுச்சீனத்தின் புதிய தலைவர் யார்?
2. (i) இலங்கையின் இவ்வருஷப் 'பள்ளிக்கூடக் கிரிக்கெட் விளையாட்டுக்காரர்' யார்? (ii) அவர் எக் கல்லூரியைச் சேர்ந்தவர்?
3. இலங்கையின் பிரதம நீதிபதி யார்?
4. இலங்கையின் ஸ்தல ஸ்தாபன, கலாசார மந்திரியின் பெயர் என்ன?
5. இலங்கை மேற்சபை (Senate)யின் தலைவர் யார்?
6. (i) உலகத்தில் சனத்தொகை கூடிய நாடு எது? (ii) அச் சனத்தொகையின் எண்ணிக்கை என்ன?

[விடைகள் 14-ம்பக்கம்பார்க்க]

## அறிஞர்கள் வரலாறு: II அணுச்சக்தியின் சிற்பி



**உயர்தரப் படிப்பு:--** தனது Ph. D. பட்டத்தைப் பெற்றதும், பேர்மி ஜெர்மன் பல்கலைக் கழகங்களுக்குச் சென்றார். அவருடைய பரந்த அறிவும், சுய புத்தியும் அவரை ஓர் எதிர்கால மேதாவி என்பதை எடுத்துக் காட்டின. ஜெர்மனியிலிருந்து, தாய் நாடான இத்தாலிக்கு அவர் புகழ் பரவியது. அங்கு புலொரென்ஸ் பல்கலைக் கழகத்தில் அவருக்கு உத்தியோகம் அளிக்கப்பட்டது. அங்கு மின் அணுக்களைப்பற்றி அவர் செய்த ஆராய்ச்சிகளே அவருக்கு உலகம் முழுவதும் புகழ் பெற்றுத் தந்தன.

**தலைவர்:—** 1926-ஆம் ஆண்டில் உரோமாபுரி பல்கலைக்கழகம், டக்டர் பேர்மிக்கு பிரகிருதிச் சாஸ்திரத்தில் ஓர் ஆசனம் அளித்தது. 1928-ஆம் ஆண்டில், இத்தாலியிலுள்ள கலாச்சார அலுவல்களை மேற்பார்வை செய்யும் **ரேயல் இத்தாலிய அகெடமி** அவரைத் தனது அங்கத்தவராக்கிக் கொண்டது. உத்தியோக பூர்வமான அலுவல்கள் அநேகம் அவருக்கிருந்தபோதிலும், அவரது ஆராய்ச்சிகள் உறுதியுடன் தொடர்ந்து நடைபெற்றன. அவரிடம் கல்வி பயில்வதற்காக அந்நிய தேசத்து மாணவர்கள் உரோமாபுரியை நோக்கிப் படையெடுத்தனர்!

**திருமணம்:—** விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த பொழுதிலும், அவர் வாழ்க்கையில் காதல் அரும்பத்தான் செய்தது. அது 1928-ஆம் ஆண்டில் திருமணமாக மலர்ந்தது. அவர் திருமணம் அவருக்கு இரு குழந்தைச் செல்வங்களை அளித்ததுடன், தன்னுடைய ஆராய்ச்சிகளில் ஊக்கமும், உதவியும் அளிக்கக்கூடிய ஒரு மனைவியையும் அளித்தது. அவர் மனைவியின் பெயர் லோரா கப்பொன்.

(தொடரும்.)

## சகோதர பாசம்

ஆ. சாவித்திரி [ப. எண். 49]

"மக்களாகிய நாம் ஊதாரிகளாகத் திரியப்படாது. மற்றவர்களுக்கும் நமக்கும் பயன்படக்கூடிய காரியத்தைச் சரிவரச் செய்து வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும்" என்று மோகன் தன் தம்பியாகிய ராஜுவுக்குக் கூறினான். அவ்வளவு வார்த்தைகளும் பிரயோசனப்பட்டதா? இல்லை. புறக்குடத்திலே வார்த்த நீராயிற்று. பாடசாலை மணி அடித்ததும் ராஜு தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு கும்மாளம் அடித்தான். மற்றவர்களைக் கேலி செய்வது, வலியச் சண்டைக்கு இழுப்பது இவைகளைத்தான் ராஜு பாடசாலையில் கற்றுக்கொண்டான்.

அண்ணனது போதனைகள் அவனுக்கு வேம்பாயின. கூட்டாளிகளின் தூண்டுதலின் மேல் வேற்றூருக்குச் சென்றான். அடுத்துக் கெடுக்கும் நயவஞ்சகர்கள் அவனைச் சூதாட்டத்துக்கு அழைத்தனர். எடுத்த எடுப்பிலேயே அவனது அதிட்டம் ஆயிரம் ரூபாய். அவனுக்கு இனி அண்ணனைப்பற்றிய நினைவு எப்படி வரும்? அவன் உறவினர் சூதாடிகள் இருக்கிறார்களே!

ஆனால் தம்பியைக் காணாத மோகன் மனம் பதறியது. "நான் என் பெற்றோருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றாத பாவியானேன்" என்று கதறினான். கெட்டவர்கள் என்றும் கெடுவதில்லையே. என்றாவது ஒரு நாள் திருந்துவார்கள். ராஜுவினுடைய சூதாட்டப்பணம் எவ்வளவு காலத்துக்குப் போதும்? அவனுடைய பணம் கரையத் தொடங்க அவன் நண்பர்கள் அற்றகுளத்து அறுநீர்ப் பறவையாயினர்.

ஒரு முறை இரு முறை வெற்றி கிட்டும், எப்போதும் கிட்டுமா? பணமில்லை. வாழ வழி? அவன் மனம் போராடியது.

களவெடுத்து அற்ப முயற்சியில் பணம் சேர்க்க ஆசைப்பட்டான். அதன் பலனாகப் பிடிபட்டான். சிறைச் சாலையில் அவன் மனக் கண்ணில் அவனது மூத்தோன் முன்பு கூறிய புத்திமதிகள் நிழற் படம்போல் காட்சியளித்தன. அண்ணனிடம் மன்னிப்புக்கோரி, அவனிடம் மனம் விட்டு அழ வேண்டும்போல் தோன்றியது.

இவற்றை நண்பர் மூலம் கேள்வியுற்ற மோகன் மனம் துடித்தது. கதறிக்கொண்டு ஓடி வந்தான். அண்ணனைக் கண்ட தம்பி என்ன செய்தான் என்று சொல்ல வேண்டுமா? மோகன் தம்பியை விடுதலையாக்கி அவனைக் காப்பாற்றினான். என்னே! சகோதர பாசம். அன்று தொடக்கம் ராஜுவுக்கு மோகன் அண்ணன் மட்டுமல்ல, தந்தையாகவுமிருந்தான்.

சிறுகதை

# வெந்தணலால் வேகாது….

— வ. அ. இராசரத்தினம் —

இராம இராவண யுத்தம் முடிந்துவிட்டது. தனது நிகும்பலை யாகத்தின்பின் எதிரிகளை ஒரே மூச்சில் ஒழித்துக்கட்டிவிட எண்ணியிருந்த மாவீரன் இந்திரசித்தன் போய்விட்டான். எதிரியைக் கும்பிட்டு வாழமுடியாமல் அண்ணனுக்காகக் கூற்றையே ஆடல்கொண்டு விட்டான் கும்பகர்ணனும். ‘தன்னையே’ நோக்கி நெடும் பகை தேடிக்கொண்ட இராவணனும் கடைசியாகப் போய்விட்டான்.

நெருப்புப் பிடித்து எரிந்த காட்டிலே எஞ்சியிருந்த மொட்டை மரம்போல விபீஷணன் மட்டும் மிஞ்சினான்.

விபீஷணன் விரும்பியது போலவே இராமர் அவனுக்குத் தன்கையாலேயே இலங்கையின் மணிமுடியைச் சூட்டிவிட்டார். இப்போது அவன் இலங்கை மன்னன்!

மன்னனா? விபீஷணன் யாருக்கு மன்னன்? கனிதொடர் குரக்குச் சேனையழித்த காட்டிற்கா? இடிந்து தரைமட்டமாகிக் கிடக்கும் இலங்கா நகரத்திற்கா? யாருக்கு?

சரித்திரம் கண்டும் கேட்டும் இராத மகத்தான போரிலே மானமும் வீரமும், இராஜ விசுவாசமும் உள்ள இலங்கை யுவர்கள் எல்லாருமே மாண்டுவிட்டார்கள். எஞ்சியிருந்த பெண்களும் வயோதிபர்களும் விபீஷணனைத் தம் மன்னனாக மனத்தால் ஒப்பவில்லை. அப்படியானால் விபீஷணன் யாருக்கு மன்னன்?

“எங்களுடைய அரசர் அவையிலே தேவர்கள் ஏவல் செய்தார்கள். எங்கள் பெண்களைத் தேவமாதர் நீராட்டினார்கள். அப்படியான மாவீரர் இருந்து ஆண்ட இலங்கைச் சிம்மாசனத்திலே, இராச்சியத்துக்கு ஆசைப்பட்டு அண்ணனையே காட்டிக்கொடுத்த துரோகியா இருப்பது? சீ…

மானமுள்ள ஈழமக்கள் விபீஷணனை இப்படி வெளிப்படையாகவே திட்டினார்கள். போரிலே வெற்றி பெற்ற இராமனே வந்தாற்கூட அவர்களை அடக்கியாள முடியாதுபோல விபீஷணனுக்குத் தோன்றிற்று.

ஆனாலும் ‘நான் என்ன செய்வது? அண்ணன் நீதி பிறழ்ந்து தகாத காரியத்தைச் செய்ததாலல்லவா நான் நாட்டை ஆள வேண்டி வந்தது. எப்போதும் ‘மறத்தை அறம் வெல்லும்’ என்று தத்துவார்த்தம் பேசிக்கொண்டு இலங்கையை ஆளத்தான் முயன்றான் விபீஷணன்.

ஆனால் அவனுக்கு மந்திரியாக அமைய நாட்டிலே எந்தத் துரோகியும் இருக்கவில்லை. தமையனைக் காட்டிக்கொடுத்த துரோகிக்குக் குற்றேவல் செய்து வாழ்வதைவிட உயிரையேவிடத் தயாராக இருந்தனர் மக்களெல்லாம்.

வெறிச்சென்று கிடக்கும் அரண்மனை, தன் முகத்திலேயே விழிக்க விரும்பாத மக்கள், அண்ணனைக் காட்டிக்கொடுத்த துரோகி என்று மக்கள் தூற்றும் பழிச்சொல்…… விபீஷணனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல இருந்தது.

அரண்மனையில் இருப்புக்கொள்ள முடியாத விபீஷணன் எழுந்து கால்போன திக்கில் நடந்தான்.

அரண்மனையில் இருந்து நகரத்திற்குச் செல்லும் அந்த ராஜபாட்டையில், இருமருங்கிலும் நிரைத்துநின்ற மாட மாளிகைகள் எங்கே? கூட கோபுரங்கள் எங்கே? அம் மாளிகைகளிற் கேளிக்கைகளிற் களித்துநிற்கும் மக்கள் எங்கே? ஒரே சுடுகாடாகவல்லவா இருக்கிறது. பிண வாடை… துர்க்கந்தம்… பிலாக்கணம்… இராகவா! இப்படி ஒரு நாட்டிற்கா நான் மன்னனாக வர வேண்டும்?

விபீஷணனின் தலைசுற்றியது. எங்கே போகிறேன் என்ற பிரக்ஞையே இன்றி அவன் போய்க்கொண்டிருந்தான்.

எங்கிருந்தோ ஒரு கிழட்டுக் குரல் கேட்கிறது. “அண்ணனைக் காட்டிக்கொடுத்த துரோகி ஊர்வலம் வருகிறான். ஒளிந்துகொள்ளுங்கள். அவன் முகத்திலேயே விழிக்கக் கூடாது.”

விபீஷணனின் எண்சாண் உடம்பும் அவமானத்தில் ஒரு சாணாகக் குறுகியது. கூனிக் குறுகியபடியே அந்தக் குரல் எட்டாத தூரத்திற்கு ஓடிவிட வேண்டும் என்று எண்ணியவன்போல ஓடினான். அந்தக் குரல் அவனைத் துரத்துவது போல இருந்தது.

நான் இராச்சியத்திற்கா ஆசைப்பட்டேன்? அதற்காகவா அண்ணனைக் காட்டிக்கொடுத்தேன்? ஏமாற்றமும், குழப்பமும், அவமானமும் சுழியிடும் விபீஷணன் மனத்திலே கேள்விகள் மிதந்தன.

“இல்லை. அறம் வெல்வதற்கு நான் துணைபுரிந்தேன்” என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே விபீஷணன் எங்கே போகிறேன் என்ற பிரக்ஞையேயின்றி நடந்தான்.

அப்படியானால் ஏன் நான் இராச்சியத்தைக் கையேற்றிருக்க வேண்டும்? நான் இல்லாவிட்டால் இந்த ராச்சியத்தை ஆள்வது யார்? அண்ணனோடு இலங்கை ராச்சியமும் அழிந்துவிடத்தான் வேண்டுமா?

தானே மன்னனாகவும், பிரஜையாகவும், தானே தானாக, தானே எல்லாமாக மனத்துள் தர்க்கம் பண்ணியபடியே விபீஷணன் நடந்தான்.

ஒழுங்கு நியதி ஏதும் இன்றி தறிகெட்டு ஓடும் அவன் சிந்தனையிலே ஒரு திடீர்த் திருப்பம். ‘இராச்சியத்திற்காக அண்ணனைக் காட்டிக்கொடுத்த துரோகி என்று இலங்கை மக்கள் சொல்கிறார்கள். எல்லாம் அறிந்த இராகவன் எப்படி நினைத்தான்?

நான் அவனைச் சரணடைந்த போது ‘இந்தா வீடணா இலங்கா ராச்சியம்’ என்று சத்தியம் செய்துதானே என்னை வரவேற்றான். குகனையும், சுக்கிரீவனையும் தழுவிக்கொண்டதுபோல என்னைத் தழுவிக்கொள்ளவில்லை. ‘சமயத்தில் அண்ணனைக் கைவிட்ட துரோகி’ என்று சுக்கிரீவன் ஏற்கெனவே இராமனுக்குச் சொல்லியிருந்தானாம். அதை அவரும் நம்பியிருந்தார்.

அநுமன் இல்லாவிட்டால் அவர் என்னை ஏற்றுக்கொண்டிருப்பாரா?

சந்தேகத்தோடு என்னை ஏற்று, பயன்கருதிய நட்பு என்ற எண்ணத்தோடுதான் இராகவன் இலங்கை இராச்சியத்தை எனக்களித்தாரா?

குட்டை குழம்பிய விபீஷணன் மனச்சகதியிலே குமிழியாய்க் கிளம்பிய கேள்விகட்கு அவனால் விடையளிக்கவே முடியவில்லை. விண் விண்ணென்று இடிக்கும் நெற்றிப் பொட்டைக் கையால் அமுக்கிப் பிடித்துக்கொண்டு எங்கோ நடந்தான். அவன் நோக்கற்ற நடையிலே செயலற்ற ஓர் அமைதி பிறந்தது. “எல்லாம் விதிப்பயன். அறம் வெல்வதற்கு நான் ஓர் கருவியாக இருந்தேன். அவ்வளவுதான்” என்ற மங்கலான தெளிவுதான் அவனுக்கு ஏற்பட்டது.

“தம்பி. அறம் வெல்லலாம். ஆனால் நீ இல்லாமல் அறம் வென்றிருக்காதா?”

யார் பேசுவது? இடிந்து நிலமாய்க் கிடக்கும் அரண்மனைக் கற்குவியல்களிடையே இருந்து கும்பகர்ண அண்ணாவா பேசுவது?

ஆமாம். நான்தான் கேட்கிறேன். நீ இல்லாமல் அறம் வெல்லமுடியாதா?

“அறம் வெல்வதற்குத் துணைபுரிவது நம் கடமை இல்லையா அண்ணா?”

கடமை! அண்ணனுக்குச் செய்யவேண்டிய கடமையை விடவா? விபீஷணா! நானுங்கூட அண்ணனுக்கு அற உபதேசம் செய்தேன். அவர் கேட்கவில்லை என்பதற்காக எதிரியைச் சரணடைந்து அவரைக் காட்டிக்கொடுக்கவில்லை. அதனால்தான் உன்னை மானமுள்ள எல்லோருமே துரோகி என்கிறோம்.

“அண்ணா! நான் தீர்மானிக்க முன்னமேபெரியண்ணாஎன்னைப் போவென்று விரட்டிவிட்டாரே.”

“இல்லை. என் கண்ணில் விழிக்காதே போ என்றுதான் அவர் ஆத்திரத்தில் சொன்னார். இராமனோடு சேர்ந்து என்னைக் காட்டிக்கொடு” என்று சொல்லவில்லை.

“அண்ணா! இராமனோடு நட்பாக இரு” என்று அன்று அறிவுரை புகன்ற நீங்களுமா என்னை ஏளனஞ் செய்கிறீர்கள்?

இராமனுடன் நட்பாயிரு என்று சொன்னேன். ஏன்? போரிலே நாங்கள் எல்லாம் மாண்டு மடிந்தால் ‘ஆதிநூல் மரபினாலே கடன்களும் ஆற்றி’ என்று சகோதரன் என்ற உரிமையோடுகூடச் சொன்னேன். தம்பி! இராமனோடு நட்புப்பூண்டது வேறு. அண்ணனைக் காட்டிக் கொடுத்தது வேறு. இந்திரசித்தனின் நிகும்பலை யாகத்தைக் கெடுக்குமாறு எப்போதாவது உன்னிடம் நான் சொன்னேனா?

“ஆமாம்! அதைக் கேளுங்கள் சித்தப்பா” என்ற சிம்மகர்ச்சனை எங்கிருந்தோ கேட்டது.

“மகனே! நீயுமா அறவழி தப்பிவிட்டாய்?” என்று அலறினான் விபீஷணன்.

அறவழியாம் அறவழி! எனது நிகும்பலை யாகத்தைக் கெடுத்த எக்களிப்பால் அறத்தைப்பற்றி உபதேசிக்கிறீரா? நீர் பேசும் அறம், பழிபடவந்த உமது செய்கையை என்றைக்குமே மறைத்துவிடாது.

நான் ஒருபழியுஞ் செய்யவில்லை மகனே! அறம் வெல்வதற்கு ஒரு கருவியாக இருந்தேன்’ என்ற பழைய தத்துவத்தையே திருப்பியடித்தான் விபீஷணன்.

மகனா? என்னை மகன் என்று கூப்பிட உங்கட்கு வெட்கமாக இல்லையா? நீங்கள் வெட்கப்படாவிட்டாலும் உங்களைச் சிற்றப்பா என்று சொல்ல எனக்கு வெட்கமாக இருக்கிறது. விபீஷணரே! இராச்சியத்திற்குத்தானே ஆசைப்பட்டீர். எனது தந்தையாரின் வீரரத்தம் இலங்கை மக்களின் நரம்புகளில் இன்னமும் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. முடியுமானால் அவர்களை ஆட்சிசெய்து பாரும்’ என்று கெக்கட்டமிட்டுச் சிரித்தான் இந்திரசித்தன்.

‘மகனே! என்னைச் சித்திரவதை செய்யாதே! உன் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். என்னை மன்னித்துவிடு’ என்று பிரக்ஞையற்று வீழ்ந்தான் விபீஷணன்.

மறுபடியும் உணர்வுபெற்று எழுந்த விபீஷணன் “அண்ணா! நான் இராச்சியத்திற்காக உங்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. நீங்கள் அப்படி நினைத்தால் நான் இன்றைக்கே இராச்சியத்தைக் கைவிட்டுவிடுகிறேன்” என்று முனகினான்.

“துரோகி! சாகசமா பண்ணுகிறாய்? உன் தங்கைக்கு மூக்கை அரிந்து மானபங்கம் பண்ணியவனை நண்பனாக ஏற்றுக்கொண்டல்லவா என்னைக் காட்டிக்கொடுத்தாய்? ஒரு தங்கைக்காக, இந்தத் தேசமும் வீரப்போர் புரிந்த மானத்தை நிலைநாட்டியபோது, உன் செய்கை எல்லாருக்குமே தீராத அவமானத்தைக் கொண்டுவந்துவிட்டது. போரிற் தோற்றதற்காக அல்ல; உன்னால் நம் குலத்திற்கு ஏற்பட்ட பழிக்காகத்தான் நான் மனம்வருந்துகிறேன்.”

எதற்குமே நிலைகலங்காத அண்ணன் இராவணனின் பெருமூச்சு விபீஷணனின் குறுகுறுக்கும் நெஞ்சத்தைச் சுட்டுப் பொசுக்கியது. அந்த வேதனைத் தீயின் வெக்கையைப் பொறுக்கமாட்டாதவனாய் விபீஷணன் ஓடினான். எங்கேயென்று தெரியாமல், ஏன் என்று விளங்காமல் ஓடினான்.

ஓட்ட ஓட்டமாக ஓடி, நகர்ப்புறத்தைக் கடந்து ஆற்றங்கரைக்கு வந்துவிட்டான். ஆற்றங்கரைக்கு அப்பால் சீதை சிறையிருந்த அசோகவனம் இருந்தது. எரியுண்ணாமல் பசுமையோடிருந்த அவ்வனத்தைக் கண்டதும் மறுபடியும் ‘அறம் என்றைக்குமே வெல்லும் அதற்கு நான் ஒரு கருவி’ என்ற எண்ணம் அவன் மனத்திற் தலைதூக்கியது!

“நீ இல்லாமல் அறம் வென்றிருக்க முடியாதா?” கும்பகர்ணன் இப்போதும் அதைத்தான் மறுபடியும் கேட்கிறான். பதில் சொல்ல யாரால் முடியும்?

இராமனே, இராச்சியத்தை மனத்திற் கொண்டுதான் நட்புக் கொண்டேன் என்று எண்ணுகையில், அறம் வெல்ல நான் ஒரு கருவி என்பதை உலகம் நம்புமா?

அதை நம்பாதபோது நான் என்றைக்குமே எல்லாருக்குமே துரோகியேதானா?

“இல்லை. நான் துரோகியாக மாட்டேன். மானத்தோடு வாழ்ந்த ஒரு வீரபரம்பரைக்கு நான் இழுக்காக இருக்கமாட்டேன். இந்த இராச்சியத்தைக் கையேற்றதால் அல்லவா என்னைத் துரோகி என்று எல்லாருமே திட்டுகிறார்கள். எனக்கு இந்த இராச்சியமே வேண்டாம்!

விபீஷணன் தலையைக் கல்லில் முட்டிக்கொண்டு அழுதான்.

இராச்சியம் வேண்டாம் என்றால் மட்டும் இழுக்கு அகன்றுவிடுமா?

தலையை முட்டிக்கொண்ட விபீஷணன் வெறுத்துப்போய் முன்னால் ஓடிக்கொண்டிருக்கும் மண்டோதரி ஆற்றைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கு என்ன தோன்றிற்றோ? ‘புனித கங்கையே! என் பாபங்களைக் கழுவிக்கொள். என்னால் என் குலத்துக்கு ஏற்பட்ட மாசைக் கழுவிக் கொள்வதற்காக உன்னைச் சரணடைகிறேன். என்னை ஏற்றுக்கொள் தாயே!

விபீஷணன் கங்கையில் வீழ்ந்து விட்டான். வீராதி வீரர்களின் அஸ்தியை ஏற்றுப் புனிதப்படுத்திய சீதாகங்கை என்ற மண்டோதரி ஆறு விபீஷணனின் களங்கத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நிர்விசாரமாக ஓடிக்கொண்டிருந்தது. வேதனைத்தீ, குற்றமுள்ள நெஞ்சத்தைச் சுட்டுப் பொசுக்கித் தூய்மையாக்க முடியாததால் தன்னைத்தானே நீரினில் ஆழ்த்திக் கொண்ட விபீஷணன் அதன்பிறகு ஆழ்வாராகி விட்டான்போலும்!

இங்கே வெட்டவும்

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

**ஈழநாடு** வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்

………………………………
கையொப்பம்.

பெயர்: ………………………………

விலாசம்: ………………………………

இங்கே வெட்டவும்

அருள்வழி

**சமீபத்தில் இலங்கைவந்து திரும்பிய குன்றக்குடி அடிகளார் திருக்கோணமலையில் ஆற்றிய விரிவுரை ஒன்றின் சுருக்கம் இது.**

## ஞானப் பசியின் வேட்கை
# உயிரே இறைவனுகும் தத்துவம்

சிறந்த விஞ்ஞானி என்றுமே கடவுள் நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்லமாட்டான். ஐன்ஸ்டீன் போன்ற பெரும் விஞ்ஞானிகளே தமக்கு அப்பாற்பட்ட ஆற்றலுண்டு என்று ஒப்புக் கொள்ளுகின்ருரெனில் மற்றவர் எம்மாத்திரம். எமது சமயக் கருத்துக்களைப் படியாதவர்களுக்கும் உணர்த்தும் பொறுப்பு எம்முடையது. அரசியற் சட்டம் செயலைத் தண்டிக்கும் ஆனல் செயலுக்கு ஆதாரமான நினைவைத் தண்டிக்காது. சட்டங்கள் செல்லுபடியாகாதபோது திருத்தங்களைப் புகுத்தி உயிர் ஊட்ட எத்தனிக்கின்றனர். பாரதியின் முற்காலக் கவிதைகளைப் படித்துவிட்டுப் பலர் அவரைப் புரட்சிக் கவிஞன் என்று கூறுகின்றனர். ஆனல் அவரது பிற்காலக் கவிதைகளைக் கற்ருல் அவர் ஓர் பக்திக் கவிஞன் என்று கூறுவர். பாரதியார் ஓரிடத்தில் " நேராக மானிடர் பிறரைக் கொல்ல நினையாது வாழ்ந்திட்டால் " எனப் பாடுகின்ருர். நாயனர் " சிந்தனை நின்தனக்காக்கி " எனக் கூறுகின்ருர். எனவே சமயம் சிந்தனையுடன், நினைவுடன் தொடர்புடையது. தீயவை நினைத்தலே பாவமென்றுவிட்டால், நினைவு எழாது. நினைவு எழாதாயின் செயல் நிகழாது. மனிதன் வாழ்வைச் சமயம் பண்படுத்தும். நல்லாற்றுப் பாதையிற் செலுத்தும். அச்சக்தி சமயத்துக்குண்டு. மனிதர் தம் உள்ளங்களை உழுது பண்படுத்திய, தூய்மைப்படுத்திய நாயன்மார்கள், தம்மை இழித்துப் பாடியதெல்லாம் தமது நிலையைக் குறிப்பிட்டன்று. பிறரது நிலையினைக் கண்டு மனமிரங்கி அவர்களைத் திருத்தும் நோக்குடன் தம்மை இகழ்வதுபோல் பாடினர்.

### அறிவு தேவையானது

அறிவு சமயத்திற்குத் தேவையானது; அது இன்றியமையாததன்று. அறிவு வளர்ந்துகொண்டேயிருக்கின்றது. அறிவு வேறு, அனுபவம் வேறு. ஒரு செடியினை ஓர் விவசாயத்துறை அறிஞன் நோக்கினல் அவன் அச் செடி வளமாயிருப்பதற்கு உரிய மண்ணைத்தான் நோக்குவான். ஒரு விஞ்ஞானி அதனை நோக்கின் செடியின் இலை ஏன் பச்சையாய் இருக்கின்றது? பூ எதற்காகச் சிவப்பாயிருக்கின்றது? பூவில் எத்தனை இதழ்கள் உண்டு? என்றெல்லாம் ஆராய்வான். கவிஞன் அதனைக் காணின் ஒப்புவமைக்காகநோக்குவான். மெய்ஞ்ஞானியோ இச்செடிக்கு உயிரானது எது என்று நோக்குவான். ஒரே பொருளை ஒவ்வொருவரும் வெவ்வேறு கண்ணேட்டத்துடன் நோக்குவார்கள். மெய்ஞ்ஞானியோ இயக்கத்திற்கு ஆதாரமான இயக்கத்தை ஆராய்ந்துவிட்டான்.

மனிதன் பதின்மூன்ருவது வயதினை அடையும்வரை நாப் பசியினல் தடுமாறுகின்ருன். பின்பு உலகியற் பசி ஏற்படுகின்றது. அதன்பின்னர் ஆளும் பசியால் அலைகின்ருன். இறுதியாக முதிய நிலையினை அடைந்ததன் பின்னர் தன்னுசையாற் பாதிக்கப்படுகின்ருன். இத்தகைய மனிதனின் அறிவு தேசம், சூழல். காலம், தரம் ஆகியவைகளுக்கு ஏற்ப அமையும். ஊருக்கு ஒரு புதியவர் வந்து விட்டால் அவர் ஒவ்வொரு வழியினையும் ஆராய்வதில் முனையமாட்டார். ஆனல் அரசினரால், அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிப் பாதையில் நடந்து செல்வார். அப்படி நடக்காது நேரத்தை இவ்வழிகளிற் கழிப்பது முட்டாள் தனம். அரசினர் அங்கீகாரம் பெற்ற வழிகாட்டி போன்றது நால்வர் நமக்கு அளித்த தேவார, திருவாசகங்கள். அவை நாயன்மார் நன்கு ஆராய்ந்து நமக்கு நல்கியவை. உணவுக்கு உப்புப்போன்றது திருவருளுக்கு அறிவு. உப்பு மிகின் ஆபத்தை விளைக்கும். அதுபோல் அறிவால் திருவருளினை விமர்சிக்க முடியாது. தோழியைநோக்கி ஓடும் தோழனைப் போன்று, எசமானனை நோக்கி ஓடும் சேவகனைப் போன்று, தாயை நோக்கிப் பாய்ந்தோடும் சேயைப்போல் ஞானப் பசியுடன் இறைவனே அடைக்கலமெனும் எண்ணத்துடன் அவனை இறைஞ்சுதல் வேண்டும்.

### விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியும்

விஞ்ஞானி உலகியலை ஆராய்கின்ருன். மெய்ஞ்ஞானி உலகியலுக்கு அடிப்படையாக உள்ளதை ஆராய்கின்ருன். இருவருக்கும் பெரிதும், நெடிதும் வித்தியாசமில்லை. ஒன்று அறிவின் முதிர்ச்சி;மற்றையது அனுபவத்தின் முதிர்ச்சி. விஞ்ஞானம் ரசாயனக் கூட்டுறவின் அமைப்பை ஆராய்கிறது. மெய்ஞானம் அதற்கு மூலகாரணமாயிருப்பதை ஆராய்கின்றது. உலகப் பௌதிகப் பொருள்களை விஞ்ஞானம் ஆராய்கின்றது. அவன் அணுவே ஆராய்ச்சியின் முடிவு எனக்கூறுகின்ருன். மாணிக்கவாசகரோ அணுவுக்கணுவானதை, உயிர்க்குயிரானதை ஆராய்ந்துவிட்டார், என்பதை "சென்று சென்று, தேய்ந்து, தேய்ந்து அணுவான சிவனே " எனும் அடி விளக்குகின்றது. மனிதனை ஆண்டவன் படைத்தானு? ஆண்டவன் மனிதனுற் படைக்கப் பட்டானு? எனும் கேள்விகளுக்குச் சைவ சித்தாந்தத்தில் இடமில்லை. காரணம் துயர்கள் இறைவனுல் படைக்கப்பட்டவையல்ல என அது இயம்புகின்றது. அவர் தம் வினைக்கேற்ப, முயற்சிக்கேற்பப் பலனையடைகின்றனர். இதுபோன்ற தத்துவங்களால்தான் சைவ சித்தாந்தம் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இருக்கின்றது.

### சேவை

சாதியால், இனத்தால், சமயத்தால் அது பிரியாது. ஆனல் தனித் தன்மையை, தூய்மையைப் பாதுகாக்க வேண்டியது, வேற்றுமையில் ஒற்றுமைகாண வேண்டியது. மின் வேகத்தே விரைந்து செல்லும் இவ்வுலகில் வாழும் எமது கடனும் கடமையுமாகும். தெளிவான, உண்மையான பக்தியுடன் உலகத்தை இறைவனது திருமேனியாகக் கருதிச் சேவைசெய்து வாழ வேண்டும். அத்தகைய தகைமைசால் பொறுப்பு உங்களிடம் இருக்கின்றது. அமெரிக்காவில் சர்ச்சைகளின் தொகை பெருகியே வந்து கொண்டிருக்கின்றது. சர்ச்சைகள் பெருகாவிடில் அனைவருக்கும் பைத்தியம் வந்துவிடும். இல்லையேல் தற்கொலை புரிந்து விடுவர். இல்லாதவனுக்கு வேண்டியது கிடைத்தாற் திருப்தி. திருப்தி பெற்ற பின்னர் அமுக்கம் ஒன்று ஏற்படுவது இயற்கை. அத்தகைய அமுக்கத்திற்கு கூட்டுவழிபாடு அவசியம். அது பெரும் ஓய்வு. அழுக்கு வேட்டியினை உவர் மண்ணுடன் கலந்து துவைக்கின்ருேம். தூய்மையடைந்ததும் உவர் மண்ணை அது பிரித்து விடுவது போன்று பொருள், பொன், போகத்தை அனுபவிப்பதையும் பிரித்து விடல் வேண்டும்.

### இன்ப துன்பம்

ஆணவச் செருக்கால் கெட்ட எண்ணம், தீய செயல் எனும் நோய்வாய்ப்படுகின்ருேம். அப்போது உயிர் நோய் தீர்க்கும் வைத்தியநாதன் இன்பம் துன்பம் ஆகிய மருந்துகளைக் கொடுத்து நோய் தீர்ப்பான்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| கே. | சூ. பு. | | வெ. செ. |
|---|---|---|---|
| | இவ்வாரக் | | |
| | கிரகநிலை | | |
| சனி | வியா | | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(16-5-59—22-5-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) கிழமையின் முடிவில் தொழில் விருத்தியுண்டாகும். பிள்ளைகளால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நாற்கால் விலங்குகளின் தொல்லைகளுக்கு இடமுண்டு. அரச சேவைகளில் சில மாற்றங்கள் ஏற்படும்.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) எக்கருமத்திலும் மனமானது ஒருவழியில் செல்லாதிருக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டங்களால் மனக்கவலையுண்டாகும். வார இறுதியில் தேக சுகம் சிறிது குறைவடையும். பிரயாணத்திற் சில கஷ்டங்கள் தோன்றி மறையும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3-ம் பாதம்) பெண்களின் உறவால் சில தொல்லைகள் நீங்கும். அனேக நாட்களாக மனதிற் குடி கொண்டிருந்த எண்ணம் இவ்வாரத்தில் நிறைவேறும். நண்பர்களுடன் விபரீத விளக்கங்கள் உண்டாகும். குடும்பத்தில் மனக்கவலை நிலவும். எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) இனபந்துக்களின் கொண்டாட்டங்கள் இவ்வாரம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வினல் பெருமக்களின் நட்பு அதிகரிக்கும் வியாபாரத் துறையில் அதிக வருமானமுண்டு. வாகனங்களினுல் விருத்திகள் ஏற்படும். தடைபட்டிருந்த சில கருமங்சள் சடுதியாய் நிறைவேறும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) இவ்வாரத்தில் பல முக்கிய கருமங்களில் தலையிடவேண்டி நேரிடும். பிரயாசத்திற் கேற்ற வருமானம் கிடைப்பது அரிதாகும். புதுச் சிநேகித விருத்திகள் வார இறுதியில் உண்டாகும். பெண்களினுல் சிலபல தொல்லைகள் விளையும். பந்துக்களைப் பிரிய வேண்டி நேரிடும். குடும்ப மகிழ்ச்சி அதிகமுண்டு.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1-ம், 2-ம் பாதம்) இவ் வாரத்தில் கஷ்டங்கள் மேலும் தோன்றி மறையும். பூமியால் வருமானம் ஏற்படும். தொழில் முறைகளில் சில கஷ்டங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் நன்மையான கருமங்கள் நிறைவேறும்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி, விசாகம், 1, 2, 3-ம் பாதம்) வார முற்பகுதியில் அன்னியர் உதவிப்பேறு உண்டாகும். அரச உதவிகளால் நினைத்த கருமங்கள் கைகூடும். திருடர்கள் தொல்லை அதிகரிக்கும். தொழில் மாற்றங்கள் உண்டாகும்.வீண்பழிச் சொற்கள் கேட்க வேண்டி நேரிடும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை) சமயக் கோட்பாடுகளில் வெறுப்பு அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின்பேரில் நிறைவேறும். கொடுக்கல் வாங்கல்மூலம் பகைமை அதிகரிக்கும். நடந்த கருமங்களினுல் வியாச்சியத் தொல்லைகள் ஏற்படக்கூடும். பிரயாணந்தில் சில கஷ்டங்கள் உண்டாகி நீங்கும்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) வீட்டில் மங்களகரமான நிகழ்ச்சிகள்ஏற்படலாம்.பெரியோர்மதிப்புஅதிகரிக்கும்.புத்திரர்களால் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களால் நன்மை வந்துசேரும். வார இறுதியில் பணச்செலவு அதிகரிக்கும்.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) சிநேகிதர் வழியால் உதவிப்பேறுகள் கிடைக்கும். இடமாற்றங்கள் ஏற்படக்கூடும். பெண்களின் உறவுகளால் சில தொல்லைகள் நீங்கப்பெறும். தொழிற் பேறுகள் உண்டாம்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதம்) வியாபாரத் துறைகளில் அதிக பிரயாசைகள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் பணவருவாய் அதிகரிக்கும். வாகனங்களினுல் கஷ்டங்கள் உண்டாகும். வியாபாரக் குறைவும், இனப் பகையும் அதிகரிக்கும்.அரச சேவைகளில் கஷ்டங்கள் தோன்றும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) அன்னியர் நட்பு அதிகரிக்கும். சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் தோன்றி மறையும். இகழ்ந்து பேசுபவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நண்பர்களும் உறவினரும் அன்புடன் உதவிபுரிவர். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. உத்தியோக மாற்றம் ஏற்படலாம். வஞ்சக நெஞ்சர் தீமைகள் விளைவிக்க முயலுவர். பணத்துறையில் சில சிக்கல்கள் ஏற்படக் கூடும்.


உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் வேலைகட்கும் உகந்த இடம்.




**சுந்தரம்ஸ் பற்றறி சேவிஸ்**

402 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சினிமா உலகம்

# தாயின் அன்பு

ஒரு தாய் தன் மகனிடத்தில் வைத்துள்ள அன்பை அடிப்படையாகக்கொண்ட அழகான திரைச்சித்திரம் இது. இப் படத்தை ஏ. கே. வேலன் டைரக்ஷன் செய்திருக்கிறார். 'பெரிய கோயில்' என்ற பெயரை முதன் முதலிற் கொண்டு விளங்கிய இப் படம், பின் 'தாயின் அன்பு' என்ற மாற்றுப் பெயரை ஏற்றுக் கொண்டாலும், படம் 'பெரிய கோயில்' ஆகவே விளங்குகின்றது.

படம் ஆரம்பமாகும் முறையே இரசிகர்களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கச்செய்துவிடுகின்றது. வானை முட்டும் கோயில் கோபுரமும் நாதஸ்வர இசையும் நெஞ்சை அள்ளுகின்றது. கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரையும் பாட்டுடன் அறிமுகப் படுத்தியது நன்றாகவிருந்தது.

ஒரு அன்பு நிறைந்த குடும்பம், பெண்ணாசை பிடித்த மைனரால், அல்லல்களுக்கு ஆளாக்கப்படுகிறது. அக் குடும்பத்துக்குப் பல இன்னல்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சேருகின்றன. ஆனால், தாயின் அன்பு இந்த இன்னல்களை எல்லாம்போக்கி இன்பத்தைத் தருகிறது.

தாயாக நடிக்கும் கண்ணாம்பா தமது பாகத்தைத் திறமையாகச் செய்திருக்கிறார். படத்தின் கதாநாயகனாக பிரேம் நஸீர் நடித்துள்ளார். அவருடைய மனைவியாகத் தோன்றியுள்ள எம். என். ராஜம் கிராமிய சிறப்புடன் நடித்திருக்கிறார். மைனர் மோகனசுந்தரம் ராஜத்தின் தங்கையை மணப்பதற்காக வீடுவந்து வீராப்புப் பேசுகையில், அவனுக்கு நல்ல பதில் கொடுத்தனுப்புகிறார் ராஜம்! சிற்சில இடங்களில் அவரது நடிப்பில் உயிர்த் துடிப்பு இழையோடுகின்றது.

மைனர் மோகனசுந்தரமாக நடிப்பவர் நடராஜன். வழக்கமாகவே அவர் வில்லன் பாகத்தில் நடிக்கும்பொழுது, சற்று மிதமிஞ்சிய சிரிப்பும், தலையசைவும் அவரிடத்தில் தோன்றும். இப் படத்திலும் அவை இருக்கத்தான் செய்கின்றன. கிழவன் பாகத்தில் அவர் மிக நன்றாக நடித்திருக்கிறார் என்றே கூற வேண்டும்.

செந்தமிழ்பேசும் இலக்கணப் புலவராக, நகைச்சுவை ததும்ப நடித்திருக்கிறார் வி. கே. ராமசாமி. அவர் அடிக்கடி தன் மனைவியை 'அடிசிற்கினியாளே' என அழைக்கும்போதெல்லாம் எம்மை அறியாமலே சிரிப்பு உண்டாகிவிடுகிறது.

நம்பமுடியாத சம்பவங்களும், தொடர்பில்லாத முரண்பட்ட காட்சிகளும் இருந்தபோதிலும் அவை கதையின் போக்கைப் பாதிக்கவில்லை.

சாயி—சுப்புலட்சுமியின் நடனங்களுமுண்டு. அவர்கள் திறமையுடன் நடனம் ஆடியிருக்கின்றனர்.

இப் படத்தில் பாடல்கள் அதிகமாயினும் ஒரு சிலவே நல்லவை. 'கண்ணே கமலப் பூ; காதிரெண்டும் வெள்ளிப் பூ; செண்பகப் பூ' என்னும் பாட்டு கண்ணாம்பா பேரனுக்குப்பாடும்பாட்டு. உள்ளத்தைத்தொடும் இனிமையானபாட்டு.

தாயின் அன்பு பெரியகோவில் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

—மின்மினி

# சென்னை சினிமா ரசிகர்கள் நடாத்திய தேர்வு

1958ஆம் ஆண்டின் சிறந்த தமிழ்ப்படமாக வீனஸ் பிக்ஸர்ஸாரின் 'உத்தம புத்திரனை'ச் சென்னை சினிமாரசிகர்கள் சங்கம் தேர்ந்துள்ளது. 'அன்னையின் ஆணை'யில் சிறப்பாக நடித்ததற்காக சிவாஜிகணேசனை 1958ஆம் ஆண்டின் சிறந்த நடிகராகவும், சாவித்திரியைச் சிறந்த நடிகையாகவும் தெரிவு செய்துள்ளனர். அவர்களுடைய மற்றைய தேர்வுகள் பின்வருமாறு: சிறந்த தமிழ்ப் படத்துணைநடிகை—ஜி. வரலட்சுமி; சிறந்த தமிழ்ப்பட நகைச்சுவை நடிகர்—தங்கவேலு; சிறந்த தமிழ்ப்பட கதாசிரியர்—ஏ. கே. வேலன் (தை பிறந்தால் வழி பிறக்கும்); சிறந்த ஒளிப்பதிவாளர்—ஜி. கே. ராமு (நாடோடி மன்னன்).

# சினிமாப் படங்களுக்குப் பரிசளிப்பு

ஏப்ரல் 28ஆம் திகதி புது டில்லியில் சிறந்த இந்தியச் சினிமாப் படங்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் பரிசில்களை வழங்கினார். பிரதமர் நேருவும் பரிசளிப்பு விழாவுக்குச் சமுகந்தந்திருந்தார்.

ஜனாதிபதியின் தங்கப் பதக்கத்தை வங்காளிப்படமாகிய "சாகர் சாங்கமே" என்னும் படம் பெற்றுள்ளது. "மதுமதி" (இந்தி), "பள்ளிக்கூட வாத்தியார்" (கன்னடம்) இவை இரண்டும் இன்னுமோர் தெலுங்குப் படமும் வெள்ளிப் பதக்கங்கள் பெற்றன. "அன்னையின் ஆணை" என்னும் தமிழ்ப் படம் விசேஷத் திறமைப் பத்திரம் பெற்றது.

பரிசுபெற்றோரைப் பாராட்டிப் பேசும்பொழுது, சினிமாத் துறை பொறுப்புவாய்ந்த தொன்றென்றும், நல்லொழுக்கத்துடன் வர்த்தகத்துறையையும் வளர்ச்சியடையச்செய்தல் வேண்டுமென்றும் ராஜேந்திர பிரஸாத் கூறினார்.

விழாவின் முடிவில், ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பெற்ற இரு படங்கள் திரையிடப்பட்டன.

# ஞானப் பசியின் வேட்கை

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனிப்பு என்று மருந்தினை அளவு மீறி உட்கொள்ளவுமாகாது. கைப்பு என்று ஒதுக்கவும் முடியாது. ஆகவே, இன்பத்தை அளவு மீறி அனுபவித்தலுமாகாது. துன்பம் வருங்கால் துயரடையாது, இரண்டினையும் சகித்தல் வேண்டும். நாம் சோற்றினை நாடுவது சோறுண்ண. சோற்றினை நாடுவனே சோறாகி விட்டால் என்ன கதி? அப்படியானது தான் உயிரே இறைவனாகுமெனும் தத்துவமும். ஞானப்பசியெழுந்து வேட்கை கொண்டு இறைவனை நாடுவது, இறைவனாகவன்று; பேரின்பத்தை திருவருளின்பத்தை ருசிக்கவே. காவிரியிற் சேர்ந்த குட்டைகூடக் காவிரி நதியாவது போல், பொய்யினைப் பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் பாவத்திலெழுதிய புலையனுயினும் இறைவனை உண்மையான கனிவான உள்ளத்துடன் வணங்கில் அருள் கிட்டும். திருவருள் உடனே கிட்டவில்லை எனக் கவலைப்படலாகாது. வழிபாட்டைக் கைவிடாது நடத்தல் வேண்டும்.

## அறிவைப் பெருக்குங்கள்
### விடைகள்

1. திரு. வியூ ஷா-ஷி.
2. (i) எ. எல். பெரேரா. (ii) றோயல் கல்லூரி.
3. இராணி அப்புக்காத்து எச். எச். பஸநாயக்க.
4. திரு.ஜயவீரகுருப்பு எம்.பி.
5. சேர் சிறில் டி. சொய்சா.
6. (i) சீனம். (ii) 58,30,00,000


# சென்ட்ரல் - ஓடியன் - ராணி

(கொழும்பு) (மவுண்ட் லவினியா) (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-00, 9-30 மணி. சனி, ஞாயிறு பிற்பகல் 2-00 மணி. ஞாயிறு காலை 10-00 மணி

# லிபேர்ட்டி - ஜோதி

(பதுளை) (திருகோணமலை)

தினசரி மாலை 6-00, 9-30 மணி. சனி, ஞாயிறு பிற்பகல் 2-30 மணி.

தினசரி மாலை 6-00, 9-30மணி. ஞாயிறு பிற்பகல் 2-00 மணி.

## பிரிவுண்டு நிற்கும் சமூகங்களுக்கும், குடும்பங்களுக்கும் அறிவுரை கூறும் அருமையான சித்திரம்!

### அனைவரும் பார்க்க வேண்டிய படம்!

எஸ். எஸ். ராஜேந்திரன்
பிரேம் நஸீர்
டி. பாலசுப்பிரமணியம்
வி. கே. ராமசாமி
எஸ். வி. சுப்பையா




பி. சரோஜாதேவி
கிரிஜா
சி. கே. சரஸ்வதி

கொழும்பிலுள்ள சென்ற் பீற்றேர்ஸ் கல்லூரி விளையாட்டரங்கத்தில் 16-5-59 சனிக்கிழமை இலங்கையின் இவ்வருடச் சிறந்த கிரிக்கெற் விளையாட்டுக்காரரின் பரிசளிப்பு வைபவம் நடைபெறும். இலங்கையிலுள்ள சிறந்த கிரிக்கெற் விளையாட்டு வீரரைத் தேர்ந்தெடுக்கும் இப்போட்டி 'ரைம்ஸ் ஒப் சிலோன்' எனும் ஆங்கிலத் தினசரியினுல் நடாத்தப்பட்டது. முக்கியமான ஒரு பரிசுக்கு ஒரு அழகான வெற்றிக் கிண்ணத்தை அளித்துள்ள திரு. டொனவன் அன்ட்ரீ பரிசுகளை வழங்குவார். பரிசளிப்பு விழா பிற்பகல் ஆறு மணியளவில் நடைபெறும்.

அன்றைய பரிசளிப்பு விழாவிற்கு முன்னதாக ஒரு கவர்ச்சிகரமான கிரிக்கெற் விளையாட்டுப் போட்டி நடைபெறும். இப்போட்டி யாழ்ப்பாணம் பள்ளிக்கூடங்கள் சங்கக்கோஷ்டிக்கும், மற்றைய பொதுப் பள்ளிக்கூடங்கள் சங்கக்கோஷ்டிக்கும் இடையே நடைபெறும். இரண்டு கோஷ்டிகளும் தங்கள் முழுப்பலத்துடனும் சனிக்கிழமையன்று சென்ற் பீற்றேர்ஸ் மைதானத்தில் தோன்றுவர். இவர்களினது போட்டி ஒரு ருசிகரமான விளையாட்டாகவே அமையுமென எல்லோராலும் எதிர் பார்க்கப்படுகிறது.

*விளையாட்டுப் பகுதி*

# கொழும்பில் யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களின் கிறிக்கெற் விளையாட்டு வீரர்

இந்த விளையாட்டை கயிற்றுப்பாய் 'பிச்' (Pitch)சில் விளையாடத் தீர்மானித்துள்ளனர். இது இரு விதத்தில் நன்மை பயக்கும் தீர்மானமாகும். இப்பொழுது மழைகாலமானதால், கயிற்றுப்பாய் 'பிச்' சிறந்ததாகும். இரண்டாவதாக, யாழ்ப்பாணம் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர் இவ்விதமான 'பிச்' சிலேயே விளையாடிப் பழக்கம். ஆனுல், மற்றப் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த வீரரோ இரண்டு விதமான 'பிச்' சுகளிலும் விளையாடியிருக்கின்றனர்.

விளையாட்டு வீரர்களின் பெயர்கள் பின்வருமாறு:

**பொதுப்பள்ளிக்கூடங்கள்கோஷ்டி:**

ஈ. எல். பெரேரா (தலைவர் (றேயல்). வை. அமரதாஸா (ஆனந்தா). லையனெல் பெர்ணுண்டோ (சென்ற்பெனடிக்ற்ஸ்) எல். ஆர். குணதிலக்கா (வெஸ்லி), எம். எல். ஐதுறாஸ் (சென்ற் தொமஸ்). சி. ஜோசெப் (சென்ற் அநதோனிஸ்). எஸ். மென்டிஸ் (பிரின்ஸ்ஒப்வேல்ஸ்). ஏ. பெரேரா (சென்ற் பீற்றேர்ஸ்). பி. பெரேரா (சென்ற் ஜோசப்ஸ்). எஸ். ஸி. சமரசிங்கே (றேயல்). எஸ். சில்வா (நாலந்தா).

* * *

யாழ்ப்பாணம் விளையாட்டு வீரரில் பதினைந்து பேர்களைத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்களும், கல்லூரிகளின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வி. நடராஜா (ஹார்ற்லி) ரி. சத்தியமூர்த்தி (யாழ்ப்பாணம் கல்லூரி) எம். சீவரெத்தினம் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) என். சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ரி. செல்வராஜா (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) எஸ். சோதிராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி) கே. பத்மசிங்கம் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஜே. கனகநாயகம் (பரமேஸ்வராக் கல்லூரி) ஏ. கருமியராஜன் (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி) கே. பரமலிங்கம் (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி) எம். ராஜரத்னம் (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி) எஸ். சண்முகராஜா (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி) வி. சிவானந்தன் (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி) சி. பரம்சோதி (சென்ற் பத்திரிசியார் கல்லூரி) சி. ராமச்சந்திரன் (யூனியன் கல்லூரி)

சோவியத் யூனியன் இவ்வருட **விம்பில்டன் டென்னிஸ்** போட்டியிற் பங்குபற்றுமென மொஸ்கோ விளையாட்டுப் பகுதி ஆசான் ஒருவர் அறிவித்துள்ளார்.

* * *

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று கட்டுக்குருண்டாவில் **இலங்கை மோட்டார் சைக்கிள் கிளப்** நடாத்திய ஓட்டப் போட்டி மிக நன்ருக நடைபெற்றது. அங்கு அப்போட்டியைக் காணவந்திருந்த சனக்கூட்டம் அன்றைய நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர். அப்போட்டியிற் பங்குபற்றிய அனைவரும் நன்ருகவே தம் சைக்கிள்களை ஓட்டினுர்கள். அவர்களில் இரு இளைஞர்கள், ரென்னி டி கிரெற்சர், குமார் டி சில்வா என்பவர்கள் தங்கள் சைக்கிள்களை அதி வேகத்துடன் செலுத்தி, அங்கிருந்தோரின் பாராட்டலைப் பெற்றனர்.

* *

அடுத்துவரும் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு, ஒவ்வொரு விளையாட்டுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியையே பங்குபற்றும் நாடுகள் அனுப்பலாம் என உரோமாபுரியிற் கூடிய சர்வதேச விளையாட்டுச் சங்கத்தின் குழு தீர்மானித்துள்ளது. ஆனுல் ஒரு குறிக்கப்பட்ட தரத்தைப் பெற்றுள்ளவர்களானுல் இன்னும் இரு பிரதிநிதிகளை ஒவ்வொரு நாடும் அனுப்பலாம்.

**கிரிக்கெற்**

இங்கிலாந்திற்கு விஜயம் செய்திருக்கும் இந்திய கிரிக்கெற் கோஷ்டியினர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை ஒரு ஆட்டத்தினுலும், 53 ஓட்டங்களினுலும் தோற்கடித்து, தமது விஜயத்தின் முதலாவது வெற்றியை ஈட்டியுள்ளனர். இந்த விளையாட்டில் இந்திய வீரர் உம்ரிகார் 252 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காது விளையாடியிருந்தார். அவரின் சாதனை சாதாரணமானதொன்றல்ல. இங்கிலாந்திற்கு விஜயம் செய்த எந்த இந்திய வீரருமே இத்தனை ஓட்டங்கள் இதுவரை பெறவில்லை. உம்ரிகாரின் சாதனையே மற்றவர்களின் சாதனைகளிலும் பார்க்க மேலோங்கி நிற்கின்றது. இந்தியாவின் வெற்றிக்கு இவரது சாதனை பெரும் உதவியாக இருந்தது.




## உள்ளூர் ஆட்சியில் கட்சி அரசியல் விரும்பத்தக்கதல்ல

**கோப்பாய்க்** கிராம சங்கக் கூட்டமொன்று, தலதாபன உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசேப்பின் தலைமையில் நடைபெற்றது. அப்போது சபையோரால் ஏக மனதாகச் சங்கத் தலைவராய்த் தெரிவு செய்யப்பட்ட திரு. கே. இராசரத்தினம் கூறியதாவது.

பல வருடங்களாக நடைமுறையிலிருந்து வரும் இக்கிராமச் சங்கத்தின் வரலாற்றில் இன்றைய தினம் முன்னெரு போதும் நிகழாத சம்பவம் ஒன்று நடைபெற்றது. போட்டியெதுவுமில்லாமல் தலைவர் தெரிந்தெடுக்கப்பட்டார். இதைப்பற்றி நாம் மகிழ்ச்சியடைகின்ருேம். உள்ளூர் ஆட்சி சேவையில், துவேஷத்தை உண்டாக்கும் கட்சி அரசியல் மனுேபாவம், நடவடிக்கை ஆகியன நிலவாமலிருப்பது சாலச் சிறந்தது. அங்ஙனமே மக்களிடையே ஒற்றுமை, கிராம முன்னேற்றத்தில் பாரபட்சமின்றிய உழைப்பு முதலியன தோன்றும்.

### கடன் உதவி

தனது பதவியைத் துறந்த தலைவர் திரு, பி. திருஞானசம்பந்தனின் சேவைகளைப்பற்றி திரு. யோசேப் கூறியதாவது:

இவ்விடத்தில் மின்சார விநியோக வசதிகளை ஏற்படுத்தத் திரு. திருஞானசம்பந்தன் சோர்வின்றி உழைத்தது எனக்குத் தெரியும். இல்லங்களில் மின்சாரம் உபயோகமாவதுடன், தோட்ட முயற்சிகளுக்கும் பயன் படும். தலைவரும் மற்ற உறுப்பினர்களும் மின்சார விநியோகத்தின் அவசியத்தை அதிகாரிகளிடம் வற்புறுத்தினர். அதன் பெறுபேருக அரசாங்கம் இக்கிராமச்சங்கத்துக்கு இந்த விஸ்தரிப்புச் சேவையில் செலவு செய்ய ஒரு லட்சத்து எண்பதினுயிரம் (180,000) ரூபாய் கடனுக வழங்க உடன்பட்டிருக்கிறது.

திரு. திருஞான சம்பந்தன் சபையோருக்கு நன்றி தெரிவித்துப் பேசியதாவது: மின்சார விநியோகத் திட்டத்தினுல் நாம் நற் பலனடையச் செய்த பிரமுகர்களுள் கோப்பாய்ப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் அவர்களைப்பற்றி நாம் விசேடமாய்க் குறிப்பிடவேண்டும். ஏனெனில், நாங்கள் அதிகாரிகளைக் கண்டு எமது கடன் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும், எங்கள் விருப்பத்தை நிறைவேற்றவும் அவர் பேருதவி செய்தார்.

இப்போது கோப்பாய்ச் சந்தியின் அருகாமையில் சந்தை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இக் கிராமத்தவர்களின் வசதிக்காகவே இந்த நடவடிக்கை கையாளப்பட்டது. கோப்பாய் வடக்கில் உப தபாற் கந்தோரும், இருபாலையில் இன்னுமொரு சந்தையும் விரைவில் அமைக்கப்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகத் திருஞான சம்பந்தன் கூறினுர்.

குதூகலமான 6-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் பதினெரு திரைகளில்

நட்சத்திரங்கள் :

★ எம். ஜி. ராமச்சந்திரன்
★ பி. பானுமதி
★ எம். என். நம்பியார்
★ பி. எஸ். வீரப்பா
★ எம். என். ராஜம்
★ பி. சரோஜாதேவி
★ எம். ஜி. சக்கரபாணி
★ டி. கே. பாலச்சந்திரன்
★ ஜே. பி. சந்திரபாபு
★ ஜி. சகுந்தலா
★ டி. பி. முத்துலெட்சுமி



டைரக்ஷன் :
எம். ஜி. ராமச்சந்திரன்

சங்கீதம் :
எஸ். எம். சுப்பையா

வசனம் :
கண்ணதாசன்

ஸ்ருடியோ :
வாகினி & விஜயா

பின்னணி :
டி. எம். சௌந்தரராஜன்,
சீர்காழி கோவிந்தராஜன்,
ஜிக்கி, பி. லீலா, பி. சுசீலா,
டி. ராஜரத்தினம், ஜமுனாராணி.

அற்புதக்கலையின்
அழகுப் படைப்பு அனைத்தும்
நிறைந்த கருத்துக் குவியல்

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்


இப்பொழுது திரையிடப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

பிரின்ஸ் (ஹட்டன்)

நெல்சன் (திருகோணமலை)



சிவாஜி கணேசன், அஞ்சலிதேவி, எம். என். ராஜம்,
சந்திரபாபு, கே. ஏ. தங்கவேலு
நடிக்கும்

# நான் சொல்லும் ரகசியம்

நடனம்: ஹெலன்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி வெளியிடப்பெற்றது.